
கல்கி



ALKI 28-7-1957 30 நயா பைசா



பளபளப்போடு
நறுமணமோங்கும் கேசத்திற்கு...
இராஸ்மிக்
பர்ப்யூம்ட்
கோகனட்
ஹேர் ஆயில்
(கேசத்திற்கு பரிமள தேங்காயெண்ணெய்)
ரோஜா அல்லது மல்லிகை மணமூட்டியது
இலவசம்...
பெரிய சீசா ஒவ்வொன்றுடனும் நல்லதொரு
'ப்ரைட்' ரக 'அலிபேட்' சீப்பு இலவசம்
PERFUMED
COCONUT
HAIR OIL
ECH. 2-60 TM

கல்கி பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.





மலர் 16 | தமிழ்த்திரு நாடு தன்னைப் - பெற்ற | ஹேவிளம்பி
இதழ் 52 | தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார் | ஆடி 13

அமெரிக்கத் திட்டத்தின் பயன்!

நமது பிரதமர் ஜவாஹர்லால் நேரு அவர்கள் ஐரோப்பாவில் பல நாடுகளில் வெற்றிகரமாகச் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டுத் திரும்பி வந்திருக்கிறார். சென்றவிட மெல்லாம் அவருக்கு மக்கள் உற்சாகத்தோடு வரவேற்பளித்தார்கள். அவர் விஜயம் செய்த ஒவ்வொரு நாட்டிலும் மக்களின் அன்பையும் ஆர்வத்தையும் கண்டு மிகுந்த திருப்தியோடு திரும்பி வந்திருக்கிறார்.

இதற்கெல்லாம் காரணம் நமது அயல்நாட்டுக் கொள்கைதான். நாம் எந்தக் கட்சியிலும் சேராது நடு நிலைமையில் நின்று அன்பு வழியில் உலக சமாதானத்துக் காகப் பாடுபட்டு வருவதுதான்!

பாரதப் பிரதமரின் அயல் நாட்டுக் கொள்கை, - நடுநிலைமைக் கொள்கை - உலக மக்களுக்கெல்லாம் திருப்தியளித்திருக்கிறது. அதன்பயனாக, நாம் எல்லா நாடுகளின் நட்பையும் செல்வாக்கையும் பெற்றிருக்கிறோம் என்பதில் சந்தேகமில்லை.


உலகில் சமாதானம் நிலவப் பாடுபடும் நாம் ஒரு கணம் நமது செய்கையையும் யோசித்துப் பார்க்க வேண்டும்! உலக சமாதானத்துக்காகப் பாடுபடும் நாம் நமது ராணுவச் செலவைக் குறைத்துக் கொள்ளவில்லை! சென்ற வருஷத்தை விட இந்த வருஷம் நமது ராணுவச் செலவு அதிகரித்திருக்கிறது! இந்த ஆண்டு பட்ஜெட்டில் நமது வரவில் பாதிக்கு மேல் ராணுவத்துக்குச் செலவு செய்யத் திட்டமிட்டிருக்கிறோம். நமது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்குச் செலவழிக்கத் திட்டமிட்டிருந்த தொகை களிலிருந்து, ஒரு பெரும் பகுதியை ராணுவத்துக்குச் செலவு செய்யவிருக்கிறோம். இத் தகைய நிலைக்குக் காரணம் அமெரிக்காதான் என்று நாம் சொல்லவேண்டி யிருக்கிறது!

அமெரிக்கா நம்மோடு ஒருநாளும் சண்டைக்கு வரப்போவதில்லை. உலகிலேயே நாம் முதன் முதலில் பெற்ற நல்ல நேச நாடு அமெரிக்காதான். அமெரிக்கா நமது சுதந்திரப் போராட்டத்தில் காட்டியது போன்ற அனுதாபம் உலகில் வேறு எந்த நாடும் காட்டியதில்லை. அமெரிக்கா நாம் சுதந்திரம் பெற வேண்டும் என்று பிரிட்டனுடன் வெகுவாகப் போராடி யிருக்கிறது. இப்பொழுதும் நமது பொருளாதார நிலை உயர வேண்டும் என்று விரும்புகிறது. நமது நாட்டுத் தொழில்வளம் பெருக வேண்டும் என்று நினைக்கிறது. நமது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிகரமாக நிறை வேற வேண்டும் என்று விரும்புகிறது. அதற்கு உதவவும் தயாராக இருக்கிறது!

இப்படிப்பட்ட நல்ல எண்ணத்தோடு கூடிய நாடுதான் இன்று நம்முடைய கஷ்டங்களுக்கெல்லாம் காரணமாக இருக்கிறது! ஏழை இந்திய மக்களின் பணமெல் லாம் ராணுவத்துக்குச் செலவு ஆவதற்குக் காரணம் அமெரிக்காதான்!

அமெரிக்கா, ருஷ்யாவைக் கண்டும், கம்யூனிஸத்தைக் கண்டும் நடுங்குகிறது. எங்கே ருஷ்யா ஐரோப்பிய நாடுகளை எல்லாம் ஆக்கிரமித்துக் கொண்டு விடுமோ என்றும் பயந்து சாகிறது. இந்த பயத்தின் காரணமாக ருஷ்யாவைச்சுற்றி ராணுவ தளங்கள் ஏற்படுத்தி யிருக்கிறது; வட ஐரோப்பிய நாடுகளில் நாட்டோ ஒப்பந்தம் செய்து கொண்டு அங்கெல்லாம் ராணுவ தளங்கள் ஏற்படுத்தியிருக்கிறது. ஐரோப்பாவின் தெற்குப் பகுதியில் பாக்தாத் ஒப்பந்தம் செய்து கொண்டு பாகிஸ்தான்வரை ராணுவ தளங்கள் ஏற்படுத்தியிருக்கிறது! ஸீயாட்டோ ஒப்பந்தத்தின் மூலம் பல ஆசிய நாடு களில் எல்லாம் ராணுவ தளங்கள் ஏற்படுத்தி யிருக்கிறது.

கானல் தோற்றமா?



பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு நிர்வாகத்திலும் பங்கு அளிக்கப் போவதாக நிதிமந்திரி கூறியிருக்கிறார்.

இவ்வாறு ஆசிய நாடுகளில் அணுகுண்டு ஆயுதங்களுடன் கூடிய ராணுவ தளங்கள் ஏற்படுத்துவது சமாதானத்துக்கு வழியல்ல. இது ஆசியாவைப் படு நரகமாக்கிவிடும்!

ஆசியாவிலும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் ராணுவ தளங்கள் ஏற்படுத்தி விடலாம். உலகம் முழுவதையுமே யுத்தகளமாகச் செய்து விடலாம். பிறகு அதை மாற்றிச் சமாதானத்தை நிலை நிறுத்துவது என்பது முடியாத காரியமாகி விடும். இப்படியே நடந்து கொண்டு போனால், எதிர்கால மக்களுக்குச் சொல்லி முடியாத தீங்கும் அபாயமும் விளைவிப்பதிலேயே போய் முடியும்.

ஆனால் அமெரிக்காவின் இந்த ஒப்பந்தங்கள் நேரிடையாக நம்மை எப்படிப் பாதிக்கின்றன என்பதையல்லவா பார்க்க வேண்டும். நமது அண்டை நாடான பாகிஸ்தான் பாக்தாத் ஒப்பந்தத்திலும், ஸியாட்டோ ஒப்பந்தத்திலும் பங்குபற்றி யிருக்கிறது. அதனால் பாகிஸ்தான் அமெரிக்காவின் ராணுவ உதவி பெற்றுத் தனது படை பலத்தைப் பெருக்கிக் கொண்டு விட்டது.

இதில்தான் வருகிறது நமது கஷ்டங்கள். ருஷ்யாவுக்குப் பயந்து பாகிஸ்தானுக்கு அமெரிக்கா கொடுக்கும் ராணுவ உதவி, நமது ராணுவச் செலவை அளவுக்கு மீறி உயர்த்தும்படி செய்கிறது!

பாகிஸ்தானுக்கும் நமக்கும் பல விஷயங்களில் மன வேறுபாடுகள். பாகிஸ்தான் ஓயாமல் இந்தியாவின்மீது காஷ்மீர் சம்பந்தமாகவும், மற்ற விஷயங்கள் சம்பந்தமாகவும் துவேஷப் பிரசாரம் செய்து வருகிறது. பாகிஸ்தான் ராணுவ நடவடிக்கை எடுத்துக் கொண்டு விட்டால் என்ன செய்வது என்ற பயத்தில் இந்தியா தற்காப்பு செய்து கொள்ள வேண்டியிருக்கிறது! அதனால்தான் நமது பட்ஜெட்டில் பெருந் தொகையை ராணுவத்துக்கு ஒதுக்கிவிட்டு, ஐந்தாண்டு திட்டத்துக்கு வேண்டிய பணத்துக்கு எந்த நாட்டைக் கடன் கேட்கலாம் என்று யோசனை செய்ய வேண்டியதாக இருக்கிறது!

ராணுவச் செலவு அதிகப் படுவதாலேயே அந்நிய செலாவணியிலுள்ள நமது மூலதனம் கணிசமான அளவு குறைந்து வருகிறது. அதாவது நமது ஸ்டர்லிங் கையிருப்பு குறைந்து கொண்டே போகிறது.

'ஆனால் நமக்கும் அமெரிக்கா ராணுவ உதவி கொடுக்கத் தயாராக இருக்கிறதே! அதைப் பெற்றுக் கொள்வதுதானே'' என்று கேட்கலாம். அதைப் போன்ற பைத்தியக்

காரத்தனம் வேறு இருக்க முடியாது! அது தற்கொலைக்கு ஒப்பான காரியமாகும்.

அமெரிக்காவும் பாகிஸ்தானும் சேர்ந்து பாகிஸ்தானில் ஏற்படுத்தக் கூடிய ராணுவ தளங்களுக்குப் போட்டியாக நாமும் ராணுவச் செலவு செய்துகொண்டே போனால் அதற்கு முடிவே வராது. நாட்டின் செல்வம் முழுதும் அதற்கே செலவழிந்து போகும்.

இந்த விதமான போட்டி, அதாவது ராணுவ பலத்தைப் பெருக்கும் போட்டி மேல் நாட்டு வல்லரசுகளிடையே நடைபெற்று வருகிறது. அந்தப் புலிகளைப் பார்த்து நாமும் சூடு போட்டுக் கொள்ளலாகாது.

அமெரிக்க ஜனாதிபதியும், அமெரிக்க வெளிநாட்டு மந்திரி டல்லஸூம் உலகில் கம்யூனிஸம் பரவாமல் தடுக்கச் செய்வதற்கு ஏழை ஆசிய நாடுகளுக்கு உதவி செய்யத் தீர்மானித்திருக்கிறார்கள். ஆனால் சில நாடுகளுக்கு அவர்கள் செய்து வரும் ராணுவ உதவி அதன் அண்டை நாடுகளின் பொருளாதாரத்தை நாசமாக்கி வருகிறது. இது அவர்களுடைய உத்தேசத்தை நிறைவேறாமலே செய்துவிடும்.

அமெரிக்காவின், வெளிநாட்டுக் கொள்கை, அவர்கள் விரும்பும் லட்சியத்துக்கு நேர் மாறாகத் தொழிற்படுவதைப் பாரதத் தலைவர்கள் அமெரிக்கத் தலைவர்களுக்கு மனதில் பதியும்படி எடுத்துச் சொல்ல வேண்டும். கம்யூனிஸம் பரவாமல் தடுக்க எடுத்துக் கொள்ளும் நடவடிக்கை கம்யூனிஸம் பரவுவதற்கே அநுகூலமாக இருந்து வருவதை அவர்களுக்கு எடுத்துக் காட்ட வேண்டும்.

மதுவிலக்கு ஒரு வெற்றி

சமீபகாலத்தில் பல இடங்களில் மதுவிலக்கைப் பற்றிச் சந்தேகம் தெரிவித்துப் பலர் பேசி வருகிறார்கள்.

"திட்டங்களுக்குப் பணமில்லை என்றால் மதுவிலக்கைக் கட்டிக்கொண்டு அழுவானேன்?" என்று சிலர் பேசக் கேட்கிறோம்!

மதுவிலக்கை ரத்து செய்து விட்டால் சர்க்கார் கஜானாவில் ஏராளமாகப் பணம் வந்து குவியும் என்று சொல்லுகிறார்கள்.

கள்குடியினால் பாதிக்கப் படுபவர்கள் ஏழை எளிய மக்கள். நாள் எல்லாம் உழைத்து வேலை செய்யும் உழைப்பாளி, தன் உழைப்பின்பயனை அவன் மனைவியுடனும் குழந்தைகளுடனும் அனுபவிக்க வேண்டியது நியாயம். அந்த உழைப்பாளியின் மனைவி மக்களின் உரிமையைப் பறிப்பது கள். பல லட்சக் கணக்கான தாய்மார்களும், குழந்தைகளும் கண்ணீர் வடிக்க விட்டு விட்டு, நாட்டுக்கு நலன் விளைவிக்கும் சுபிட்சத் திட்டங்கள் வகுத்தால்தான் என்ன? வகுக்கா விட்டால்தான் என்ன?

ஆனாலும் மனித இதயமின்றிப் பலர் மதுவிலக்குத் திட்டத்தைக் கைவிடும்படி சொல்லி வருகிறார்கள். இதனால் மக்களுக்கு ஒரு பயனும் ஏற்படவில்லை என்று சொல்லி வருகிறார்கள்.

நமது மந்திரி திரு கக்கன் மதுவிலக்கினால் நாட்டில் ஏற்பட்டுள்ள பயனைச் சென்றவாரம் சட்ட சபையில் வெகு தெளிவாகக் கூறியிருக்கிறார்.

"ஹரிஜன மக்களின் சுபிட்ச வாழ்வுக்காகப் பல திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. இவை எல்லாவற்றையும் விட மது விலக்கினாலேயே ஹரிஜனங்களுக்குப் பெரும் பயன் ஏற்பட்டிருக்கிறது. ஹரிஜன மக்கள் ஒவ்வொருவர் வீடும் ஒரு புது ஒளியுடன் காட்சியளிக்கிறது. இன்று ஹரிஜன் ஒவ்வொருவர் வீட்டிலும் மட்பாண்டங்கள் இருந்த இடத்தில் பித்தளைப் பாத்திரங்கள் இருக்கின்றன. இப்பொழுது பித்தளைப் பாத்திரங்கள் இருக்குமிடத்தில் வெள்ளிப் பாத்திரங்களும் தங்கப் பாத்திரங்களும் காட்சியளிக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை" என்று கூறியிருக்கிறார்.

மந்திரி திரு கக்கன் அவர்கள் ஒரு ஹரிஜன். அவர் தமது மக்களின் நிலையையுணர்ந்து பேசியிருக்கிறார். இதை விட மது விலக்கு நல்ல பயன் அளித்து வருகிறது என்பதற்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும்!

ஏமாற மாட்டார்கள்!

அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டுகளை வெடிப்பதால், உலக மக்கள் தவிர்க்க முடியாதபடி காற்றும் தண்ணீரும் விஷமாகி விடுகின்றன என்பது உலகம் அறிந்த உண்மை. சிகரெட் புகை பிடிப்பதால் புற்று நோய் உண்டாகிறது என்பது உலகப் புகழ் பெற்ற டாக்டர்கள் ஆராய்ச்சி செய்து முடிவுக்கு வந்த விஷயமாகும். இந்த இரண்டு உண்மைகளையும் எவரும் எக்காலத்திலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

யாராலும் ஆட்சேபிக்க முடியாத இந்த அப்பட்டமான உண்மைகளை மறைக்கும் மாயஜால வேலையில் இப்போது சிலர் ஈடுபடத் தொடங்கி யிருக்கிறார்கள். 'சுத்தமான' அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டுகளை மேற்கத்தி வல்லரசுகள் தயாரித்து வருவதாகச் செய்திகள் வெளியாகி யிருக்கின்றன. அதாவது அந்தக் குண்டுகளில் ஐந்து சதவிகிதமே விஷக்கலப்பு இருக்குமாம்; தொண்ணூற்றைந்து சத விகிதம் அது 'சுத்தமாக' அதாவது விஷக் கலப்பற்றதாக இருக்குமாம். மேற்படி குண்டுகள் விஷயமாக உலகம் எங்கும் ஏற்பட்டுள்ள கண்டனத்தைச் சமாளிக்க அவ்விதம் ஒரு புதிய குயுக்தியைக் கையாளத் தொடங்கி யிருக்கிறார்கள்.

அணுகுண்டு வல்லரசுகளின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி இப்போது சிகரெட் உற்பத்தி செய்யும் கம்பெனிகளும் ஒரு பிரசார யுக்தியைக் கண்டு பிடித்திருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டி ராஜாஜி அவர்கள் "சுயராஜ்யா" பத்திரிகையில் அரிய கட்டுரை ஒன்று எழுதியிருக்கிறார்கள். சிகரெட் புகை பிடிப்பதால் புற்று நோய் ஏற்படுகிறது என்ற கருத்தை வைத்திய நிபுணர்கள் மாற்றிக் கொள்வதற்காக, மேற்படி கம்பெனிகளால் இரண்டரை லட்சம் பவுன் ஒதுக்கி வைக்கப் பட்டிருக்கிறதாம்! அதன் பயனாக, கட்டுரைகளோ, அல்லது கட்டுரைப் போர்வையில் விளம்பரங்களோ பத்திரிகைகளில் பிரபலமாக இடம் பெற்று வருவதையும் ராஜாஜி அம்பலப்படுத்தி யிருக்கிறார்.

எனவே, 'சுத்தமான' ராட்சத குண்டுகளை உற்பத்தி செய்யும் முயற்சிகளைப்போல், கூடிய சீக்கிரம் கலப்பற்ற 'சுத்தமான' சிகரெட்டுகளைக் கண்டு பிடிக்கும் முயற்சியிலும் வைத்திய நிபுணர்கள் வெற்றி பெற்றதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவரலாம்!

புகை பிடிப்பவர்கள், 'சுத்தமான' சிகரெட்டுகளைக் கண்டு தங்கள் மனத்தைச் சமாதானப் படுத்திக் கொள்ளலாம். அவற்றினால் தீங்கு எதுவும் இல்லை என்று அவர்கள் ஆறுதல் அடைந்து, தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ளலாம். ஆனால், 'சுத்தமான' அணுகுண்டுகள், 'சுத்தமான' சிகரெட்டுகள் என்பவை போன்ற செப்பிடு வித்தைகளைக் கண்டு பொதுமக்கள் ஏமாந்து போய்த் தங்கள் அறிவைப் பறி கொடுத்து விடமாட்டார்கள் என்பது நிச்சயம்.

'கோவிந்தா' என்று அழைக்கும்

தம்பிப் பாப்பா அழுது கொண்டிருந்தான். அவனைச் சமாதானப்படுத்த வந்த எட்டு வயதுச் சிறுமி, "தம்பி, நீ அழாதே! அழாமலிருந்தாயானால் மிட்டாய் தருகிறேன்!" என்று மிட்டாயைக் காண்பித்தாள். தம்பி மிட்டாய்க்குக் கையை நீட்டினானே தவிர அழுகையை நிறுத்தவில்லை!

இதை அக்கா பார்த்தாள். "நீ அழுகையை நிறுத்த மாட்டாயா? அப்படியானால் உனக்கு மிட்டாய் இல்லை, போ!" என்றாள். இந்த மிரட்டலைக் கண்டு, தம்பி முன்னைவிடப் பலமாக அழத் தொடங்கினான். ஏறக்குறைய இந்த பாவத்தை நாச்சியார் திருமொழியில் காதல் ரஸத்துடன் பார்க்கிறோம்.

கண்ணன் மீது காதல் கொண்ட ஆண்டாள் அருமையாக ஒரு கிளி வளர்த்து வந்தாள். அந்த அருமைக் கிளிக்கு "கோவிந்தா! கோவிந்தா!" என்று சொல்லவும் கற்றுக் கொடுத்திருந்தாள். ஆருயிர்க் காதலனின் பெயரைக் கேட்பதில் அவளுக்கு அவ்வளவு ஆனந்தம் உண்டாகி வந்தது!

தான் காதல் கொண்ட கண்ணன் வெறும் ஏமாற்று வித்தைக்காரன் என்பதை அறிந்தாள் நாச்சியார். அவளுக்கு மனம் வெறுத்து விட்டது. கண்ணனைப் பற்றி யாராகிலும் பேசினால்கூடக் கசந்தது. தன் அருமைக் கிளி, "கோவிந்தா! கோவிந்தா!" என அழைத்தது காதில் நாராசமாக ஒலித்தது.

"'கோவிந்தா!' என்று அழைக்காதே!" என்று கடிந்து கொண்டாள். அது மீண்டும் மீண்டும் 'கோவிந்தா, கோவிந்தா' என்று அழைத்து வந்தது. அவளுக்குக் கோபம் வந்து விட்டது. "நான் சொல்வதைக் கேட்க மறுக்கிறாயா, கிளியே! அப்படியானால் உனக்குச் சாப்பாடு கிடையாது, போ! வெறும் பட்டினிதான்" என்றாள். அந்தச் சண்டித்தனம் செய்யும் கிளி என்ன செய்தது தெரியுமா? நாச்சியார் சொல்வதையே கேளுங்கள்:

" கூட்டி லிருந்துகிளி எப்போதும்
　　கோவிந்தா! கோவிந்தா! என்றழைக்கும்
ஊட்டக் கொடாது செறுப்பனாகில்
　　'உலகளந்தான்' என்று உயரக்கூவும்."

ஆம், கிளி முன்னைவிட பலத்த குரலில் 'உலகளந்தான்' என்று கூவுகிறது.

கிளியின் இந்தப் பிடிவாதம் நாச்சியாருக்கு அளவு கடந்த ஆனந்தத்தையே அளிக்கிறது. இது 'காதல்' புரியும் அற்புதம்.

பக்திச் சுவையும் காதல் சுவையும் அற்புதமாக மேலே கூறிய இவ்விரண்டு அடிகளில் தொழிற்படுகின்றன. இந்த அழகிய காட்சியைத்தான் அட்டைச் சித்திரமாக வழங்குகிறார் நமது ஓவியக் கலைஞர் மணியம்.


அகிலன் எழுதும்
பாவை விளக்கு
புதிய சமூகத் தொடர்கதை
கல்கி
ஆகஸ்ட் 18
நூற்றாண்டு சுதந்திர மலரில்
ஆரம்பமாகிறது

தமிழ்ச் சங்கத்தின் கோரிக்கை

பாஷைத் தகராறுக்கு ஒரு சுமுகமான முடிவு காண்பதற்காகப் பிரதம மந்திரியும் சமஷ்டிக் கட்சித் தலைவர்களும் இதுவரை மூன்று தடவைகள் சந்தித்துப் பேசி விட்டார்கள். இந்த மூன்று சந்திப்புகளிலும் சமரச உடன்பாடு ஏற்பட முடியவில்லையென்றாலும், அதற்காகச் சமரச முயற்சியைக் கைவிடப் பிரதம மந்திரி தயாராயில்லை. அவர்களுடைய அடுத்த சந்திப்பே கடைசிச் சந்திப்பாயிருக்கு மென்றும், சண்டையா அல்லது சமாதானமா என்பதை அந்தச் சந்திப்பு தீர்மானிப்பதாயிருக்கு மென்றும் ராஜீய வட்டாரங்கள் கருதுகின்றன.

சமரசத்தை முன்னிட்டு சமஷ்டி ஆட்சிக் கோரிக்கையைத் தற்சமயத்துக்குக் கைவிடவும் அதற்குப் பதிலாகச் சட்டம் இயற்றும் அதிகாரத்தோடு கூடிய பிராந்திய சட்ட சபைகள் ஏற்படுவதை ஒப்புக் கொள்ளவும் சமஷ்டிக் கட்சியினர் முன் வந்திருக்கிறார்கள். அவர்களுடைய யோசனையின்படி தமிழ்ப்பிரதேசங்களுக்கும் பிரத்தியேகமான சட்ட சபைகள் ஏற்பட்டு, நிதி, வெளிநாட்டுப் பாதுகாப்பு முதலான சில பொது விஷயங்கள் நீங்கலாக மற்ற விஷயங்களில் சட்டம் இயற்றும் அதிகாரம் பிராந்திய சபைகளுக்கு இருக்க வேண்டும். தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள பிராந்திய சபைகளுக்குத் தமிழில் நடவடிக்கைகளை நடத்தவும் மத்திய அரசாங்கத்துடன் தமிழில் கடிதப் போக்குவரத்து நடத்தவும் உரிமையிருப்பதோடு தமிழ்மொழியும் உத்தியோக பாஷைகளில் ஒன்றாகப் பிரகடனம் செய்யப்படவேண்டும். இதுதான் சமஷ்டி வாதிகளின் புதிய கோரிக்கை. ஆனால் பிரதம மந்திரி இந்தக் கோரிக்கையையும் ஏற்றுக் கொள்ளத் தயாராயில்லை. பிராந்திய சபைகளின் அதிகாரங்களை விஸ்தரிக்க முடியுமே தவிர, அவற்றுக்குச் சட்ட மியற்றும் அதிகாரத்தை யளித்தால் சமஷ்டி ஆட்சி முறையை ஏற்படுத்துவதாகவே யிருக்குமென்றும் பெரும்பான்மை இனங்களான சிங்களவர்கள் இதற்கு ஒரு போதும் இணங்கமாட்டார்களென்றும் பிரதம மந்திரி கூறுகிறார்.

இரண்டாவதாக, பிராந்திய சபைகள் தமிழில் சகல நடவடிக்கைகளையும் நடத்தலாமென்றும், ஆனால் உத்தியோக மொழி என்ற அந்தஸ்தைத் தமிழுக்கு அளித்தால் சிங்களவர்கள் குழப்பம் செய்வார்களென்றும் பிரதமர் கூறுகிறார். இந்த முட்டுக்கட்டையைச் சமாளித்துச் சமரச உடன்பாடு ஏற்படுவது சாத்தியமா? அல்லது ஆகஸ்டு மாதம் சமஷ்டிக் கட்சியினர் சட்ட மறுப்பை ஆரம்பித்து அதன் பயனாக நாடு முழுவதும் வகுப்புக் கலவரங்கள் ஏற்பட்டுத் தீருவது தவிர்க்க முடியாததா? என்பது அடுத்த சில தினங்களில் தெரிந்து விடும்.

பிரதம மந்திரியுடன் நடைபெறும் சமரசப் பேச்சுகள் முறிந்து சட்ட மறுப்பு இயக்கம் நடைபெற்றால், அது சமஷ்டிக் கட்சியினர் நடத்தும் போராட்டமாக மட்டுமே இருக்கு மென்பது இப்பொழுது வெளிப்படையாகத் தெரிகிறது.

*   *   *

கொழும்பில் தமிழ்க் கலை, கலாசார, மொழி வளர்ச்சிக்குப் பணியாற்றி வரும் கொழும்பு தமிழ்ச் சங்கம் புதிய நிர்வாகிகளுடன் புத்துணர்ச்சி பெற்றுத் தீவிரமாகவும் சிறப்பாகவும் சேவை செய்யத் திட்டமிட்டிருப்பது மகிழ்ச்சியைத் தரக்கூடிய செய்தி. புகழுடன் பணி புரியும் இலங்கை தமிழ் மறைக் கழகத்தின் தலைவரும் அரசாங்க உத்தியோக பாஷை இலாகாவில் தமிழ் ஆராய்ச்சிப் பகுதியின் தலைவராயிருப்பவருமான பண்டிட் கா. பொ. இரத்தினம் கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் புதிய செயற்குழு இவ்வாரம் கூடியபொழுது சில முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தமிழ்க்கலை, கலாசார, மொழி வளர்ச்சிக்குச் சேவை புரிய கொழும்பில் ஒரு மணி மண்டபம் நிறுவ வேண்டு மென்றும் இதற்கு ரூ. 50,000 மான்யமளிக்குமாறு கலாசார மந்திரியிடம் கேட்பதென்றும் ஒரு தீர்மானத்தில் குறிப்பிடப் பட்டிருந்தது.


வருடந்தோறும் மிகச் சிறந்த பத்து தமிழ் நூல்களுக்குப் பரிசளிக்கப் பிரதிவருடமும் ஐயாயிரம் ரூபாய் மான்யம் ஒதுக்கும்படி அரசாங்கத்தினிடம் கேட்டுக் கொள்ளுவதென்று இன்னொரு தீர்மானம் செயற் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. —ரஜனி

தண்ணீர் சப்ளை விஷயமாக உங்கள் தேவை எதுவானாலும் சரி,

அதற்கென்றே டெமிங் பம்புகள் உள்ளன.



டெமிங் மார்வெல்
வீடுகளுக்கு



டெமிங் ஆயில்ரைட்
தொழிற்சாலைகளுக்கு



டெமிங் டூப்ளே
கிராம தண்ணீர் சப்ளைக்கு

- வீடு, தொழிற்சாலை, ஹோட்டல், ஆஸ்பத்திரி அல்லது கிராம தண்ணீர் தேவைகளுக்கு நம்பகரமான உழைப்புடன் நயமான விலையில் பம்பு செட்டுகள் உள்ளன.
- கைவசம் உள்ள ஸ்டாக்கிலிருந்தும், வாதுகொண்டிருக்கும் ஸ்டாக்கிலிருந்தும் எந்த மாடல்களையும் விரைவில சப்ளை செய்யமுடியும்.
- ஸ்பேர் சாமான்களுக்கு நீங்கள் கவலைப்படவேண்டியதே இல்லை. அவை எப்பொழுதும் கிடைக்கும்.
- எங்கள பொறுப்பு, சப்ளை செய்த பம்புகளை பொருத்துவதுடன் நின்றுவிடுவதில்லை. உள்ளூரானாலும் சரி, வெளியூரானாலும் சரி, பம்புகளை அவ்வப்போது சரிபார்த்து ஓடச்செய்வதும் எங்கள் பொறுப்பே- இதற்குவேண்டிய எல்லா வசதிகளும் எங்களிடம் உண்டு.
- ஒரு முறை எங்கள கம்பெனிக்கு விஜயம் செய்து நேரில் எல்லா பம்பு செட்டுகளையும் பார்க்கவும். டெமிங பம்புகளைப்பற்றிய ஆலோசனை எப்பொழுதும் எங்களிடம் எளிதில் கிடைக்கும்.

தண்ணீர் சப்ளை விஷயங்களை சுலபமாக தீர்த்துவைக்கக்கூடிய நிபுணர்கள்

EEC **ஈஸன் என்ஜினியரிங் கம்பெனி லிமிடெட்.**

5-7 செகண்ட் லைன் பீச், மதராஸ்.


மாதர்குல திலகங்கள்



பாரத நாடு சுதந்திரம் பெற்ற சமயத்தில் காந்தி மகானை இழந்ததுபோன்ற துரதிர்ஷ்ட சம்பவம், உலக சரித்திரத்திலேயே வேறெங்கும் காண முடியாத நிகழ்ச்சியாகி விட்டது. புது மாளிகை கட்டி, கிரகப் பிரவேசம் செய்யும் சமயத்தில் குடும்பத் தலைவர் மறைய நேர்ந்தால், அந்நிலையை என்னென்று விவரிப்பது? வெண்ணெய் உருவாகி வந்த போது தாழி உடைந்து விட்டது போல், சுதந்திர சரித்திரத்தின் முக்கியமான கதாபாத்திரம் உடைந்து விட்டது.

ஆனால் உடைந்த தாழி வெறும் மட்கலம் அல்ல. விலை மதிப்பற்ற பொற்கலமாகையால், காந்திய பக்தர்கள் அவற்றை மீண்டும் ஒன்று சேர்த்து உருவாக்குவதில் ஈடுபட்டு வருகிறார்கள். காந்திய வழியில்தான் கிடைத்த சுதந்திரத்தைப் பத்திரமாகப் பாதுகாக்க முடியும் என்ற உண்மையை உணர்த்தி வருகிறார்கள். காந்தீயக் கொள்கையை வளர்ப்பதென்றால், கதர் ஆடை தரித்துக் கொள்வது மட்டும் அல்ல ; ஒன்றிரண்டு குடிசைத் தொழில் உற்பத்திப் பொருள்களை உபயோகிப்பது மட்டுமல்ல, நாட்டின் ஒவ்வொரு கிராமத்தையும் காந்தி கிராமமாக விளங்கச் செய்ய வேண்டும் ; அரசியல் பொய்ப் பித்தலாட்டங்கள், வகுப்பு சாதி துவேஷங்கள் நீங்கி ஆக்க வேலையில் எல்லாக் கிராமங்களும் தன்நிறைவு கொண்டதாக விளங்க வேண்டும் என்று பாடுபட்டு வருகிறார்கள். அத்தகைய காந்தி கிராமத்தைக் காண வேண்டுமானால், வார்தாவுக்குப் போக வேண்டுமென்பதில்லை ; தமிழ் நாட்டிலேயே நாம் ஒரு காந்தி கிராமத்தைக் காணலாம். டாக்டர் சௌந்தரம் ராமச்சந்திரன் தம்பதியாரால் உருவாக்கப்பட்டு, தென்னகத்து 'வார்தா'வாக விளங்கி வரும் மதுரை ஜில்லாவிலுள்ள காந்தி கிராமத்தையே குறிப்பிடுகிறோம். டாக்டர் சௌந்தரம் அவர்கள் செல்வக் குடும்பத்தில் பிறந்தவர். தமிழகத்தின் தொழிலதிபர் காலஞ்சென்ற ஸ்ரீ டி. வி. சுந்தரம் அய்யங்கார் அவர்களின் தவப் புதல்வி. ஸ்ரீமதி சௌந்தரம் அவர்களின் குடும்பத்தினர் அனைவருமே தேசபக்தி மிக்கவர்கள். சிறந்த கல்வியாளர்கள். ஸ்ரீமதி சௌந்தரம் அவர்களின் தேசபக்தி காந்திய பக்தியாகப் பரிணமித்துள்ளது.

வைத்தியக் கல்லூரிப் பட்டதாரியான ஸ்ரீமதி சௌந்தரம் அவர்கள் காந்தீய நெறியில் பயிற்சி பெற்றவர். தாம் பெற்ற கல்விச் செல்வம், பொருட்செல்வம் முழுமையையும் அண்ணலின் அறநெறிவளர்ச்சிக்காகச் செலவிட்டு, காந்தி கிராமத்தைத் தமிழகத்தில் உருவாக்கினார். காந்திகிராமத்தின் வழியாக ரயில் வண்டிகளில் செல்லும்போது, தேச சுதந்திரத்தின் ஒரு பகுதி அங்கு ஒளி வீசுவதைக் காண்கிறோம். "காந்திய கிராமங்கள் நெடுகிலும் பரவி விட்டால், கிடைத்த சுதந்திரத்தை யாரும் அசைக்க முடியாதபடி அவற்றில் வைத்துப் பாதுகாக்கலாம்!" என்ற நன்னம்பிக்கை மனத்தில் தோன்றுவதை உணர்கின்றோம். ஸ்ரீமதி சௌந்தரம் அவர்களின் கணவர் ஸ்ரீ ஜி. ராமச்சந்திரன் காந்திஜியின் சீடர்களில் பிரபலமானவர். ஆதாரக் கல்வி, கிராம கைத்தொழில், ஹரிஜன சேவை முதலியவற்றில் 'அத்தாட்சி' என்று சொல்லக்கூடிய விதத்தில் தென்னிந்தியாவில் பெயர் பெற்றவர். ஸ்ரீமதி சௌந்தரம் அவர்கள், அரசியலில் பங்கு கொண்டு சென்னைச் சட்டசபைக்குச் சென்ற தேர்தலிலும் தேர்ந்தெடுக்கப்பட்டார். சமீபத்தில் நடந்த தேர்தலிலும், மதுரை ஜில்லா வேடசந்தூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். ஸ்ரீமதி சௌந்தரம் போன்ற காந்தி நெறியாளர்கள் அரசியலில் பங்கு கொள்வது அரசியலாரின் அதிர்ஷ்டம் என்றே கூறவேண்டும். சுதந்திர அரசியலைக் காந்திய வழியில் மாற்றியமைக்க வேண்டுமானால், அதில் பங்கு கொள்ளத் தான் வேண்டும். சென்னைச் சட்டசபையில் ஸ்ரீமதி சௌந்திரம் ராமச்சந்திரன் அவர்கள் மாதர்குலத்தின் உயர்வுக்காகப் பல துறைகளிலும் பாடுபட்டு வருகிறார்கள். காந்தி கிராமத்தில், கல்வி, உதவி, கைத்தொழிற் பயிற்சி முதலிய தர்மங்கள் நடத்தி, அதில் மாதர்களுக்கும் ஆதரவு அளித்து வருகிறார்கள். காந்தி கிராமத்தின் சேவைகளும் ஸ்ரீமதி சௌந்தரம் அவர்களின் புகழும் நீடித்து வளர வேண்டுமென்று வாழ்த்துகிறோம்.



மல்லிகா

"மல்லிகா" படத்தைப் பார்த்ததும் நான் வியந்து போனேன். நான் தமிழ்ப் படம்தான் பார்க்கிறேனா என்று ஒரு கணம் பிரமை தட்டியது. நான் எதிர்பார்த்த பல காட்சிகள் வராமற் போனதுதான் அத்தகைய பிரமை ஏற்பட்டதற்குக் காரணம்.

பர்மாவில் பணக்காரராயிருந்த தர்மலிங்கம் விதிவசத்தால் நொடித்துப் போய்த் தம் மனைவி மக்களுடன் தாய்நாடு திரும்புகிறார். வழியில் விமான விபத்தாகி அவர் புதல்வி களான கமலாவும் பத்மாவும் மட்டும் உயிர் தப்புகின்றனர். ஆனால் பத்மாவின் பார்வை பறி போய் விடுகிறது. கமலா தன் சொந்த ஊருக்கு வந்து வீட்டை விற்றுக் காசாக்கித் தங்கைக்குச் சிகிச்சை செய்ய முயல்கிறாள். ஆனால் அந்தப் பணம் திருட்டுப் போய் விடவே, தனக்குத் தெரிந்த நடனக் கலையின் மூலம் பணம் சேகரிக்க முற்படுகிறாள். அப்பொழுது கமலா மல்லிகாவாக மாறுகிறாள். ஒருநாள், வழியில் மயக்கமுற்றுக் கிடந்த வாலிபன் மோகனுக்கு மயக்கம் தெளிவிக்கப் போக அவன் அவள் மேல் தீராத மையல் கொள்கிறான்.

கதாநாயகி, தன் நடனக் கலையின் மூலம் பணம் சேகரிக்கிறாள் என்றதுமே, அந்தக் கதாநாயகி பத்மினிதான் என்று அறிந்து கொண் டிருப்பீர்கள். அது உண்மைதான். இந்தப் படத்தில் பத்மினி மிகவும் நன்றாக நடித்திருக்கிறார்; நடனம் ஆடியும் இருக்கிறார். தங்கையின் அன்பில் நெகிழும் போது கொஞ்சும் அவரது விழிகள், அவலாவின் விஷப் பார்வையைக் கண்டு அதிர விழிக்கின்றன. அன்பனின் ஆதரவான பார்வைக்குக் கெஞ்சும் அவரது விழிகள், அவனுடைய தகாத பேச்சுக்களில் சீற்றங் கொண்டு கொடுமையில் மிஞ்சுகின்றன. காதலாகிக் கண்ணீர் மல்கவும், காதலை இழந்து கண் கலங்கவும் கிடைத்த சந்தர்ப்பங்களில் பத்மினி உருக்கமாக, உணர்ச்சி ஊட்டும் விதத்தில் நடித்திருக்கிறார். படத்தின் ஆரம் பத்திலேயே கவர்ச்சியூட்டும் பல நடனத் தோற்றங்களில் அவரைப் பார்க்கிறோம்.

"மல்லிகா"வில் நல்ல முறையில் நடித்து, படத்துக்கும் நல்ல பெயர் வாங்கித் தந்திருக்கும் ஒரு நடிகைச் சிறுமியை அவசியம் பாராட்டியாகவேண்டும். அவள்தான் பத்மாவாக நடிக்கும் பேபி ராஜகுமாரி. பார்வையிழந்தவளாக நடித்து, எல்லோருடைய பார்வைகளையும் கண்ணீர்த் திரையினால் மறைத்துவிட்டாள்! ஆனால் ஓர் உண்மையை மட்டும் அவளால் மறைக்க முடியவில்லை. அதுதான் அவள் ஒரு சிறந்த நடிகை என்னும் உண்மை!

பேபி ராஜகுமாரியின் நடிப்பு, பேச்சு, முக பாவங்கள் எல்லாமே அவளது வெற்றிகரமான வருங் காலத்தை உறுதிப் படுத்து வனவா யிருக்கின்றன.

ஹோட்டல் முதலாளி மோகனாக — கதா நாயகனாக — நடிப்பவர் ஜெமினி கணேசன். அவர் திரை உலகத்தின் வெற்றிகரமான காதலர். ஆகவே, காதல் கட்டத்திலும் சரி, மற்ற வெட்டு, குத்துச் சண்டைகளிலும் சரி, நீங்கள் எதிர்பார்க்கிறபடியே நடித்திருக்கிறார்!

மோகனின் நண்பன் பாத்திரம் ஏற்பவர் பாலையா என்று மட்டும் உங்களுக்குத் தெரிந்தால் போதும். குத்துச் சண்டைகளுக்கும், கொடூரமான பழிகளுக்கும், கோரக் கொலைக்கும் அவர் சாதாரணமாக எத்தனையோ படங்களில் காரணபூதரா யிருந்திருக்கிறார். இந்தப் படத்திலும் அவற்றுக்கெல்லாம் பூரணமாகப் பொறுப்பேற்றிருக்கிறார். மோகனின் தந்தையை அவர் கொலை செய்யப் போக அது மோகனைச் சிறையில் தள்ளி, பிறகு கமலாவைச் சிறையில் தள்ளி, நீதி மன்றத்தில் விசாரணை நடக்கும்போது அவரையே கொன்று விடுகிறது.

டி. எஸ். பாலையா ஒரு பிறவி நடிகர். அவர் நடித்த படங்களின் பெயரைச் சொல்லா விட்டாலும், அவர் பெயரை எல்லோரும் சொல்லிக் கொண்டிருப்பார்கள். அதாவது அவரைப் பொறுத்த வரையில் எந்தப் படத்திலும் சோடை போக மாட்டார். ''மல்லிகா'' வில் அவர் நடிப்பு கடைசிவரையில் விறுவிறுப்பு ஊட்டுகிறது.

படத்தின் ஹாஸ்யப் பகுதியை இட்டு நிரப்புவதற்கு நம் தங்கவேலு இருக்கிறார். மோகனின் தங்கை இந்திராவின் கணவனாக நடிக்கிறார். படத்தில் ஆதி முதல் அந்தம் வரையில் அதிர்வேட்டுச் சிரிப்பைக் கிளப்புகிறார். அவர் பேச்சில் பல இடங்களில் ஹாஸ்ய வெடிகள் 'பகர் பகர்' என்று வெடிக்கின்றன. ஆனால் பட்டிக் காட்டானாக அவர் பெண்கள் வண்டியில் பிரயாணம் செய்யும்போது அடிக்கும் கூத்துகள் கொஞ்சம் அதிகமாகவே போய் விடுகின்றன.

மோகனின் தங்கை இந்திராவாக நடிக்கும் எம். என். ராஜத்தின் நடிப்பு அவர் எத்தனையோ படங்களில் நடித்திருப்பது போலவே இருக்கிறது.

இந்தப் படத்தின் வெற்றியில் பெரும் பங்கு வசனகர்த்தாவான நாஞ்சில் நாடு டி. என். ராஜப்பாவையே சாரும்.

நல்ல அம்சங்கள்: கமலாவின் வீட்டுக்குக் காதல் பிச்சை கேட்கச் சென்ற மோகனை அவள் நிராசையுடன் பேசி வெளியேற்றியதும், பிறகு அவன், அவளை நாட்டியக்காரி எனத் தூற்றியதை எதிர்த்துச் சீறியதும் கடைசியில் சொல்லம்பு தாளாமல் கண்ணீருக்கிடையே மயங்கி விழுந்ததும், பின்னர் மோகனின் மனமாற்றமும் மனத்தைக் கவருவதாயுள்ளன. இந்தக் கட்டங்களில் பாட்டுக்களைப் புகுத்தி நம் உயிரை வாங்காமல் இருந்ததும் மிகச் சிறந்த அம்சம்!

அநேகமாக நம் தமிழ்ப் படங்களில் வழக்கமாக வரும் ஒரு அம்சம் இந்தப் படத்தில் இல்லாதது கண்டு வியந்தேன்.

அதுதான் தந்திர மந்திரக் காட்சிகள். பறக்கும் பாயையும், எதையும் மறக்கும் கலவையையும், பாடும் வீணையையும் அதைக் கேட்டு ஓடும் ரஸிகர்களையும் ஒவ்வொரு நிமிஷமும் எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன்! நல்ல வேளையாக ''மல்லிகா'' மந்திர மாய ஜாலங்களிலிருந்து தப்பிவிட்டது. இப் 'படத்தின் தயாரிப்பாளரும் டைரக்டருமான ஜோஸப் தளியத் (ஜூனியர்) அவர்களை, அதற்காக எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

மோகனின் நண்பன் சங்கர் ஜமீன்தாரைக் கொன்றதைக் கண்ணால்கண்ட சாட்சி பத்மா. அவள் கடைசி நிமிஷத்தில், நீதி மன்றத்தில் உண்மையைக் கூறியபோது பாலையா கைத் துப்பாக்கியுடன் வருகிறார். உடனே பத்மா சுடப்படுவாள் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால் நல்ல வேளையாக அது இல்லை. ஏனென்றால், நல்லவர்களைக் கடைசியில் கொன்று விடுவதுதான் நம் திரையுலக நீதியாயிருந்து வருகிறது. அது ''மல்லிகா''வில் மாறியிருப்பது மகிழ்வையளித்தது.

பாடல்கள் நன்றாயிருக்கின்றன. காட்சி ஜோடனைகள், ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு எல்லாம் பாதகமில்லை. ஒரு நடனக் குழுக் காட்சியில் மட்டும் 'ஹோ'வென்ற கூரலில் பாட்டு பாடப் படுகிறது. அதை அவசியம் அடக்கியிருக்க வேண்டும். ''மல்லிகா'' குறைகள் குறைவாகவுள்ள ஒரு நல்ல படம்.





"இலங்கைத் தீவில்" உள்ள தமிழ்ப் பிரதேசங்களில் அவசரப் பிரயாணம் செய்ததால் அந்தப் பகுதிகளைப் பற்றி ஒரே கட்டுரையில் முடித்து விடுவதாக உத்தேசம் போலும்'' என்று பல அன்பர்கள் எனக்குச் சற்றுக் கடுமையாகவே கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

இலங்கையில் உள்ள தமிழ்ப் பகுதிகளில் அவசரப் பிரயாணம் செய்தது உண்மையானாலும் அந்தப் பகுதிகளைப் பற்றியும் அங்கு வாழும் தமிழ் மக்களைப் பற்றியும் விஸ்தாரமாக ஒவ்வொரு வாரமும் ஏழெட்டுப் பக்கங்களுக்குக் குறையாமல் இன்னும் ஏழு மாதங்களுக்கு என்றால் எழுத முடியும். ஆனால் நேயர்கள் எனக்கு என்ன கெடுதல் செய்து விட்டார்கள்? அவர்களை ஏன் அத்தகைய கஷ்டத்துக்கு உள்ளாக்க வேண்டும்? அதனால் தான் இந்தக் கட்டுரையுடன் முடித்துக் கொள்ளலாம் என்று இருக்கிறேன்.

இலங்கையின் வட பாகத்திலும் கீழ்பாகத்திலும் தமிழ் மக்கள் வசிக்கிறார்கள். இல்லை, அந்தப் பகுதிகள் நமது செந்தமிழ் நாட்டின் ஒரு பகுதிதான் என்றே சொல்லி விடலாம். அங்கு வாழும் தமிழ் மக்கள் எல்லாம் எந்தக் காலத்தில் வந்து ஈழத்தில் குடியேறினார்கள் என்பதைப் பற்றி எல்லாம் திட்டமாகச் சொல்ல முடியாது. ஆனால் ஒன்றுமட்டும் உறுதியாகச் சொல்லலாம். இலங்கையின் ஆதி மக்கள், இலங்கைக்கு உரிமையுடைய மக்கள் தமிழ் மக்கள்தான் என்பதை மட்டும் விவாதத்துக்கு இடமில்லாமல் சொல்லி விடலாம். இந்த விஷயம் இருக்கட்டும், திருகோண மலையிலும், மட்டக்களப்பிலும், யாழ்ப்பாணத்திலும் நான் கண்ட காட்சிகளைச் சொல்லி விடுகிறேன்.

அவசரப்



தமிழ் என்றால் இனிமை என்று பொருள் என்பதாகத் தமிழ் அறிஞர்கள் கூறுகிறார்கள். ''தேமதுரத் தமிழோசை'' என்கிறார் மகாகவி பாரதியார். அந்தத் தமிழ் இன்பத்தை யெல்லாம் கேட்டு அநுபவிக்க வேண்டுமானால் இலங்கைக்குத்தான் செல்ல வேண்டும். யாழ்ப்பாணம் மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களில் தமிழ் மக்களின் பேச்சைக் கேட்கும் போது முதலில் ''இது என்ன மொழி? எங்கோ கேட்ட மொழிபோல் இருக்கிறதே! தமிழ் மொழி தானோ!'' என்றெல்லாம் எண்ணத் தோன்றும். கொஞ்சம் கேட்டுப் பழகி விட்டோமானால் ''இதுவன்றோ தமிழ்!'' ''தமிழ் ஈழநாட்டில் அல்லவா இருக்கிறது?'' என்று எண்ணி மகிழ்ந்து போவோம். அவர்கள் பேசுவதை ஒருகணம் கண்ணை மூடிக்கொண்டு காது கொடுத்துக் கேட்டோமானால் சாதாரணமாகப்




பேசுகிறார்களா? இல்லை; நாடகங்களில் வசனங்களை உருப்போட்டு ஒப்புவிப்பதுபோல் எல்லாவற்றையும் எழுதி வைத்துக் கொண்டு படிக்கிறார்களா? என்று எண்ணத் தோன்றும். அவ்வளவு சுத்தமாக இருக்கும். இலங்கைத் தமிழ்மக்கள் பேசும் தமிழ், இசைத் தமிழைப் போல இனிமையாக இருக்கும். ''இதனால்தான் பாட்டைப் படித்தார்'' என்ற சொற்றொடர் ஏற்பட்டதோ என்னவோ. ''பேசுவதைப் போலவே எழுதவேண்டும்'' என்று தமிழ் வளர்ப்பதில் உண்மையான ஆவல் உள்ளவர்கள் கூறினால், பழைய பத்தாம் பசலிகளான சில பண்டிதர்கள் ''யார் பேசுவதைப்போல எழுதவேண்டும்?'' என்று கேட்கிறார்கள்! அந்த அறிஞர்களைப் பார்த்து, ''இலங்கையில் உள்ள யாழ்ப்பாணத்துத் தமிழ் மக்கள் பேசுவது போல் எழுத வேண்டும்'' என்று தயங்காமல் கூறிவிடலாம். தமிழ் வார்த்தைகளை அவ்வளவு சுத்தமாக உச்சரித்து அநாயாசமாகப்பேசுகிறார்கள்.

தமிழ் நாட்டோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இலங்கையின் தமிழ் பகுதியில் உள்ள நிலப்பரப்பு மிகவும் குறைவு. ஆனால் அந்தப் பகுதியிலிருந்துதான் எத்தனை தமிழ்ப் புலவர்கள் தோன்றியிருக்கிறார்கள்! ஆறுமுக நாவலர், சுவாமி விபுலானந்தர் போன்ற மிகப் பெரும் புலவர்களைப் பெற்றெடுத்த பூமி ஈழம்தான். ஈழ நாட்டுக்கும் தமிழ் நாட்டுக்கும் இதுபோன்ற விஷயங்களில் எவ்வளவோ ஒற்றுமை இருந்தாலும் எவ்வளவோ வேற்றுமைகளும் இருக்கின்றன.

இலங்கையில் பொதுக் கல்வி அதிகம். அதைப் போலவே பெண் கல்வியும் அதிகம். ஆண்களைப் போலவே படித்துப் பட்டம் பெற்ற பெண்மணிகளும் ஏராளமாக இருக்கிறார்கள். ஆனால் படிப்பு அவர்கள் அறிவைக் குறைக்கவில்லை. அறிவுக்குத் துணை செய்திருக்கிறது. படித்த பெண்மணிகள்கூடப் பெண்மைகெடாமல் தமிழ்ப்பண்புடன் விளங்குகிறார்கள். அவர்களிடம்தான் நம்முடைய பழைய தமிழ்நாட்டு நாகரிகம் அடைக்கலம் புகுந்திருக்கிறது என்று சொல்லலாம். இல்லை; அவர்கள்தான் அதை இப்பொழுது வளர்த்து வருகிறார்கள் என்று சொல்ல வேண்டும்.







திரு வி. வைத்திய சுப்பிரமண்ய அய்யரின் புதல்வி சுலோசனாவுக்கும், வாரணாசியில் உதவி கலெக்டராக இருக்கும் திரு எச். எஸ். ரமணி ஐ. ஏ. எஸ் அவர்களுக்கும் சென்னையில் மிகச் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. திருமண வைபவத்துக்கு ஏராளமான பிரமுகர்களும் நண்பர்களும் உறவினர்களும் வந்திருந்து தம்பதிகளை ஆசீர்வதித்தார்கள். வாழ்க மணமக்கள்!

இலங்கைத் தமிழ் மக்களுக்குள் பல வேற்றுமைகள் உண்டு. ஆனால் தமிழ் மொழி விஷயத்திலும், தமிழ் நாட்டின்மீது உள்ள பக்தியிலும் அவர்களுக்குள் வேற்றுமை கிடையாது. தமிழ் நாட்டில் உள்ள தமிழ் மக்கள் இலங்கைத் தமிழ் மக்களின் நலனில் அக்கறை காட்டுவதைப் பற்றி அதிகம் கூறவேண்டிய இல்லை. "இலங்கையில் தமிழ் மக்கள் இருக்கிறார்களா? அவர்கள் மொழி உரிமைக்காகவும், அரசியல் சுதந்திரத்துக்காகவும் போராடி வருகிறார்களா? இதைப் பற்றி நாம் தெரிந்து கொண்டு என்ன ஆகவேண்டும்?" என்று கேட்கும் பிரஜாபதிகள் ஏராளமாக இருக்கிறார்கள், நம்முடைய அருமைத் தமிழ் நாட்டில். ஆனால் ஈழத்துத் தமிழ் மக்கள் தமிழ் நாட்டைத் தங்கள் நாட்டுடனேயே சேர்த்துத்தான் பார்க்கிறார்கள். தமிழ் நாட்டையே தங்கள் தாய்நாடாக எண்ணிப் பெருமை யடைகிறார்கள். தமிழ்நாடு இப்பொழுது அடைந்திருக்கும் பெருமையைத் தங்கள் பெருமையாகவே எண்ணுகிறார்கள். தமிழ் நாட்டில் உள்ள தமிழ் அறிஞர்களைத் தங்கள் சொந்த நாட்டு அறிஞர்களைப் போலவே எண்ணி அகமும் முகமும் மலர வரவேற்று உபசரிக்கிறார்கள்.

விருந்தோம்பும் சிறந்த குணத்தை நான் எத்தனையோ இடங்களில் பார்த்திருக்கிறேன். ஆனால் தமிழ் நாட்டைப் போல் விருந்தோம்பலில் சிறந்த ஒரு நாட்டை நான் வேறு எங்கேயும் பார்த்ததில்லை. இருந்தாலும் தமிழ் நாட்டையும் தூக்கி அடிக்கும் விருந்தோம்பும் சிறப்பை இலங்கையில் தான் கண்டேன். அவர்கள் எங்களிடமெல்லாம் காட்டிய அன்பு தாயன்பைக் காட்டிலும் உயர்ந்தது. எங்களுக்கு அளித்த உபசாரங்கள் மன்னர்களுக்கு அளிக்க வேண்டிய உபசாரங்களைவிட மேலானது என்றுதான் சொல்ல வேண்டும்.

இலங்கையில் திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய தமிழ்ப் பகுதிகளில் தங்கி இருந்த நாட்களை எங்களுடைய வாழ்க்கையிலேயே சிறந்த நாட்களாகத்தான் எண்ணி மகிழ்ச்சிஅடைகிறோம்.

திருகோணமலை

ஒரு சமயம் திருகோணமலை மிகச் சிறப்பான நகரமாக இருந்து வந்தது. திருகோணமலைக் கோணேசர் ஆலயத்தின் மூலமாகத்தான் திருகோண மலையின் புகழ் ஓங்கி யிருந்தது. "குணகடலோத நித்திலங் கொழிக்கும் கோணமலை" என்று ஒரு தேவாரப் பண் பாடுகிறது. இப்பொழுது கோணேசர் ஆலயத்தின் புகழுடன் மற்றொரு புகழும் இந்த நகரத்துக்குக் கிடைத் திருக்கிறது. இங்குள்ள துறைமுகம் உலகில் உள்ள மிகச் சிறந்த துறைமுகங்களில் ஒன்றாகும். இயற்கையாக அமைந்த துறைமுகமானதால் எதிரிகளின் கண்களுக்குப் படாமல் பல நூற்றுக்கணக்கான கப்பல்கள் துறைமுகத்தில் பயமின்றித் தங்கி இருக்க முடிகிறது. இந்தத் துறைமுகத்தைக் கொண்டுதான் பிரிட்டிஷார் கடலில் தங்கள் கொடியைத் தூக்கிப் பிடித்திருந்தார்கள் என்று கூடச் சொல்லலாம். சமீபத்தில் பிரிட்டிஷார் சூயஸ் மீது போர் தொடுத்தார்கள் அல்லவா? அந்த அநியாய யுத்தத்துக்குச் சண்டைக்கப்பல்கள் எங்கிருந்து புறப்பட்டன தெரியுமா? திருகோண மலைத் துறைமுகத்திலிருந்துதான். இந்தத் துறைமுகப்பகுதி தமிழ் மக்கள் வசிக்கும் பகுதி. அது காரணமாகவே இந்தத் துறைமுகப் பகுதியில் தமிழ் மக்களின் செல்வாக்கைத் தொலைத்துச் சிங்களவர் செல்வாக்கை உயர்த்துவதற்கான சூழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. அதில் ஒன்றுதான் இப்பொழுது நடைபெற்று வரும் துறைமுகப் பரிவர்த்தனை விவகாரமும் என்று அங்குள்ள மக்கள் சொல்லிக் கொள்கிறார்கள். சென்ற மகா யுத்தத்தில் ஜப்பானியரின் குண்டு வீச்சுக்கு உள்ளான துறைமுகமும் இதுதான். அந்தக் குண்டு வீச்சினால் பாதிக்கப் பட்ட பெரிய கப்பல் ஒன்று கருகிப் போய் இன்றும் இருக்கிறது.

இந்த விவரங்களை யெல்லாம் ஏற்கனவேயே கேள்விப்பட்டிருந்ததால் எனக்குத் திருகோண மலையைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் உண்டாகி விட்டது.

ஒரு நாள் மாலையில் திருகோண மலையைப் போயடைந்ததும் "இந்த இருட்டில் இங்கே என்னத்தைப் பார்க்க முடியப் போகிறது?" என்ற பிரச்னைதான் எழுந்தது. "இருட்டிலும் இங்குள்ள துறைமுகத்தைப் பார்க்கலாம்" என்று கூறி எங்களை ஒரு நீராவிப் படகில் ஏற்றித் துறைமுகத்தைச் சுற்றிக் காண்பித்தார்

ஏசிசி விதிமுறைகளை கௌரவிக்கிறது

1

"உற்பத்தியாளர்களும், விநியோகஸ்தர்களும் அவர்களது உற்பத்திப் பொருள்களை உபயோகிப்பவர்களுக்கு, அப்பொருள்கள் எப்பொழுதும் மிக நேர்த்தியான தரமுள்ளதாக, நியாயமான விலையில் கிடைக்கச்செய்வதை தமது கடமையாகக் கொள்ளவேண்டும்."

நடைமுறை விதிகள்—
சுய முயற்சி அரங்கம்

இந்திய சிமெண்டு இந்திய தர நிர்ணய ஸ்தாபனத்தினால் விதிக்கப்பட்ட மிக கடுமையான சோதனைகளில் தேற வேண்டியிருக்கிறது. மேற்கூறிய தர நிர்ணய விதிகளின்படி உற்பத்தித் தொழிற்சாலைகளைச் சேர்ந்த சோதனைச்சாலைகளில் மட்டுமின்றி, ஆலிப்பூரிலிருக்கும் அரசாங்க பரிசோதனை விடுதியிலும் சோதித்துப் பார்க்கப்படுகின்றது. ஏ சி சி சிமெண்டு இந்த சோதனைகளில் தேறுவது மட்டுமின்றி தரம் குறையாமை நிரூபிப்பதில் விசேஷ பத்திரத் தன்மை உடையதுமாகும். தர மேன்மையில் உலகில் இதர இடங்களில் தயாராகும் மிக நேர்த்தியான சிமெண்டிற்கு இணையானது.

1944-ம் ஆண்டிலிருந்து இந்திய சர்க்காரால் சிமெண்டின் விற்பனை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கழிந்த காலத்தில், கம்பெனியாலேயே, இருதடவை அதன் சிமெண்டின் விலையைக் குறைத்துள்ளது. 1948-ம் ஆண்டிலிருந்து கம்பெனிக்குக் கிடைக்கும் விலை மாறாமல் ஸ்திரமாகவே இருக்கிறது. ஜனங்கள் கொடுக்கும் தற்போதைய விலையுயர்வுக்கு, ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலம் செய்யும் இறக்குமதிகளுக்கு பண ஒத்தாசை புரிய சர்க்காரால் விதிக்கப்பட்டுள்ள எக்ஸைஸ் மற்றும் விலை சரிசமமாக்குவதற்கான அதிகப்படியான கட்டணமுமே காரணம்.

நாணயம், கடின உழைப்பு, மரியாதை, விடாமுயற்சி மற்றும் சமூகத்திற்கு வழங்கும் சேவை ஆகிய அஸ்திவாரத்தின்மீதே சுயமுயற்சி கட்டிடம் நிலை நிறுத்தப்படுகிறது. இத்தகைய வலுவான அஸ்திவாரத்தின்மீதே ஏ சி சி ஸ்தாபனமும் நீண்டகாலம் நிலைத்திருக்கும்படி நிறுவப்பட்டுள்ளது.

தி அசோஸியேட்டட் சிமெண்ட் கம்பெனீஸ் லிமிடெட்,

தி சிமெண்ட் மார்க்கெடிங் கம்பெனி ஆப் இந்தியா பிரைவேட் லிமிடெட்

திரு விக்னேஸ்வர ராஜா. இவர் இந்தத் துறைமுக சங்க அதிகாரிகளில் ஒருவர். நல்ல ரஸிகர். சர்க்கார் உத்தியோகத்தில் இருப்பவர்களில் பலருக்குத் தங்கள் விஷயத்தைத் தவிர வேறு விஷயங்களில் சிரத்தை குறைந்து விடுகிறது வழக்கம். அனேகர் சர்க்கார் காரியாலயமும் அங்கே வேலை செய்பவர்களும்தான் உலகம் என்று எண்ணி விடுவார்கள். அதனால் அவர்களிடம் ரஸிகத் தன்மை மிகவும் குறைந்து விடுகிறது. இதற்கெல்லாம் விதிவிலக்காகக் காட்சியளித்தார் திரு விக்னேஸ்வர ராஜா. நல்ல தமிழ்ப் பற்றும் ரஸிகத் தன்மையும் நிறைந்தவர். அவர் துறைமுகத்தைச் சுற்றிக் காட்டி வரும் பொழுது ஏதோ தம்முடைய சொந்தத் துறைமுகத்தையே சுற்றிப் பார்வையிடுவது போலிருந்தது. துறைமுகத்தில் கடல் நீரிலே இறங்கும் விமானங்களும் சில இருந்தன. இவற்றை யெல்லாம் பார்த்துக் கொண்டு வரும்பொழுதே, நாங்கள் ஏறியிருந்த நீராவிப் படகைச் சுற்றிப் பல இடங்களில் இருந்து மிகச் சக்தி வாய்ந்த விளக்குகளின் மூலமாகப் படகில் யார் இருக்கிறார்கள் என்பதைப் பார்க்க ஆரம்பித்தார்கள். இதைப் பார்த்ததும் உடன் வந்த நண்பர் பயந்தே போய் விட்டார். "பயப்படாதீர்கள்! இரவு நேரத்தில் துறைமுகத்தில் யார் போகிறார்கள் என்று வேவு பார்க்கிறார்கள். நமது சங்க இலாகா படகைப் பார்த்தவுடன் அவர்கள் பேசாமல் இருந்து விடுவார்கள்" என்றார்.

"வேறு படகாயிருந்தால் என்ன செய்வார்கள்?" என்றார் நண்பர்.

"என்ன செய்வார்கள்? துப்பாக்கியால் சுட்டுவிடுவார்கள். அவ்வளவுதான்" என்றார் திரு விக்னேஸ்வர ராஜா.

இவ்வாறு சொன்னதும் நண்பர் மூர்ச்சை போட்டே விழுந்து விடுவார் போலிருந்தது. "எப்போது கரைக்குப் போவோம்! எப்போது கரைக்குப் போவோம்!" என்று கேட்டுக் கொண்டே வந்தார். கரைக்கு வந்த பிறகுதான் அவர் நிம்மதியாக மூச்சுவிட்டார்.

திருகோணமலை இவ்வாறு இயற்கையான துறைமுகத்துடன் கூடியதால் அரசியல் முக்கியத்துவம் பெற்ற நகரமாக விளங்குகிறது. அதுபோலவே புராண சம்பந்தமாகவும் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது.

'தென் கைலை' என்ற திருநாமமும் திருகோணமலைக்கு உண்டு.

வடக்கே 'பறையனாறும்' தெற்கே 'பெருகல் ஆறும்' எல்லைகளாக அமைந்துள்ள புகழ் பெற்ற திருகோணமலையில்தான் ஈழநாட்டில் உள்ள மிகப் பெரிய நதியான 'மாவலி கங்கை' கடலுடன் சங்கமம் ஆகிறது.



'சினிமா உலகம்' ஆசிரியரும், சென்னை நகரசபை கவுன்ஸிலருமான ஸ்ரீ பி. எஸ். செட்டியாரின் புதல்வி செல்வி. சந்திராவுக்கும், திருப்பனந்தாள் திரு எஸ். இராஜாக்கண்ணு செட்டியார் புதல்வர் செல்வன் இராமநாதன்•க்கும் ஜூலை 14ந் தேதி சென்னை, தியாகராய நகரில் வெகு சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. திருமணத்துக்கு நண்பர்களும் உறவினர்களும் பிரமுகர்களும் விஜயம் செய்து மணமக்களை ஆசீர்வதித்தனர்.

திருகோணமலையில் பார்க்க வேண்டிய இடங்களில் மற்றொன்று வெந்நீர் ஊற்றுக் கிணறுகள். திருகோணமலையிலிருந்து ஐந்து மைல்களுக்கு அப்பால் 'கன்னியா' என்ற இடத்தில் இந்தப் பிரசித்தி பெற்ற வெந்நீர் ஊற்றுகள் இருக்கின்றன.

"இந்த வெந்நீர் ஊற்றில் அப்படி என்ன விசேஷம்?" என்று கேட்டேன், எங்களுடன் வந்த மட்டக்களப்பு நண்பரைப் பார்த்து.

"ராவணன் தன்னுடைய அன்னைக்கு ஈமக் கிரியை செய்வதற்காக மகாவிஷ்ணுவின் உதவியால் உண்டாக்கப்பட்ட கிணறுகள்."

"ராவணனுடைய தாயார் இறந்து போய் விட்டாளா?"

"ஆமாம். அவள் இறந்து போகாமல் இருந்திருந்தால் அவனுக்கு எப்படி ஈமச் சடங்கு செய்ய முடியும்?"

"உண்மையாகவே ராவணன் தாயார் இறந்து போய் விட்டாளா? உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டேன்.

''ஊரில் எல்லாரும் அப்படித்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எங்கள் பெரிய தாத்தா கூட அப்படித்தான் சொல்லுகிறார்'' என்றார்.

''உங்கள் பெரிய தாத்தாவே சொல்லிவிட்டால் நிச்சயமாக நம்பவேண்டியதுதான்! வாருங்கள், கன்னியாவுக்குப் போய் வெந்நீர் ஊற்றுக்களைப் பார்க்கலாம்.''

இவ்வாறு சொல்லி வெந்நீர் ஊற்றுக்களைப் பார்க்கப் புறப்பட்டோம். கன்னியாவில் உள்ள ஏழு வெந்நீர் ஊற்றுக்களையும் பார்த்ததும் எனக்கு ஒரே வியப்பாகப் போய்விட்டது. இராவணன் போன்றவர்களால்தான் இது போன்ற நம்ப முடியாத காரியங்களைச் செய்ய முடியும் என்று எண்ணத் தோன்றியது. இருபதடி நீளம், பத்தடி அகலமுள்ள இடத்தில் ஏழுவிதமான உஷ்ணத்துடன் ஏழு இடங்களில் பூமியிலிருந்து வெந்நீர் பொங்கி வருகிறது. அந்தத் தண்ணீரை எடுக்க எடுக்க அதே அளவுக்குத் தண்ணீர் சுரந்து கொண்டே இருக்கிறது. என்னே இயற்கையின் விந்தை!

மட்டக்களப்பு

திருகோணமலை மக்களின் அன்பிலாழ்ந்து திளைத்த பிறகு அவர்களிடமிருந்து எப்படி விடைபெற்றுக் கொள்வது என்றே தெரியாமல் தவித்துப் போனோம். என் நண்பர் சொன்னார். ''பொழுது விடிந்த பிறகுதானே திருகோணமலை தமிழ் மக்கள் நம்மை வந்து பார்ப்பார்கள். நாம் இரவே இந்த ஊரை விட்டுக் கிளம்பி விட்டால் போகிறது'' என்றார். அவருடைய இந்த அருமையான யோசனையை ஏற்றுக்கொண்டு இரவுக்கு இரவே திருகோணமலையை விட்டுப் புறப்பட்டோம். புறப்பட்டுச் சற்றுத் தூரம் சென்ற போது எங்களைத் துரத்திக்கொண்டு ஒரு ஜீப் கார் வேகமாக வந்து வழிமறித்தது. நண்பர் விக்னேஸ்வர ராஜா அதிலிருந்து குதித்தார். ''எனக்குத் தெரியும், நீங்கள் இராத்திரியே புறப்பட்டு விடுவீர்கள் என்று. அதனால்தான் வந்தேன்'' என்று சொல்லிவிட்டு ஆளுக்கு ஒரு கைத்தடியைக் கொடுத்து வழி அனுப்பி வைத்தார்.

விக்னேஸ்வர ராஜா அப்பால் சென்றதும் உடன் வந்த நண்பர் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார். பிறகு விழுந்து விழுந்து சிரித்தார்.

''என்ன ஐயா! ஏன் இப்படிச் சிரிக்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''ஜீப் காரிலிருந்து விக்னேஸ்வர ராஜா கையில் தடியுடன் இறங்கியதைப் பார்த்ததும் நான் பயந்து போய் விட்டேன். சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்டதற்காகத் தடியால் ஏதாவது கொடுக்கப் போகிறாரோ என்று எண்ணி நடுங்கிக் கொண்டிருந்தேன். நல்லவேளை! தடியை மட்டும் நம்மிடம் கொடுத்துவிட்டுப் போய் விட்டார்'' என்று சொல்லி மீண்டும் சிரிக்க ஆரம்பித்தார். அவர் கூறியதைக் கேட்டு நாங்களும் சிரித்தோம்!

மறுநாள் மாலை மட்டக்களப்புக்குச் சென்றோம். இலங்கையின் அரசியலில் ஒரு சுறுசுறுப்பையும் பரபரப்பையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் இடம்தான் மட்டக்களப்பு.

'வந்தாரை வாழவைக்கும் மட்டக்களப்பு' என்ற சிறப்புப் பெயரைப் பெற்ற மட்டக்களப்பு இலங்கையில் ஒன்பது மாகாணங்களில் ஒன்றாகத் திகழும் கிழக்கு மாகாணத்தின் தலைநகரமாக விளங்குகிறது.

மட்டுகளம் என்பதுதான் மட்டக்களப்பு என்று ஆயிற்று என்கிறார்கள்.

மட்டு என்றால் தேன். களம் என்பது நெற்கதிர் அடிக்கும் இடம். மட்டக்களப்பின் வட பகுதியில் தேன் சொரிகிறது. தென் பகுதி முழுவதிலும் நெல் பயிர்கள் பரவிக்



பாலு மறைந்தார்!

சங்கீத உலகில் மின்னும் நட்சத்திரமாக விளங்கி வரும், திரு ஜி. என். பாலசுப்பிரமணியம் அவர்களின் அருமைச் சீடருமான திரு டி. ஆர். பாலசுப்பிரமணியம் சென்ற வாரம் நம்மை விட்டுப் பிரிந்தார். திடீர் என்று ஏற்பட்ட இருதய நோய்க்கு இரையாகி விட்டார். சங்கீத ரசிகர்கள் 'பாலு' என்று அன்புடன் அழைத்துப் பாராட்டிய திரு பாலசுப்பிரமணியத்தின் கச்சேரியைத் தமிழ்கூறும் நல்லுலகம் எங்கிலும் உள்ள தமிழ்மக்கள் கேட்டு மகிழ்ந்திருப்பார்கள். வருங்காலத்தில் கர்நாடக சங்கீதத்துக்குப் பெரிய தூண் போல விளங்குவார் என்று சங்கீத வித்வான்கள் எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவ்வாறு சங்கீத உலகில் புகழ்பெற்று விளங்கியவர் திரு பாலு. முப்பத்தேழு வயது நிரம்பிய இளைஞர். பக்தியும் பண்பும் நிறைந்த இனியர். அவரையே நம்பியிருந்த அவர் குடும்பத்தாரையும் அவருடைய பிரிவால் வாடித் துடிக்கும் இளம் மனைவியையும் உலகமறியாத சின்னஞ்சிறு குழந்தைகளையும் நினைக்கும்போது மேலே எதுவும் எழுதுவது சாத்தியமில்லாமல் போகிறது. யமன் மிகக் கொடியவன், இரக்கமற்றவன் என்பதில் சந்தேகமில்லை. ●●



1893-லிருந்து
ஜலதோஷம்
முதலியவைகளை
எதிர்ப்பதில்
முதன்மையானது
மூன்று தலைமுறைகளாக உபயோகித்தவர்கள் அமிர்தாஞ்சனம், ஜலதோஷம் முதலிய வைகளை, சீக்கிர மாகவும், நிச்சயமாக வும், குணப்படுத்து கிறது என்பதை நிரூ பித்துவிட்டார்கள்.
அமிர்தாஞ்சனம்
அமிர்தாஞ்சன் லிட்.,
சென்னை-4.
பம்பாய்-1,
கல்கத்தா-7.
AL. 77. 5A. TAM.



A PRODUCT OF
50
YEARS'
"SOUND"
EXPERIENCE IN INDIA*
மாடல் 5166 ஏ. ஸி மெயின்களுக்கு
5 - வால்வ் 3 வேவ் பாண்டு, கண்ணுக்கினிய, பளபளப்பான பிரகாசிக்கும் ஸ்கேல் 10½" ஒலிபெருக்கி.' அழகிய நவீன காபினெட். நிகர விலை ரூ. 305/-
A.C./D.C. மினும் மற்றும் பாட்டரி செட்டுகளிலும் கிடைக்கும்
அங்கீகாரம் பெற்ற எச். எம். வி. டீலர்களிடமே வாங்குங்கள்
"HIS MASTER'S VOICE" Radio
"HIS MASTER'S VOICE"
The Hallmark of Quality
* The first H.M.V. factory in India was established at Belliaghata, Calcutta, in 1907

அருள் வாக்கு

அந்தக் காலத்தில் அநேகமாகப் பல வீடுகள் கூரை வீடுகளாகவே இருக்கும். கொஞ்சம் அதிகமானால் ஓட்டு வீடாக இருக்கும். மண் சுவர்தான் இருக்கும். கொஞ்சம் காரைச் சுவர் இருக்கும். அகத்தில் ஏட்டுச் சுவடிகள் வைக்கப் பனைமட்டைப் பெட்டி இருக்கும். விபூதி போடும் சுரைக் குடுக்கை இருக்கும். இரண்டு மூன்று மணைகள் இருக்கும். அடுப்பு இருக்கும். இவ்வளவுதான். இப்பொழுதோ சாமான்கள் அதிகம். சட்டைத் துணி, உடுப்புக்கள் நிறைய வாங்க வேண்டியிருக்கின்றன. அவைகளைச் சுத்தம் பண்ணச் சாமான்கள் வேண்டியிருக்கின்றன. அதிகச் செலவு பண்ண ஆரம்பித்து விட்டோம். அதிகச் சாமான்களை வைத்துக்கொண்டிருக்கிறோம். அவசியத்துக்கு அதிகமாக எல்லாவற்றையும் சுமத்திக் கொள்கிறோம்.

ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சி காமகோடி பீடம்

இடக்கின்ற அற்புதமான காட்சியைக் காண முடிகிறது.

மட்டக்களப்பின் ஒரு பகுதியில் கோயில் ஒன்று இருக்கிறது. இதற்குத் திருக்கோயில் என்றுதான் பெயர். இந்தக் கோயில் உள்ள இடத்தின் பெயரும் திருக்கோயில்தான். இந்த இடத்தைப் பற்றி நேயர்கள் நன்றாகத் தெரிந்து கொள்ளவேண்டும். இந்த ஊர்தான் இதிகாச நாயகனை ராவணனின் தலைநகரமாக இருந்தது. ராவணன் கோட்டை இந்த ஊருக்கு அருகில் உள்ள கடலில் இருப்பதாகக் கூறுகின்றனர்.

''அந்தக் கோட்டையைப் பார்க்க முடியாதோ?'' என்று கேட்டேன்.

''பேஷாகப் பார்க்கலாம். ஆனால் அதற்கு ஒரு விரதம் இருக்க வேண்டும்.''

''என்ன விரதமோ?''

''வெள்ளிக்கிழமைகளில் பட்டினி இருந்து பரிசுத்த மனத்துடன் கடலுக்குள் நோக்கினால் ராவணனின் அற்புத கோட்டையைக் காண முடியும்.''

''ராவணன் என்றாலே அது ஒரு பெரிய தத்துவம்தான் போலிருக்கிறது.''

''ஆமாம்! அப்படி ராவணன் என்பது பெரிய தத்துவமோ என்னவோ. ஆனால் ராவணனைப் பற்றி இப்படி ஒரு கதை இங்கு வழங்கி வருகிறது. இதுவரையில் யாரும் அந்தக்கோட்டையைப் பார்த்ததாகத் தெரியவில்லை.''

''அது எப்படியாவது போகட்டும். இந்த ஊரில் பார்க்கக் கூடியது என்ன இருக்கிறது?''

''பார்க்கக்கூடியது மட்டுமல்ல. கேட்டு அனுபவிக்கக் கூடியதுமான சில விஷயங்களும் இருக்கின்றன'' என்று சொல்லி அருகில் இருந்த ஒரு கிராமத்துக்குள் அழைத்துச் சென்று அங்குள்ள மக்களைக் காண்பித்தார் மட்டக்களப்பு நண்பர்.

''இவர்களுக்கு என்ன?''

''இவர்களுக்கு என்னவா? இவர்கள் எல்லாரும் கவி பாடும் புலவர்கள்'' என்றார்.

''இந்தப் பெண்களைப் பார்த்தால் முஸ்லிம் களைப்போல் இருக்கிறார்கள். எழுதப் படிக்கத் தெரியும் என்றுகூடச் சொல்ல முடியாது. இவர்களைப் போய்க் கவிகள் என்கிறீர்களே! என்ன கேலி செய்கிறீர்களா?''

''ஆமாம். 'அ' என்ற எழுத்தே தெரியாத எழுத்தறிவற்ற பெண்கள்தான். ஆனால் அதிசயிக்கத்தக்க பல சுவை நிரம்பிய கவிதைகளை எடுத்த எடுப்பிலேயே பாடி முடித்து விடுவார்கள். 'இம்' என்றால் எழுநூறும் 'அம்' என்றால் ஆயிரம் கவியும் பாடும் சக்தி படைத்தவர்கள்'' என்று சொல்லி, ''இதோ இந்தப் பெண்களைப் பாடச் சொல்கிறேன். கேளுங்கள்'' என்று கூறினார் நண்பர்.

அப்பொழுது இரண்டு பெண்கள் எதிரில் வந்து நின்றார்கள்.

''என்ன பாட்டு வேண்டும்?'' என்றார்கள்.

''நல்ல காதல் பாட்டுத்தான்'' என்றார் நண்பர்.

''ஏதாவது ஒரு வார்த்தையைச் சொல்லுங்களேன்.''

''வாழைப்பழம்'' என்றார் நண்பர்.

காதலனும் காதலியும் ஒருவரை ஒருவர் சந்திக்கிறார்கள். காதலன் காதலியை அன்போடு அழைப்பதற்கு வார்த்தை கிடைக்காமல் தவித்துக் கொண்டு பாடுகிறான்.

'' வாழைப்பழமே! என்
வலது கையில் சர்க்கரையே!
ஏலம்கிராம்பே! உன்னை
என்ன சொல்லிக் கூப்பிடுவேன்.''

காதலன் நினைவிலேயே வாடும் அந்தக் காதலி சொல்லுகிறாள் :

''பாலைப் பிழிந்தேன்,
பழத்தைத் தோலுரித்தேன்;
சோற்றைப் பிசைந்தேன்,—என்
தொண்டையிலே போகுதில்லே''

காதலன் :—

'' வானத்தின் வெள்ளி மங்காமற்
பூத்தது போல்;
சீனத்தின் வண்டே!
சிறையிருக்கேன் உன்னாலே!''

காதலி :—

'' உன் மனதும் என் மனதும்
ஒன்றுபட் டிருந்ததென்றால்
ஊரெழுந்து வந்தாலும்—நம்மை
ஒன்றும் செய்யப் போவதில்லே''

இப்படியாகப் பல அருமையான கவிகளை அந்த முஸ்லிம் பெண்களும், தமிழ்ப் பெண்களும் அற்புதமாகப் பாடுகிறார்கள். அவர்களுக்கு எதுகை தெரியாது. மோனை புரியாது. ஏன்? எழுத்தே தெரியாதுதான். ஆனாலும் இப்படிப் பல அபூர்வமான பாடல்களைப் பாடுகிறார்கள்.

இவ்வாறு தமிழுடன் இரண்டறக் கலந்து நிற்கும் முஸ்லிம் மக்களைச் சில சுயநலமிகள் ''முஸ்லிம்களின் மொழி தமிழ் அல்ல!'' என்று

சொல்லிச் சிங்களம் கற்கச் சொல்லும் விந்தையை எண்ணி அழுவதா? சிரிப்பதா? என்று தெரியவில்லை.

மட்டக்களப்புப் பெண்கள்தான் கவிதை புனைகிறார்கள் என்றால் அங்குள்ள மீன்கள்கூட அரிய கானத்துடன் பாடுகின்றன. மட்டக்களப்பை ஒட்டிய பறவைக் கடலில் பௌர்ணமி நிலவில் இந்த மீன்கள் இன்னிசை எழுப்புவதைக் கேட்கலாம். ஜலதரங்கத்துடன் வயலினும் வீணையும் சேர்ந்து வாசிப்பது போலப் பலவித சந்தங்களில் பாடுகின்றன இந்த மீன்கள். இந்த மீன்களின் இசையை அடிக்கடி இலங்கை வானொலியில் ஒலிபரப்புகிறார்கள்.

சுவாமி விபுலானந்தரின் 'யாழ் நூல்' தோற்றத்துக்குக் காரணமே இந்தப் பாடும் மீன்கள்தானும்! இந்தப் பாடும் மீன்களால் மட்டக்களப்பின் பெயர் உலகில் மிகப் பிரபலமாகி யிருக்கிறது.

பாடும் மீன்களும், கவி புனையும் பெண்களும் எப்படி மட்டக்களப்பை மறக்க முடியாமல் செய்தார்களோ அதைவிட அதிகமாக இருந்தது அங்குள்ள மக்கள் எங்களிடம் காட்டிய அன்பு. "திருகோண மலையிலிருந்து இரவோடு இரவாகப் புறப்பட்டு வந்து மட்டக்களப்பில் மாட்டிக் கொண்டோமே. இவர்களுடைய அன்பால் தமிழ் நாட்டையே மறந்து விடும்படியான நிலை ஏற்பட்டு விடுமோ?" என்றுகூடப் பயப்படத் தோன்றி விட்டது. எப்படியோ அங்குள்ள அன்பர்களிடமிருந்து பிரியா விடைபெற்றுக் கொண்டு யாழ்ப்பாணத்துக்கு வந்தோம்.

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்துக்குள் சென்று அங்குள்ள மக்களின் அன்பில் மூழ்கித் திளைப்பதற்குள் யாழ்ப்பாணத்தைப் பற்றிய சில ரஸமான விஷயங்களை மட்டும் சொல்லி விடுகிறேன். யாழ்ப்பாணம் இலங்கைத் தீவில் ஒரு பகுதியாக இருந்தாலும் அங்கு இருக்கும் போது தஞ்சை ஜில்லாவில் எங்கோ ஒரு இடத்தில் இருப்பது போன்ற பிரமையே ஏற்பட்டுக் கொண்டிருந்தது. காரணம் அங்குள்ள மக்களின் பண்பும், அந்த ஊரின் வளமும்தான். அத்துடன் இந்த நாடு தமிழ் நாட்டிலிருந்து சென்ற யாழ்ப் பாணருக்குப் பரிசாகக் கிடைத்த நாடாம். அதனால்தான் இதற்கு யாழ்ப்பாணம்' எனப் பெயர் வந்தது என்று கூறுகிறார்கள். அதற்குச் சான்றாகச் சில கவிதைகளையும் நமக்கு எடுத்துக் காட்டுகிறார்கள்.

ஈழநாட்டுத் தமிழ்மக்கள் தமிழ் வளர்த்த பெரியார்களுக்கு வரையாது வழங்கி வந்திருக்கிறார்கள். அவர்கள் வள்ளன்மையை எடுத்துக் காட்டவே சின்னத்தம்பிப் புலவர் இந்த அருமையான பாடலைப் பாடியிருக்கிறார்.

"பண்ணிற்றேயப் பொருள் முடிப்புக் கட்டிப்
பாடும் பாவலர்க்கு ஈந்திட என்றே
எண்ணிப் பொன்முடிப்புக் கட்டிவைத்திடும்
ஈழமண்டல நாடெங்கள் நாடே!"

என்று ஈழநாட்டின் கொடைத்திறனை அழகாகப் பாடிக் காட்டியிருக்கிறார். இப்படிப்பட்ட சிறப்புமிக்க ஈழநாட்டுக்கு மேலும் மேலும் சிறப்பளித்து வரும் அருமையான ஊர் யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணத் தமிழ் மக்கள்தான் ஈழநாடு முழுவதும் பரவியிருக்கிறார்கள். அவர்கள் இல்லாத இடமே ஈழத்தில் இல்லை என்று சொல்லி விடலாம். இன்றைய தினம் நல்ல முறையில் தமிழ் வளர்ந்திருக்கிறது என்றால் அதற்கு ஆறுமுக நாவலரின் தொண்டுதான் காரணம் என்று அறிஞர்கள் எல்லாரும் ஒப்புக்கொண்டு விடுவார்கள். அப்பேர்ப்பட்ட புலவரை ஈன்ற யாழ்ப்பாணப் பூமிக்குள் காலடி வைத்தவுடன் எனக்கு ஒரு தனி உற்சாகமே ஏற்பட்டுவிட்டது. உடல் பூரித்து விட்டது. இத்தனைக்கும் மேலே யாழ்ப்பாண மக்கள் எங்களிடம் காட்டிய அன்பில் ஆகாயத்திலேயே பறப்பது போலிருந்தது. ஆமாம்! நாங்கள் ஈழத்தை விட்டு யாழ்ப்பாணத்திலிருந்துதான் புறப்பட்டோம். வெல்வெட்டித் துறை விமான நிலையத்திலிருந்து சென்னைக்குப் பறந்து வந்தோம்!

முடிவுரை

ஈழத்தை விட்டு வந்து எத்தனையோ நாட்கள் ஆகிவிட்டாலும் இலங்கையில் நான் பார்த்த காட்சிகளை மறக்க முடியவில்லை. இலங்கையின் அழகு மிக்க இயற்கைக் காட்சிகள் கண் முன்னால் வருகின்றன. அங்குள்ள தமிழ் மக்கள் எல்லாரும் காட்டிய அன்பும் ஆதரவும் ஒன்றன்பின் ஒன்றாக வந்து நினைவு அடிக்கின்றன. எக்காலத்திலும் ஆனந்தம் தரக்கூடிய இந்தப் பிரயாணத்தை ஏற்பாடு செய்தவர்களுக்கும், இலங்கையில் பிரயாணம் சுகமாக நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்த பேரன்பர்களுக்கும் எப்படி நன்றி கூறுவது என்றுதான் தெரியவில்லை.

கொழும்பு நகரில் தமிழ் நாட்டிலிருந்து சென்ற பல தமிழர்கள் இருக்கிறார்கள். அவர்களில் பல இளைஞர்கள் சேர்ந்து 'பாரதி இளைஞர் சங்கம்' என்று ஒரு சங்கம் அமைத்திருக்கிறார்கள். அந்தச் சங்கத்தின் தலைவராகத் திரு கல்கி தாசன் இருந்து தொண்டாற்றி வருகிறார். அவர்தான் இந்த ஈழநாட்டுப் பிரயாணத்தை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்தார். அவரையும் அவருடைய சங்கப் பிரதிநிதிகளையும் கொழும்பு ரத்மலானை விமான நிலையத்தில் சந்தித்தோம். பிறகு ஈழநாட்டில் நாங்கள் சென்ற இடங்களுக்கெல்லாம் தொடர்ந்துவந்து யாழ்ப்பாணம் வெல்வெட்டித்துறை விமான நிலையத்தில் எங்களை வழியனுப்பி வைத்தார்கள்.

இலங்கையில் நாங்கள் எந்த ஊருக்குப் போனாலும் அங்கெல்லாம் எங்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொடுத்து உதவியவர் திரு கே. வி. எஸ். வாஸ் அவர்கள். இவர் இலங்கையில் பிரபலமாகத் திகழும் தமிழ்த் தினசரியான வீரகேசரியில் செய்தி ஆசிரியராகப் பணியாற்றுகிறவர். இவரைப் பற்றிப் பேராசிரியர் கல்கி அவர்கள் கூறும்போது "அறுபது டன் ருஷ்ய டாங்கி" என்று குறிப்பிட்டிருந்தார். அதைப் படித்தபோது ஏதோ உபசாரத்துக்காக அப்படி எழுதியிருந்தாரோ என்று எண்ணியிருந்தேன். ஆனால் அது முழுக்க முழுக்க உண்மை என்பதை இந்தப் பிரயாணத்தின்போது உணர்ந்து கொண்டேன்.

இவர்களுக்கெல்லாம் நன்றி சொல்வதற்கு முன்னால் எங்கள் பத்திரிகையின் அதிபரும், ஆசிரியருமான திரு சதாசிவம் அவர்களுக்கு இந்தப் பிரயாணத்துக்கு அனுமதியளித்து உதவியதற்காக என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடைசியாக இலங்கைத் தமிழ் மக்களைப் பற்றி ஒரு விஷயத்தை மட்டும் கூறிவிட்டு இந்தக் கட்டுரையை முடித்து விடுகிறேன்.

இலங்கைத் தமிழ் மக்களிடம், அறிவும், சிறந்த கல்வியும், திறமையும், ஆற்றலும், உழைப்பும் வேண்டியமட்டும் இருக்கின்றன. ஆனால் ஒன்றுமட்டும் இல்லை. அவர்களுக்குள் ஒற்றுமை இல்லை! ஒற்றுமை இல்லை! ஈழநாட்டுத் தமிழ்மக்கள் மட்டும் தங்களுக்குள் இருக்கும் வேற்றுமைகளை மறந்து ஒற்றுமையுடன் நின்று போராடினால் அவர்கள் கோரிக்கைகள் எல்லாம் எளிதில் நிறைவேறும். தமிழ் நாட்டின் ஆதரவும் அவர்களுக்குக் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த வார்த்தையை மட்டும் அவர்களுக்குக் கூறிவிட்டு ஈழத் தாயிடமிருந்தும், நேயர்களிடமிருந்தும் தற்போதைக்கு விடை பெற்றுக் கொள்கிறேன். வணக்கம்.



நான் சொன்னதை மறக்க வேண்டாம். பகலிலோ இரவிலோ, என்ன செய்துகொண்டிருந்தபோதிலும், எந்தக் காரியத்தில் ஈடுபட்டிருந்தாலும் சரி, வேடிக்கை விஷயங்களில் காலங் கழிக்கும் போதும் சரி, ஆண்டவனை நினைவில் வைத்துக் கொண்டே எல்லாம் செய். அவன் எப்போதும் பக்கத்திலிருக்கிறான். அவனை உதாசீனம் செய்யாதே!

உன்னைப் பார்க்க வந்த ஒரு நண்பனை நீ உதாசீனம் செய்ய மாட்டாயல்லவா? நண்பர்களுக்குள் உத்தம நண்பனை, பகவானை உதாசீனம் செய்யலாமா? அவனை மறக்காதே! நாம் எந்தத் துறையில் விரதம் எடுத்துக் கொண்டிருக்கிறோமோ, அந்தத் துறையில் செய்ய வேண்டியதை நன்ருகச் செய்ய வேண்டுமல்லவா? அறியாததை அறிந்து கொள்ள வேண்டுமல்லவா? பழகாததைப் பழக வேண்டும். உனக்காக நானும் ஆண்டவனை இறைஞ்சி வருகிறேன். மனத் தளர்ச்சி வேண்டாம்.

உன் நோய் தீர்ந்து சுகம் பெற வேண்டுமென்று நான் பிரார்த்திக்கவில்லை. நோயைப் பொறுக்கும் சக்தி உனக்கு ஆண்டவன் அருள வேண்டுமென்றே நான் பிரார்த்தனை செய்கிறேன். அவனுடைய உள்ளம், உனக்கு நோய் தீர வேண்டுமென்றிருந்தால் அது தீரும். பொறுத்துக் கொள்ளும் சக்தி பெற வேண்டும் என்று பிரார்த்தனை செய்கிறேன். நோயைத் தந்தவன் பொறுத்துக் கொள்ளும் சக்தியும் தருவான்.

அவன் இட்டபடி எல்லாத் துன்பத்தையும் பொறுத்துக் கொள்ள வேண்டும். அதற்கு உன் உள்ளத்தைப் பழக்கிக் கொள். அதற்கு வேண்டிய ஆற்றலைத் தரும்படி பகவானை வேண்டிக் கொள். நமக்கு வரும் நோய்கள் துன்பமன்று. ஆண்டவன் நம்மை மேல் தூக்கவே அவற்றைத் தருகிருன்.

இதை உணராதபடியால் மக்கள் கஷ்டப்படுகிருர்கள். துறவிகளாகிய நாம் உணர வேண்டும். 'நம்முடைய குணங்களையும் ஆற்றலையும் நல்வழியில் வளர்க்கவே இந்த நோய் வந்திருக்கிறது. இது ஆண்டவனுடைய அருள்' என்று



வர வேற்றுப் பொறுத்துக் கொண்டு நன்மையை அடைய வேண்டும். நாம் சுகங் கெட்டு, நோய்ப்பட்டுக் கிடக்கும் போதே ஆண்டவன் நம்மை மிக நெருங்கி நிற்கிறான். சுகமாக இருக்கும் போது நாம் அவனை விட்டு விலகி நிற்கிறோம், மறந்து விடுகிறோம். நோய்ப்பட்ட போதே அவன் இருப்பது நினைவுக்கு வருகிறது.



அவனே வைத்தியன். அவனைத் தவிர வேறு வைத்தியனைத் தேடாதே! அவனை முற்றிலும் நம்பு. நம்பினால் நலனைப் பெறுவோம். அவனை மறந்து, மருந்துகள் அருந்தி நோயை நீடிக்கச் செய்கிறோம். எந்த மருந்து யார் கொடுத்து நாம் அருந்தினாலும் அவன் இச்சையின்றி அந்த மருந்து ஆரோக்கியம் தராது. அவன் அனுப்பிய நோயை அவனே தீர்ப்பான். உடலுக்கு வந்த நோய், உயிருக்கு நன்மை தரும். அதற்காகவே அவன் நமக்கு நோய் தருவது.

காதலன் தரும் துன்பம் துன்பமாகாது. அன்பே வலியைத் தீர்க்கும். ஆண்டவனைக் காதலித்தோமானால் அவன் தந்த வலியும் நோயும் மறைந்து போகும். காதலன் தந்த வலி என்று உணர்ந்தோமானால், வலி மறைந்து போகும். காதலன் தரும் துன்பம் இன்பமேயாகும். என் பேச்சைத் தட்டாதே! பிரார்த்தனை செலுத்து. நானும் உனக்காகப் பிரார்த்தனை செய்வேன். என்னாலாவது கொஞ்சமே. ஆயினும் அதைச் செய்கிறேன்.

* * *

''பகவானுக்கு எல்லாம் தெரியும். நமக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை அவன் அறிவான். அவனுடைய அன்பு மெய்யன்பு. அதன் அளவை நாம் அறியவில்லை. அவனே நமக்கெல்லாம் ஆப்த சிநேகிதன். நம்முடைய உண்மை நலனை அவன் அறிந்தவன். இதை உணர்ந்தோமானால் இன்பம் துன்பம் இரண்டையும் அவன் தந்தது என்று பொறுத்துக்கொள்வோம். துன்பம் என்று எண்ணி நாம் வருத்தமடைகிறோம். உண்மையை உணர்ந்தால் வருத்தப்பட மாட்டோம். நம்மைத் துன்பப்படுத்தித் தூய்மைப் படுத்தவே அவன் துன்பங்கள் அருள்கிறான். நோயும் துயரமும் தருகிறான்; அவன் நம்முடைய பிரியமுள்ள தந்தை என்பதை உணராமல் அவனுடைய அருளை நோயாகக் கருதுகிறோம். அவன் அன்பை உணர்ந்தோமானால் துன்பமும் துயரமும் இன்பமாகும்.

''பகவான் எங்கேயோ தூரத்தில் இல்லை. நம்மிடையில் இருக்கிறான். மிக சமீபத்தில் இருக்கிறான். அவனைத் தேடி அலைய வேண்டியதில்லை. உன்னுடைய நோய் தீர்ந்தது என்று அறிந்து மிக மகிழ்ச்சியடைந்தேன். நான் அவனைச் சீக்கிரமே அடைவேன். தரிசனம் மிக அண்மையிலிருக்கிறது என்று தோன்றுகிறது. சில நாட்களில் அவன் பாதம் அடைவேன். எனக்காக நீயும் உனக்காக நானும் பிரார்த்தனை செலுத்துவோமாக.''

இந்தக் கடிதம் எழுதிய வாரத்தில் துறவி லாரென்ஸ் தேக வியோகம் அடைந்தார்.

[இந்தக் கிறிஸ்துவத் துறவி லாரென்ஸ் என்கிற கட்டுரைத் தொடர் இதனுடன் முடிவு பெற்றது. இவற்றில் நான் எழுதியிருப்பது அனைத்தும் இங்கிலாந்தில் **Pater Noster - Series No. 13.** பாட்டர் நாஸ்டர் - 13-வது வெளியீடு. **Burns Oates, Wash Bourne** - பார்ன்ஸ் ஓட்ஸ், வாஷ்போர்ன் இந்தக் கம்பெனியின் பிரசுரமாகிய நூலிலிருந்து எடுத்து எழுதப்பட்டது. சில கிறிஸ்துவ நண்பர்கள் இந்தக் கட்டுரைகளில் நான் என்னுடைய சொந்தச் சரக்கைப் புகுத்தியிருக்கிறேன் என்று எண்ணி எனக்கு எழுதியிருக்கிறார்கள். அது முற்றிலும் தவறு. கிறிஸ்துவ பக்தர்கள் பிரசுரித்திருக்கும் நூலிலிருந்து ஏதும் மாற்றி விடாமல் தமிழ்ப்படுத்தியிருக்கிறேன். —ராஜாஜி]



என்
இரட்டிப்பு
உயர்வின் ரகசியம்



எனக்கு கிடைத்த இரட்டிப்பு பிரமோஷனின் ரகசியத்தை என் எஜமானனின் அந்தரங்க காரியதரிசி தீர்த்து வைத்தான். வேலையில் நான் மிகவும் கெட்டிக்காரன் என்று எப்பொழுதும் என் எஜமானர் என்னைப்பற்றி நினைத்ததுண்டு. ஆனால் நேரம் கழித்து வரும் என் வழக்கமும் அவருக்கு தெரிந்ததுதான். ஒரு வெஸ்ட் எண்ட் வாச்சு வாங்கி அணிந்த கழித்த 12 மாதங்களில் நான் சீக்கிரமே வேலை துவங்கியதில் அவருக்கு மிகுந்த திருப்தி. அதன் பலன்தான் எனக்கு வேலையில் பெரிய 'உயர்வு'. இந்த அதிகரித்த ஊதியம் நான் வாச்சுக்காக கொடுத்ததைவிட இரட்டிப்பு அதிக பலனை எனக்கு அளித்துள்ளது! என் யோஜனையை பின்பற்றி, வேலை உயர்விற்கு ஒரு வெஸ்ட் எண்ட் வாச்சு வாங்குங்கள்!

ந்யூ கீப்ஸேக்
ஸ்டீல்.........ரூ. 154
ரோல்டு கோல்டு ரூ. 189

WEST END WATCH CO.

BOMBAY • CALCUTTA

மாலவல்லியின் தியாகம்

கி.ரா.கோபாலன்



அத்தியாயம் 4

புலிப்பள்ளியாரின் புகைச்சல்

கலங்கமாலரையரின் சூழ்ச்சி வலையைப்பற்றிப் பராந்தகனும் புலிப்பள்ளியாரும் விவாதித்துக்கொண்டிருந்தார்கள். கொடும்பாளூர் வீரர்கள் பழையாறைச் சோழ வம்சத்தினரை அழிக்க விட மாட்டார்கள் என்று பராந்தகன் கூறினானல்லவா? "கலங்கமாலரையரின் சூழ்ச்சியை எப்படிப் பொறுத்துக்கொண்டிருக்க முடியும்? கலங்கமாலரையரின் ராஜதந்திரம் அங்குதான் கொஞ்சம் பலவீனமடைந்ததாகி விட்டது. அதோடு மட்டுமல்ல; தஞ்சை மன்னர் உங்களோடெல்லாம் நட்புரிமை பாராட்டுவது கூட அவருக்குப் பிடிப்பதில்லை. எங்கள் இளவரசர் கொடும்பாளூர் இளவரசியை மணந்து கொள்ள ஆசைப்படுவது கூட அவருக்குப் பிடிக்கவில்லை. இளவரசரையும் மன்னரின்மனத்தையும் என் மனத்தையும் மாற்றுவதற்காக எவ்வளவோ பாடுபட்டார். மன்னர் சிறிது மனம் மாறினாலும் இளவரசர் கொடும்பாளூர் இளவரசியைத்தான் மணப்பேன் என்று ஒரே பிடிவாதமாக இருந்து விட்டார். அதிலிருந்துதான் இளவரசரின் மனத்திலுள்ள ஆழ்ந்த காதலும் பற்றுதலும் எனக்கு விளங்கின..." என்றார் புலிப்பள்ளியார்.

"இது அனுதாபப்படக்கூடிய விஷயத்தான்" என்றான் பராந்தகன்.

"நாம் அனுதாபப்படுவதில் பலன் என்ன?" என்றான் ஆதித்தன்.

"அது உண்மை. முக்கியமாக நம்மைப் போல் அனுபமாவுக்கும் அனுதாபம் ஏற்பட வேண்டுமே?" என்று கூறினான் பராந்தகன்.

"ஒரு பெண் இன்னொரு ஆண் மகனின் உள்ளத்தில் பொங்கிய காதலை உள்ளபடி உணர்ந்தாளானால் அவள் மனமும் உருகாமல் இருக்காது. சாதாரணமாகவே பெண்களின் மனம் மிகவும் இளக்கமுள்ளது" என்றார் புலிப்பள்ளியார்.

"சாதாரணப் பெண்களின் மனம் இளக்கமானதுதான். ஆனால் வீரர் குலத்துதித்த பெண்களின் மனம் மிகவும் கடினமானது. அதுவும் எங்கள் அனுபமா இருக்கிறாளே, மிகவும் நெஞ்சழுத்தமுள்ளவள். அவள் கனவுகள் வேறு. அவள் காதல், கண்ணோட்டமெல்லாம் வேறெங்கோ நிலைத்திருக்கிறது. இதை நினைக்கும் .போதுதான் எங்கள் மனம் சங்கடமடைகிறது" என்றான் ஆதித்தன்.

"அவள் மனப் போக்கை உங்களால் மாற்ற முடியாதா? இவ் விஷயத்தில் எங்கள் மன்னரின் ஆவல் மட்டுமல்ல, இந்த சாம்ராஜ்யத்தையே ஒரு குடையின் கீழ் ஆண்டு வரும் பல்லவ சக்கரவர்த்தியின் மன ஆவலையும் நீங்கள் யோசித்துப் பார்க்க வேண்டும்" என்றார் புலிப்பள்ளியார்.

"ஒரு காரியம் என்றால் யோசிக்காமல் இருப்போமா? இது யோசித்து முடிவு செய்ய வேண்டிய விஷயம்தான். நீங்கள் சில காலம் பொறுத்திருந்தால் அவளைக் கலந்தாலோசித்து அவள் மனத்தை மாற்றி விவாகத்தைச் சிறப்பாக நடத்த முடிவு செய்யலாம்" என்றான் ஆதித்தன்.

''ஆமாம்! ஆமாம்! அப்படித்தான் செய்ய வேண்டும்'' என்ருன் பராந்தகன்.

''சில நாட்கள் பொறுப்பதில் எவ்விதத் தடையுமில்லை. நான் இங்கு வந்ததற்கு எங்கள் மன்னருக்கு ஏதேனும் நம்பிக்கையாகச் சமாதானம் சொல்லவேண்டாமா?'' என்ருர் புலிப்பள்ளியார்.

''இவ்வளவு அனுபவமும் கெட்டிக்காரத்தனமும் உள்ள அமைச்சராக விளங்கும் உங்களுக்கு, மன்னருக்கு நம்பிக்கை ஏற்படும் வண்ணம் சமாதானம் சொல்லத்தாஞ தெரியாது?'' என்ருன் பராந்தகன்.

''அது எனக்குத் தெரியும். அவருக்கு நம்பிக்கையும் சமாதானமும் ஏற்படும் படியாகச் செய்து விடுகிறேன். நீங்களும் கொஞ்சம் முயற்சி செய்து இந்த நல்ல காரியத்தை எவ்விதத் தடங்கலும் இல்லாமல் முடிக்கப் பாருங்கள்'' என்ருர் புலிப்பள்ளி கொண்டார்.

''நாங்கள் முடிக்காமல் இருப்போமா? இதுதானே எங்கள் கவலை. ஆனல் இதில் ஒரு பெரிய சங்கடம் இருக்கிறது. நெடுநாட்களாகச் சோழ வம்சத்தினருக்கும் எங்களுக்கும் பெண் கொடுத்துக் கொண்டதினுல் நெருங்கிய சம்பந்தமும் தொடர்பும் இருக்கிறதென்பது தங்களுக்கெல்லாம் தெரியாத விஷயமல்ல. முக்கியமாகப் பழையாறையி லிருந்த எங்கள் மாமன் குமராங்குச சோழரின் மகன் விஜயனுக்கும் எங்கள் அனுபமாவுக்கும் குழந்தைப் பருவத்திலிருந்தே நெருங்கிய நட்பு ஏற்பட்டிருக்கிறது. நாளடைவில் அவர்களுடைய நட்பு காதலாகப் பரிணமித்திருக்கிறது. அவளுக்கென்னவோ அவனிடம் தீவிரப்பற்றுதலும் மோகமும் ஏற்பட்டிருக்கின்றன. உறவு முறையிலுள்ள நாங்கள் அவர்களுடைய பழக்கத்தைத் தடுக்க முடியவில்லை. பாரம்பர்யமாகப் பெண் கொடுத்துப் பெண் எடுப்பதினல் ஒரு உரிமையை நாங்கள் ஏற்படுத்திக்கொண்டு விட்டோம். இப்பொழுது விஜயனுக்கு அனுபமாவிடம் உரிமை கொண்டாடும் அதிகாரம் ஏற்பட்டு விட்டது. அனுபமாவுக்கும் அவனையே திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று எண்ணம் இருப்பதால் அவள் மனத்தை மாற்றுவது சிறிது கடினம் என்றுதான் படுகிறது'' என்ருன் ஆதித்தன்.

''சோழ வம்சத்தினர் ஒரு காலத்தில் பிரசித்தியும் பெருமையும் உடையவர்களாக இருந்தார்கள். அந்தக் காலத்தில் உங்கள் குடும்பத்தினர் அவர்களோடு சம்பந்தம் செய்து கொண்டதில் தவறு ஒன்றுமில்லை. ஆனல் இன்றுள்ள நிலை வேறு. இன்று அவர்கள் இருக்கும் நிலையை எண்ணிப் பார்க்க வேண்டாமா? உங்களுக்குச் சரிசமமான சம்பந்தம் வேண்டாமா? இன்று உங்களுக்குள்ள பெருமை என்ன? தஞ்சையர்கோனுக்குள்ள பெருமை என்ன? இதைப்பற்றிச் சிறிது சிந்தித்துப் பாருங்கள்'' என்ருர் புலிப்பள்ளியார்.



''சிந்தித்துப் பார்க்க வேண்டியது தான். சிந்தித்துப் பார்த்துக் கொண்டுதா னிருக்கிறோம். நாங்கள் சிந்தித்து என்ன பயன்? காதல் கண் மூடித்தனமானது. மனத்தில் காதல் ஏற்பட்டு விட்டால் அது தராதரம் பார்ப்பதில்லை. இளவரசிக்கு எல்லா வற்றையும் நாங்கள்தான் விளக்க வேண்டும்'' என்றான் ஆதித்தன்.

''நீங்கள் முயன்றால் புத்திசாலி யான அவள் உணர்ந்து கொள்ளா



மல் இருக்க மாட்டாள்'' என்றார் புலிப்பள்ளியார்.

''கூடுமானவரையில் நாங்கள் முயற்சி செய்கிறோம்'' என்றான் ஆதித்தன்.

''அதுவரையில் சந்தோஷம். உங்கள் முயற்சி வெற்றி யளிக்கட்டும்.''

''சந்தோஷம். விவாகம் பற்றிய ஆலோசனை இதோடு முடிவுற்றது என்று நினைக்கிறேன். நான் மதுரை அமைச்சரோடு தோட்டத்தில் உல்லாசமாகப் பேசிக் கொண்டிருந்தேன். அந்தச் சமயத்தில் பணியாள் வந்து அழைத்ததினால் அவரை அங்கேயே விட்டு விட்டு வரும்படி நேரிட்டது. பாவம்! அருண்மொழியார் எனக்காகக் காத்திருப்பார். நான் போகிறேன்'' என்று சொல்லி விட்டுப் பராந்தகன் சென்றான்.

மதுரை அமைச்சர் என்ற வார்த்தையைக் கேட்டதும் புலிப்பள்ளியார் திகைப்படைந்தார். அந்தச் சமயத்தில் மதுரை அமைச்சர் கொடும்பாளூருக்கு வரக் காரணம் என்ன என்ற குழப்பம் அவருக்கு ஏற்பட்டது. அவர் ஆதித்தனின் முகத்தை வியப்போடு பார்த்துக் கொண்டே, ''மதுரை அமைச்சர் இங்கு வந்திருக்கிறாரா?'' என்று கேட்டார்.

''ஆம்! அருண்மொழியார் நேற்று வந்தார். சாதாரண விருந்தினராகத் தான் வந்திருக்கிறார். அவர் சில நாட்கள் இங்கே தங்கினாலும் தங்கலாம்'' என்றான் ஆதித்தன்.

''நீங்கள் அவர் சாதாரண விருந்தினராக வந்திருப்பதாகச் சொல்வதை என்னால் நம்ப முடியவில்லை. பல்லவ சாம்ராஜ்யத்துக்கு நேர் வைரியாக இருக்கும் பாண்டிய மன்னரின் அமைச்சர் பல்லவ சாம்ராஜ்யத்துக்கு அடங்கிய சிற்றரசராகவும் நெருங்கிய நட்பினராகவும் இருக்கும் ஒரு அரசரிடம் வந்து விருந்தாளியாக இருந்து நட்புரிமை பாராட்டுவதென்றால் இதில் ஏதோ விபரீதம் இருக்கத்தான் வேண்டும்!''

''இதில் விபரீதமாக எடுத்துக் கொள்வதற்கு எதுவுமே இல்லை. நான் பல்லவ சாம்ராஜ்யத்துக்கு அடங்கியவன்தான்;

நட்பினன்தான். ஆனால் பாண்டிய நாட்டிலுள்ள ஒருவரோடு நட்புப் பாராட்டுவது விபரீதமென்றால் இதில் ஏதேனும் அர்த்தமுண்டா? இன்றல்ல, நெடு நாட்களாக அருண்மொழியார் எங்களுக்கு நட்பினர். அவர் அடிக்கடி இங்கு வந்து போவது வழக்கம். இதைத் தவறாக எடுத்துக் கொள்வது விவேகமாகாது. நீங்கள் இங்கே வந்து போவதில்லையா? அதைப் போலத்தான்'' என்றான் ஆதித்தன்.

புலிப்பள்ளி கொண்டார் ஏதோ ஆழ்ந்த யோசனையில் இருப்பவர் போல் இருந்து விட்டு, ''உங்கள் மனம் நல்லதாக இருக்கலாம். ஆனால் எதிரிகளின் மனம் உங்கள் மனம் போல் இருக்கும் என்று நம்பிவிட முடியாது. அருண்மொழியார் அரசியல் சதுரங்கத்தில் கைதேர்ந்தவர். விருந்தாளி போல் வந்து விஷம் வைத்துவிடுவார்'' என்றார்.

''அப்படியா...? அவரைப் பற்றி நீங்கள் இப்படியெல்லாம் கருதுவது சகஜம். அவரை நம்பாதது இயற்கை. ஏனென்றால் நீங்கள் தஞ்சை மன்னரின் அமைச்சரல்லவா? ஆனால் மதுரை அமைச்சர் அருண்மொழியாரைப் பற்றி நினைப்பது போல் என்னை நினைத்து விடாதீர்கள். ஒரு சரியான ஆண்மகன் இன்னொருவருடைய வலையில் அவ்வளவு எளிதாகச் சிக்கி விட மாட்டான்'' என்றான் ஆதித்தன்.

''உங்களை நம்பலாம். ஆனால் உங்களுக்கு அவருடைய நட்பு மிகவும் ஆபத்தானது. தகாதது என்பதுதான் என் அபிப்பிராயம்!''

''எனக்கு எப்படி இந்த நட்பு தகாததாகவோ ஆபத்தானதாகவோ இருக்குமென்பதுதான் விளங்கவில்லை'' என்றான் ஆதித்தன் வியப்புடன்.

''எப்படியா? பல்லவ மன்னருக்கு நீங்கள் பாண்டிய மன்னரின் அமைச்சரோடு நட்பு பாராட்டுவது பிடிக்காது. அதனால் பல்லவ மன்னரின் விரோதம் உங்களுக்கு ஏற்படும். அவருடைய விரோதம் உங்களுக்கு ஏற்பட்டால் அது ஆபத்தாக முடியாதா?'' என்றார்.

''பல்லவ மன்னரின் விரோதம் எனக்கு ஏற்படும் என்பதற்காக ஒரு அரிய நண்பரை நான் இழக்கச் சித்தமாயில்லை'' என்றான் ஆதித்தன், அலட்சியமாகச் சிரித்துக் கொண்டே.

''நீங்கள் இவ்வளவு அலட்சியமாக இதைச் சொல்லி விட முடியாது. நீங்கள் எல்லாவற்றையும் கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும். பல்லவ மன்னருக்கு ஜன்ம வைரியாக இருக்கும் பாண்டிய மன்னரின் அமைச்சரோடு கூடிக் குலாவுவது பல்லவர்கோன் மனத்தில் சந்தேகத்தைத்தான் எழுப்பும்.''

''பிறர் மனத்தில் எழும் சந்தேகங்களுக்கெல்லாம் நாம் எப்படிப் பொறுப்பாளியாக முடியும்?''

''பொறுப்பாளியாக முடியாதுதான். ஆனால் பிறர் மனத்தில் சந்தேகங்கள் எழும் வண்ணம் நாம் நடந்து கொள்ளக் கூடாதல்லவா?''

ஆதித்தன் ஏளனமாகச் சிரித்தான். ''ஒரு சுத்த வீரன் பிறருடைய சந்தேகங்களுக்கெல்லாம் பயந்து தன் மனசாட்சியைக் கொன்று அடிமைப்பட்டுக் கிடந்து கோழையாக மாட்டான்'' என்றான் ஆத்திரத்துடன்.

''அப்படி என்றால் நீங்கள் இவ் விஷயத்தில் பல்லவ மன்னரின் விரோதத்தைச் சம்பாதித்துக் கொள்ளச் சித்தமா யிருக்கிறீர்கள், இல்லையா?''

''நான் ஒருவரிடம் நட்பு பாராட்டுகிறேன் என்பதற்காக ஒருவர் என்னை விரோதியாகக் கருத நேர்ந்தால் அதற்கு நான் என்ன செய்ய முடியும்?''

''நீங்கள் மிகவும் பிடிவாதமாகப் பேசுகிறீர்கள். இதனால் வரக்கூடிய தீமையையும் உணர்ந்தால் உங்களுக்கு நன்மை'' என்றார்.

''நான் பிடிவாதம் பிடிக்கவில்லை. பல்லவ மன்னர் பெரும் படை கொண்டு இவ்வுலகத்தையே ஒரு குடையின் கீழ் ஆளக்கூடிய திறமையுடையவராக இருக்கலாம். நாம் அவருக்கு அடங்கி விசுவாசம் காட்டக் கூடியவர்களாகவும் இருக்கலாம். அதற்காகத் தன் சொந்த வாழ்வில் பிணைந்திருக்கும் நட்பு, உறவு, காதல், கடமை இவைகளை யெல்லாம் துறக்க வேண்டுமென்று அர்த்தமில்லை. பெரிய சாம்ராஜ்யத்தின் அதிபதி யென்றால் அவரிடம் அன்பு பாராட்டி உண்மையாகவும் நேர்மையாகவும் நடந்து கொள்ளலாம். ஆனால் நம்முடைய சொந்தமான உணர்ச்சிகளையும் சிதைத்துக் கொண்டு வாழவேண்டுமென்று அர்த்தமில்லை. இதற்கு எங்கள் நெஞ்சம் இடம் கொடுக்காது. தஞ்சை மன்னர் முத்தரையர் போன்றவர்கள் வேண்டுமானால் தங்களுடைய சொந்த மன உணர்ச்சிகளையும் அடிமையாக்கிப் பல்லவ மன்னரின் தயவுக்காகக் காத்துக் கிடக்கட்டும். நாங்கள் அப்படிப்பட்டவர்களல்ல'' என்றான் ஆவேசத்தோடு.

ஆதித்தன் ஆவேசத்துடனும், கண்டிப்பான குரலிலும் பேசியதைக் கேட்ட புலிப்பள்ளியாருக்குச் சிறிது ஆத்திரமும் கோபமும் எழுந்தன. ''எங்கள் மன்னர் முத்தரையரைப் பற்றியா இப்படிச் சொல்கிறீர்கள்? அவர் உங்களைப்போல் மனசாட்சியை விற்றவரல்ல. நட்புத்


'அனாஸின்'
வலியை வெல்லுவதற்கான
நான்கு மருந்துகளின் கலப்பாகும்
1. க்வினையின் சல்பேட் 2. காப்பின்
3. பினாஸிடின் 4. ஆஸிடில்ஸாலிஸிலிக் ஆஸிட்
வலிகளுக்கு நிவாரணமளிப்பதில் புகழ் பெற்ற 'அனாஸின்' விஞ்ஞான முறையில் சேர்க்கப்பட்ட நான்கு மருந்துகளின் கலப்பாகும். இவைகள் நரம்புகளின் கேந்திர ஸ்தானங்களில் கூட்டாக வேலை செய்து, தலைவலி, ஜலதோஷம் ஜுரம், பல்வலி, மற்றும் தசைவலிகளுக்குத் துரிதமாயும் அபாயமின்றியும் நிச்சயமாயும் நிவாரணம் அளிக்கிறது. வலிகளுக்குத் துரித நிவாரணமளிப்பதில் அனாஸினுக்கு இணையொன்றில்லை ... அனாஸினைப் போல தீங்கு விளைவிக்காதவை வேறொன்றில்லை. ஆகவே ஞாபகமிருக்கட்டும் 'அனாஸின்' ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பாகும். அது இருதயத்திற்குத் தீங்கு விளைவிக்கவோ அல்லது வயிற்றுக் கோளாறுகள் உண்டு பண்ணவோ செய்யாது. 'அனாஸின்' லக்ஷக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் அளிக்கிறது. 'அனாஸின்' விலை ஒவ்வொருவர் சக்திக்கும் ஏற்றது. ஒரு பாக்கெட்டின் விலை 12 நயா பைஸா மட்டுமே.
நான்கு
மருந்துகளின்
சேர்க்கையான
'அனாஸின்'
வேண்டுமென்றே
கேளுங்கள்
WILL NOT UPSET THE STOMACH
DOES NOT HARM THE HEART
ANACIN
TABLETS
10 नये पैसे 1957
2 नये पैसे 1957
ஒரு பாக்கெட்டின் விலை 12 நயா பைஸா

துரோகம் செய்கிறவரல்ல. இப்பொழுது நீங்கள் ஆத்திரமாகவும் கோபமாகவும் பேசுவது எதில் கொண்டு போய் விடும் என்பதை உணராதது தான் வருத்தமாயிருக்கிறது. பல்லவ மன்னர் சீறியெழுந்தால் என்ன நடக்கும் என்பதை இனிமேலாவது மனப்பதற்றத்தை அடக்கிக்கொண்டு சிந்தித்துப் பாருங்கள்'' என்றார் படபடப்போடு.

இம் மாதம் மியூஸியம் தியேட்டரில் ஏ. எஸ். ஐயங்கார் அவர்களின் பேத்தியான பேபி ஹேமாவின் நடன அரங்கேற்றம் ஏராளமான ரஸிகப் பெருமக்களின் ஆதரவில் நடந்தது. மேற்படி நடன அரங்கேற்றத்துக்குத் தலைமை தாங்கிய பேராசிரியர் ஆர். சீனிவாசன் அவர்கள் குழந்தை ஹேமாவின் கலைத் திறமையை மிகவும் பாராட்டிப் பேசினார். அவள் மேன்மேலும் அந்தத் துறையில் அபிவிருத்தி யடைய வேண்டும் என்று அவர் ஆசி கூறினார்.



ஆதித்தன் அலட்சியமாகச் சிரித்துக்கொண்டே, ''என்னை இப்படியெல்லாம் பயமுறுத்தலாம் என்ற எண்ணத்தின் பேரில்தான் தஞ்சை மன்னர் தங்களை இங்கு அனுப்பி இருக்கிறார் என்ற ரகசியம் இப்பொழுதுதான் புரிந்தது. தூதுவரைப்போல் வந்த உங்களிடம் வீரப்பிரதாபங்கள் பேச நான் விரும்பவில்லை'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் தருணத்தில் அவர்களிருந்த இடத்துக்குப் பராந்தகனும் மதுரை அமைச்சர் அருண்மொழியாரும் வந்து சேர்ந்தனர்.


நாங்கள் அங்கு வந்த சமயம் புலிப்பள்ளி கொண்டாருக்கும் ஆதித்தனுக்கும் ஏதோ ஒரு விஷயத்தைப் பற்றிக் கடுமையான விவாதம் நடந்திருப்பதாகப் பராந்தகனும் அருண்மொழியாரும் உணர்ந்து கொண்டனர்.

கோபத்தை அடக்க மாட்டாதவராக ஆசனத்திலிருந்து பதற்றத்தோடு எழுந்த புலிப்பள்ளியார் பராந்தகனையும் அருண்மொழியாரையும் கண்டதும் தம் சீற்றத்தை ஒருவிதமாக அடக்கிக் கொண்டு ஆசனத்தில் அமர்ந்தார். ஆதித்தனுக்கு ஏற்பட்டிருந்த கோபத்தை அவன் முகக் குறியால் அறிந்துகொண்ட பராந்தகன் எது விஷயம் பற்றி அவர்களுக்குள் விவாதம் ஏற்பட்டிருக்கும் என்பதை அறிந்து கொள்ளத் துடித்தான். புலிப்பள்ளியார் முன் கோபமும் பதற்றமும் உள்ளவர் என்பதை அவன் மிக எளிதாக உணர்ந்து கொண்டிருந்தான். கோபம் வரும் நேரத்திலெல்லாம் அவர் நீரிலிருந்து எடுத்துக் தரையில் போட்ட மீன்போல் குதிப்பது அவனுக்கே வியப்பாக இருக்கும். எப்படியோ அவர்களுடைய விவாதம் மிக உச்ச நிலையை அடைந்த சமயத்தில் தான் வந்து விட்டது அவனுக்குச் சிறிது ஆறுதலை அளித்தது.

ஆதித்தனுக்கும் புலிப்பள்ளியாருக்கும் ஏதோ ஒரு விஷயத்தில் கடுமையாக வாக்குவாதம் நடக்கும் தருணத்தில் தாம் அங்கு வந்தது தவறு என்று அருண்மொழியாரும் சிறிது தயங்கினார்.

'' தாங்கள் தஞ்சை அமைச்சரோடு ஏதோ ஒரு முக்கியமான விஷயம் பற்றிக் கடுமையாகப் பேசிக் கொண்டிருக்கும் சமயம் நாங்கள் வந்துவிட்டோம் என்று நினைக்கிறோம். இந்தச் சமயத்தில் நாங்கள் வந்தது ஏதேனும் இடையூறை ஏற்படுத்தி இருக்குமோ என்று நினைக்கிறேன்'' என்றான் பராந்தகன்.

'' நீங்கள் வந்தது எவ்வித இடையூறையும் ஏற்படுத்தவில்லை. இந்தச் சமயத்தில் நீங்கள் இருவரும் வந்தது வரவேற்கத் தக்கதுதான். அப்படியொன்றும் முக்கியமான விஷயங்களில் எங்களுக்குள் சர்ச்சை ஏற்பட்டு விடவில்லை. இரு அமைச்சர்கள் நமது அரண்மனைக்கு விருந்தினராக விஜயம் செய்துள்ளனர். நமது உள்ளம் தூய்மையானது. இவ்விருவரையும் வித்தியாசம் பாராமல் உபசரிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். ஆனால் இவ்விருவருமே ஏதோ வஞ்சக எண்ணத்தோடும் சூழ்ச்சியோடும் நம்மை நெருங்கி இருந்தார்களானால் நாம் என்ன செய்ய முடியும்? மதுரை அமைச்சர் இங்கு விருந்தினராக வந்திருப்பது பற்றித் தஞ்சை அமைச்சர் கொஞ்சம் வித்தியாசமாகக் கருதுகிறார். அவர் ஏன் அப்படிக் கருத வேண்டும் என்பது பற்றிச் சிறிது விவாதம் செய்



மதுரை 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையின் உதவி ஆசிரியர் திரு ஆர். ஜகந்நாதன் அவர்களின் புதல்வர் திரு ஜெ. சங்கர்ராஜுக்கும், சென்னை அக்மி டிரேடிங் கார்ப்பரேஷனைச் சேர்ந்த திரு எஸ். வி. பார்த்தசாரதி அவர்களின் புதல்வி திருமதி கல்யாணிக்கும் ஸ்ரீரங்கத்தில் ஜூலை மாதம் 8ந் தேதி வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது. வாழ்க மணமக்கள்!

தேன்; அவ்வளவுதான். தஞ்சை அமைச்சர் சிறிது முன்கோபமும் பதற்றமும் உடையவராக இருக்கிறார். அதன் காரணமாக எனக்கும் சிறிது கோபம் ஏற்பட்டு விட்டது. அவ்வளவுதான்" என்றான் ஆதித்தன்.

இதைக் கேட்டதும் அருண்மொழியார் சிறிது மனவருத்தம் அடைந்தவராக, "தஞ்சை அமைச்சர் புலிப்பள்ளியாரைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் அவரைச் சந்திக்க வாய்ப்பு ஏற்பட்டதே என்ற ஆவலில் தான் நான் இங்கே வந்தேன். ஆனால் உங்கள் விருந்தினராக வந்திருக்கும் என் மீது சந்தேகப் படுகிறார் என்பதை அறிந்ததும் எனக்கு மிகவும் மனவருத்தம் ஏற்பட்டு விட்டது. ஒரு அரச சமூகத்தில் அமைச்சராக இருந்து பணி புரியும் ஒருவர் திடீரென்று என்னைப் போன்றவர்கள் மீது சந்தேகப்படுவது அவ்வளவு புத்திசாலித்தன மாகாது" என்றார் அடக்கமான குரலில்.

இதைக்கேட்டதும் அடங்கி இருந்த புலிப்பள்ளியாரின் ஆத்திரமும் கோபமும் மறுபடியும் பீறிட்டு எழுந்தன. அவர் ஆசனத்திலிருந்து துள்ளி எழுந்தார். "நீங்கள் சொல்வதைப் பார்த்தால் நான் ஒரு புத்தி யில்லாதவன், அமைச்சர் பதவிக்குத் தகுதியற்றவன் போலல்லவா இருக்கிறது?" என்றார்.

பராந்தகன் சட்டென்று அவருக்குச் சமீபமாக நெருங்கி அவரது தோளைத் தொட்டு அழுத்தி ஆசனத்தில் இருத்தி, "அடாடா! நீங்கள் இப்படிக் கோபப் படலாமா? உங்களை அமைச்சர் வேலைக்குத் தகுதியற்றவர் என்று யாரால் சொல்ல முடியும்? தஞ்சை முத்தரையரின் ஆட்சியில் அமைச்சராக இருப்பதை யாரேனும் குறை சொல்ல முடியுமா? கோபப்படாதீர்கள். திடீர் திடீரென்று கோபப்படுவது அவ்வளவு லட்சணமாகாது என்ற கருத்தில் மதுரை அமைச்சர் அவர்கள் சொன்னார்களே தவிர வேறு வித்தியாசமாக எதுவும் சொல்லிவிடவில்லை" என்றான்.

"ஆம்! விருந்தினராக வந்த இடத்தில் ஒருவர்மேல் ஒருவர் கொண்டுள்ள பகை உணர்ச்சியைக் காட்டிக் கொள்வது அழகாகாது. நீங்கள் இருவரும் இந்த இடத்தில் நட்புரிமை கொண்டு பழகுவதுதான் நல்லது. அப்புறம் வேறு இடங்களில் வேண்டுமானால் உங்கள் பகை உணர்ச்சியைக் காட்டிக் கொள்ளலாம்" என்றான் ஆதித்தன்.

"நான் ஒரு அமைச்சன்—என்னைப் போல் அவரும் ஒரு அமைச்சர். இருவரும் தாங்கள் பணிபுரியும் அரசருக்கு விசுவாசமாக நடந்து கொள்ள வேண்டியதுதான். ஆனால் வந்த இடத்தில் பகைமையைக் காட்டிக் கொள்வதனால் தான் மிகவும் ராஜ விசுவாசத்தோடு நடந்து கொள்வதாக நினைத்துவிடக் கூடாது. இத்தகைய சந்தர்ப்பத்தில் பகை யுணர்ச்சி தெரியும்படி நடந்து கொள்வது பெருந்தன்மைக்குக் குறைவானது என்றுதான் நான் கருதுகிறேன்" என்றார் அருண்மொழியார்.

"பெருந்தன்மைக்குக் குறைவான முறையில் நான் நடந்து கொள்ள மாட்டேன். ஆதித்தரே! மதுரை அமைச்சர் தான் மரியாதைக்குறைவான வார்த்தைகளைப் பேசிவிட்டு நான் மரியாதைக் குறைவாக நடப்பதாகச் சொல்லுகிறார். இதை நான் சகித்துக் கொண்டிருக்க முடியாது" என்றார்.

"உண்மையாகவே உங்களுக்குப் பெருந்தன்மை இருக்குமானால் சகிப்புத் தன்மையோடு இருக்கவேண்டியதுதான். இந்த இடத்தில் சகிப்புத் தன்மை காட்ட முடியாவிட்டால் அது உங்கள் துரதிருஷ்டம்" என்றான் பராந்தகன்.

"நீங்கள் எல்லோரும் சேர்ந்து என்னை அவமானப்படுத்த நினைக்கிறீர்கள்" என்றார் புலிப்பள்ளியார் ஆத்திரத்தோடு.

ஆதித்தன் கலகல வென்று சிரித்தான். "நாங்கள் உங்களை அவமானப்படுத்தவுமில்லை. அவமானப்படுத்த விரும்பவுமில்லை. நீங்களாகவேதான் உங்கள் மனக்கசப்பையெல்லாம் வெளியே காட்டிக் கொண்டு அவமானத்துக்குள்ளா

கிறீர்கள். நீங்கள் உங்கள் அரசருக்காக ஏதோ ஒரு காரியத்தைச் சொல்லிப் பதில் தெரிந்துகொண்டு போக வந்தீர்கள். உங்கள் காரியத்துக்குரிய பதில் கிடைத்து விட்டது. அதோடு நிற்காமல் உங்களைப்போல் விருந்தினராக வந்திருக்கும் மதுரை அமைச்சரைப் பற்றித் தவருகப் பேசியதுமல்லாமல் எங்களுக்கும் உபதேசம் செய்யத் தொடங்கி விட்டீர்கள். உங்களுடைய வார்த்தைகளுக்குத் தக்க பதிலை நாங்கள் கொடுக்கத் தானே வேண்டியிருக்கிறது. இதில் கோபப்படுவதினால் என்ன பயன்? அமைதியாக உட்காருங்கள். மனத்தில் உள்ள குரோதத்தை மறந்து பழகுவதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டால் அது பொன்னான சந்தர்ப்பமல்லவா? நீங்கள் ராஜ விசுவாசமுள்ளவர்கள் தான். உங்கள் ராஜவிசுவாசத்தை எந்த இடத்தில் எந்த முறையில் காட்ட வேண்டுமோ அந்த முறையில் காட்டுவதுதான் நலம். ஆனால் இந்த இடத்தில் நீங்கள் என்னுடைய விருந்தினராக வந்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் உங்கள் மனத்திலுள்ள பகை யுணர்ச்சியைக் காட்டி எங்கள் மனத்துக்கு வருத்தம் ஏற்படும்படி செய்ய வேண்டாம்'' என்று கூறினான்.

மிகவும் வருத்தம் நிறைந்த முகக் குறியோடு தோன்றிய அருண்மொழியார் முகத்தில் மலர்ச்சி ஏற்பட்டது. ''நான் தஞ்சை அமைச்சரிடம் பெருமதிப்பு வைத்திருக்கிறேன். அவருடைய குணங்களைப் பற்றிப் பலர் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் கொஞ்சம் முன்கோபமுள்ளவர் என்று சிலர் சொன்னது இப்பொழுது நிரூபணமாகி விட்டது. இருந்தாலும் கோபம் உள்ள இடத்தில்தான் குணமிருக்கும் என்று சொல்லுவார்கள். இப்படிப்பட்ட கோபம் உள்ளவர்கள்தான் சிறப்பான பல காரியங்கள் செய்திருப்பதை நான் கண்டிருக்கிறேன். இன்று தஞ்சை மன்னருக்கு ஏற்பட்டுள்ள பெருமை அவருக்கு அமைச்சராக விளங்கும் புலிப்பள்ளி கொண்டாரால்தான் என்று எங்கும் வதந்தியாக இருக்கிறது. அந்த வதந்தி மிகையானதல்ல என்ற விஷயம் இப்பொழுதுதான் விளங்கியது. என்னிடம் அவர் பகையுணர்ச்சி காட்டுவதற்காக நான் வருத்தப்படவில்லை. அப்படித் தானிருக்க வேண்டும். உண்மையில் நான் பாண்டிய மன்னரின் அமைச்சர். பாண்டிய மன்னர் பல்லவ மன்னருக்கும் தஞ்சை மன்னருக்கும் வைரி. அம் மன்னரிடம் மந்திரியாக இருக்கும் என்னை அவர் வைரியாகக் கருதியதில் குற்றம் ஏதுமில்லை. இதுதான் அவருடைய பிடிவாதமான, உண்மையான ராஜ விசுவாசத்தைக் காட்டுகிறது..'' என்றார்.

அருண்மொழியாரின் வார்த்தையைக் கேட்டுப் புலிப்பள்ளியாரின் முகத்திலும் சிறிது மலர்ச்சி ஏற்பட்டது. அவர்கள் இருவருக்கும் விவாதம் முற்றி விபரீதம் நிகழ்ந்து விடுமோ என்று பயந்தான் பராந்தகன். ஆனால் அவ்வாறு நிகழாமல் இருவரும் சமாதானமாகப் போய் விட்டதை அறிந்து கொண்ட பராந்தகன் ''எப்படியோ ஒருவரை ஒருவர் உணர்ந்துகொண்டு சமாதானமடைந்து வீண் கசப்பை ஏற்படுத்திக் கொள்ளாமல் எங்களைக் கௌரவித்தால் சரிதான்'' என்றான்.

''என் மனத்தில் எவ்விதக் கசப்பும் இல்லை, யாரிடமும் குரோதமில்லை. நானும் மதுரை அமைச்சர் அருண்மொழியாரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். இன்று பாண்டிய மன்னருக்குள்ள பெருமையும் புகழும் அவருக்கு அமைச்சராக விளங்கும் அருண்மொழியாரால்தான் என்று எல்லோரும் சொல்லிக் கொள்கிறார்கள். அவரிடம் எனக்குப் பெருமதிப்பு உண்டு. ஆனால் நான் இந்தக் கொடும்பாளூருக்கு வந்த சமயம் அவரும் வந்திருக்கிறார் என்பது சிறிது சந்தேகத்தைக் கொடுத்தது. அதன் காரணமாகச் சிறிது ஆத்திரமும் கோபமும் ஏற்பட்டது. அவ்வளவுதான்..'' என்றார் புலிப்பள்ளியார். (தொடரும்)

உலகில் முதல் இடம்

உலகத்திலே மற்ற எந்த நாடுகளையும் காட்டிலும் மகோன்னத நிலையில் உள்ள நாடு திபேத்தான் என்றால் எல்லோரும் ஆச்சரியம் அடைவார்கள். ஆனால், இது முற்றிலும் உண்மை. நவீன நாகரிகத்திலோ அல்லது வேறு துறையிலோ திபேத் முதல் ஸ்தானம் வகிக்காவிடினும், திபேத்தைப் போல் வேறு எந்த நாடும் அவ்வளவு உயரமான இடத்தில் இல்லை. ஏழு லட்சம் சதுர மைல் பரப்புள்ள திபேத் பத்தாயிரம் அடிக்கு மேலே இமய மலையின் உச்சியில் இருக்கிறது. அதைச் சுற்றி இருபதாயிரம் அடிக்குமேற்பட்ட உயரமான சிகரங்கள் இருக்கின்றன. இத்தகைய இயற்கை அமைப்பு திபேத்தின் தனிப் பெரும் விசேஷமாகும். சிந்து, பிரம்மபுத்ரா, ஹோவாங் - ஹோ, யாங் சீ கியாங் போன்ற மாபெரும் நதிகளின் உற்பத்தி ஸ்தானமும் திபேத் நாடுதான். அந்த நாட்டில் நல்ல தண்ணீர் ஏரிகளும் உப்புத் தண்ணீர் ஏரிகளும் இருப்பது வேறு எங்கும் காண முடியாத தனி அம்சமாகும்.



மாஸ்கோ செல்லும் இளைஞர்

'நோய்களற்ற உடலினைப் வா வா வா' என்று அமரகவி பாரதியார் வருகின்ற பாரதத்துக்கு வரவேற்பு நல்கினர். இன்று மாஸ்கோ நகரம் அகில உலகிலுமுள்ள திடமிக்க இளைஞர்களை 'வாருங்கள், வாருங்கள்!' என்று வரவேற்று விழா கொண்டாடுகிறது.

மாஸ்கோ நகரத்திலே ஜூலை 28-ந் தேதியிலிருந்து ஆருவது உலக இளைஞர், மாணவ விழா வெகு விமரிசையாக நடைபெறுகிறது. மாஸ்கோ நகரத்திலுள்ள லெனின் மத்திய மைதானத்தில் இவ்விழா நிகழப் போகிறது. இந்த விழாவுக்கான அலங்காரங்களை ரஷ்ய மக்கள் இரவு பகல் கண்ணுறங்காமல் செய்து வருகிறார்கள். அணுகுண்டு யுகத்திலே உலக இளைஞர்களிடையே ஒற்றுமையை நிலைநிறுத்த முன் வந்துள்ளது இவ்வாலிப விழா. இந்த விழாவில் ஹாக்கி, புட்பால், வாலிபால், ஓட்டம் முதலிய அருங்கலைகளோடு கேளிக்கைகளும் இடம் பெற்றிருக்கின்றன. இந்த வாலிபத் திருவிழாவில் இந்திய ஹாக்கி விளையாட்டுக்காரர்கள் கலந்து கொள்கிறார்கள்.

உலகத்திலே ஹாக்கி விளையாட்டில் இந்தியா எவரெஸ்ட் சிகரம்போல் தலைசிறந்து விளங்குகிறது. இந்தியா 1928-ம் வருஷத்திலிருந்து இவ்விளையாட்டில் உலகிலுள்ள எல்லா நாடுகளையும் தோற்கடித்து நிகரற்று விளங்கி வருகிறது.

இளைஞர் திருவிழா ஹாக்கிப் பந்தயத்தில் கலந்து கொள்ளத் தமிழ் நாட்டிலிருந்து செல்பவர் வாலிபர் திரு ஜபார். இருபது வயது இளைஞரான திரு ஜபாரிடத்திலே ஹாக்கி விளையாட்டுக் கலை பூரணப் பொலிவு பெற்று விளங்குகிறது. இவரது மட்டையினிடம் பந்து அகப்பட்டுக் கொண்டால் அது துள்ளிக் குதித்துப் பலரைக் கடந்து செல்லும் விந்தையை விவரிக்க இயலாது. ஹாக்கி விளையாட்டில் முன்னணி ஆட்டக்காரர்களிலே வலது கோடியில் ஆடும் இவரது விளையாட்டைக் கண்டு வியப்புறாதவர் இல்லை.

சின்னஞ் சிறு வயதில் கல்லூரியில் பயின்ற பொழுதே இவருக்கு ஹாக்கி விளையாட்டிலும் ஈடுபாடு மிகுந்திருந்தது. இவர் பெரம்பூர் ரயில் பெட்டி கட்டும் தொழிற்சாலையில் பணியாற்றி வருகிறார். இவரது திறமை மேன்மேலும் பெருகுவதற்குப் பிரபல ஹாக்கி ஆட்டக்காரரான டாக்டர் முகம்மது ஹனீப் பாஷாவும் இன்ஜினியர் திரு தேவையாவும் அளித்த உற்சாகமே காரணம்.

தேசிய ஹாக்கி விளையாட்டுப் போட்டியில் சென்னையின் சார்பில் 1953-ம் வருஷத்திலிருந்து கலந்து கொள்கிறார் திரு ஜபார். 1954-ம் வருஷத்தில் இலங்கையில் சென்னை ஹாக்கி விளையாட்டுக்காரர்கள் வெற்றிக் கொடி நாட்டியதற்குத் திரு ஜபாரும் காரணஸ்தராக விளங்கினார். இலங்கை விஜயத்தில் சென்னை ஹாக்கி ஆட்டக்காரர்கள் இருபத்தொரு 'கோல்'களுக்கு மேல் எதிரிக் கட்சியின்மீது போட்டு, அன்று கூடியிருந்த ரசிகர்களே 'போதும்! போதும்!' என்று சொல்லுமளவுக்குப் பிரமாதமாக விளையாடினார்கள்.


இந்தியாவிலுள்ள தலைசிறந்த ஹாக்கி விளையாட்டுக்காரர்களிலே இவருக்கு நான்காவது ஸ்தானம் கிடைத்திருக்கிறது. ஹாக்கி விளையாட்டில் 'இந்தியாவின் மந்திரவாதி' என்று புகழப்படும் திரு தியான்சந்த் 'இந்திய ஹாக்கி முன்னணி விளையாட்டுக்காரர்களில் வலது கோடியில் ஆடுவதில் திரு ஜபார் திறமை மிக்கவர்!' என்று பாராட்டியிருக்கிறார்.

மாஸ்கோ செல்லும் இந்திய ஹாக்கி விளையாட்டுக்காரர்களுக்கு 'வெற்றியோடு திரும்பி வருக!' என்று வாழ்த்துக் கூறி வழியனுப்புகிறோம்.

— குண்டுமணி.



25. ஸ்ரீமான் வேம்பு



"என்னுங்க வேம்பண்ணே! வரலீங்களா? எல்லாரும் புறப்பட்டுப் போயாச்சுங்களே!" என்றான் வேலண்ணன், தன் வீட்டுத் திண்ணையின் மேல் உட்கார்ந்திருந்த வேம்பண்ணனைப் பார்த்து.

அருகிலிருந்த கல்பகம் சொன்னாள்: "உம்! அவரையும் என்னையும் யாருங்க லட்சியம் செய்யிறாங்க? நாங்க என்னத்துக்கு வரப் போகிறோமுங்க?"

வேலண்ணனுடன் வந்த துளசி சொன்னாள். "நீ என்ன அக்கா அப்படிச் சொல்லிப்புட்டே? போட்டோப் படம் எடுக்கிறவங்ககூட அங்கே வந்திருக்கிறாங்களாம்!"

"அப்போ நீ அவசியம் போக வேண்டியதுதான், தங்கச்சி!" என்றான் வேம்பண்ணன்.

"நம்ம பஞ்சாயத்துப் போர்டு தலைவர்தான் விழாவை நடத்தப் போகிறார்!" என்றான் வேலண்ணன்.

"அதெல்லாம் சரி, வேலண்ணே. இந்த விழா விழா என்கிறீங்களே! அது என்ன? அங்கே என்ன செய்யிறாங்க! கொஞ்சம் விவரமாகச் சொல்லுறியா?"

"அதுவா? நாடு செழிக்க மழை பெய்யணும். மழை பெய்யணுமானால் ஊரிலே மரம், தோப்பு, காடு என்ற வகையிலே பசுமை இருந்தால்தான், அதன் காற்று தட்டி, மப்பு கனத்து மழை பெய்யும். ஊரிலே காடுகளை பூட்டுதுங்க. இதற்குச் சும்மா — உன்னையும், என்னையும் மரம் வைச்சு வளர்க்கச் சொன்னால் போதுமா? பெரியவர்கள் - நாட்டாண்மைக்காரர்கள் - நாலு பேருக்குத் தலைவர்களெல்லாம், தாங்களும் உன்னைப்போல் என்னைப் போல் கழனி காட்டிலே வந்து செடியை நட்டுத் தண்ணீரை ஊற்றினால்....நமக்கும் தூண்டுகோல் போட்ட மாதிரி ஆகுமில்லே! இதைத்தான் இன்றைக்கு..."

"அப்போ இத்தனை நாள் எத்தனை சாதிச்சிருக்கிறாங்களாம்? என்னென்ன ஊரைக் காடாக்கிட்டாங்களாம்?"

"இதெல்லாம் எனக்குத் தகவல் தெரியாது அண்ணே! இன்றைக்கு இந்த ஊரிலே நல்ல வேளை பார்த்து, நாலு பேரைக் கூப்பிட்டு, கடவுள் பெயரைச் சொல்லிச் சுபமாக ஒரு துளசிச் செடியைப் பஞ்சாயத்துப் போர்டு தலைவர் நடப் போகிறாரு. அப்படி ஒரு சாங்கியம் நடந்திச்சின்னு, அப்புறம் நீ, நான் எல்லாரும் ஏதாவது செடியை நட்டுப் பயிராக்க வேணுமின்னுதான் இந்தப் பாடு!" என்றான் வேலண்ணன்.

"வீட்டுக்கு வீடுதான் ஒரு துளசிச் செடி இருக்கிறதே! இப்பொழுது புதுசாக ஒரு செடியைக் கழனி காட்டிலே வைத்து விட்டால் போதுமா?" என்றாள் கல்பகம்.

"அப்படிச் சொல்லி விட்டால் எப்படி? பட்டணத்திலே ராஜாவுங்க அரண்மனை, கவர்னரு அரண்மனை எல்லாம் சுற்றிச் சவுக்க மரம் பயிராக்கிட்டாங்களாம்......"

"வெடிங்க பூட்டுது போங்க, அண்ணாச்சி! பத்து கன்னு தென்னம் பிள்ளைகளை வைத்து வளர்த்தாங்கன்னு அது ஒரு விசயம். சாமிக்குக் காவு கொடுக்கணுமென்கிற எண்ணத்திலே, ஆட்டையும் பன்றியையும் வளர்க்கிறாங்களே...அந்த போலத்தானே நாலைந்து வருசங்கள் போய் வெட்ட வேணும் என்று இந்தச் சவுக்கத் தோப்பை வைக்கிறது. தோப்பை அழித்த பிறகு நாலைந்து வருசங்கள் அந்த இடம் மறுபடியும் பொட்டலாகத்தானே கிடக்கும்! இந்த வேலையிலே என்ன சுகம்? தென்னந்தோப்பு வைச்சுப் பாருங்க, அண்ணாச்சி! அது எத்தனை வேலைக்கு உதவுது! சவுக்கத்தோப்பு வைத்து அழிக்கப் போகிற நேரத்துக்குத் தென்னந்தோப்பு மரமாகிக் காய்க்கத் தொடங்கும். நிழல், காற்று, காய், இளநீர் இந்த மழை வரணும்னு அடர்த்தியான தோப்பு..." என்று கல்பகம் சொல்லி வருவதை இடைமறித்து, வேம்பண்ணன் சொல்கிறான்:

"அட! நீ ஒண்ணு. உன்னையும் என்னையும் யாரு கேட்கிறாங்க? தென்னை மரத்தைக் கல்பகம் என்று சொல்லுவாங்க இல்லே. இவ பேரு பாரு! அதனாலே தான் இம்மாதிரி அதற்குப் பரிந்து பேசுகிறாள் அண்ணே. நீ போ. துளசிச்

செடியே அவர் வைச்சாருன்னு நீ தண்ணீர் ஊத்துவே!''

''அட! இவரு பேருத்தான் ஒரு மரத்துக்கு வைச்சிருக்காங்க. அந்த மரத்தைத்தான் ஊருக்குப் பத்து மரம் வைச்சு வளர்க்கட்டுமே அண்ணே! அந்த மரம் இருக்கிற வீட்டருகிலே ஒரு காற்று, கறுப்பு, பில்லி சூனியம் ஏவல் மேவல் எதனாச்சும் அண்டுமா..?''

வேலனும் துளசியும் விழாவுக்குச் செல்ல நடையைக் கட்டினர்.

* * *

உண்மைதான். கல்பகம் சொன்னதை மேல்நாட்டு முறைப்படி கற்ற ஒரு வைத்திய விஞ்ஞானி விளக்கியிருக்கிறார். அதைப் புத்தகமாக அரசாங்கமே அச்சிட்டு விற்றது. அது அந்தக் காலம்.

வேப்ப மரத்தைப் பற்றி எழுதி வந்த இந்த டாக்டர் - சென்னையைச் சேர்ந்தவர் தொடர்ந்து சுமார் முப்பது வருஷ காலம் ஆராய்ச்சிகளைச் செய்துவந்தார். கல்கத்தாவில் 1883-84-ல் நடந்த சர்வதேச பொருட்காட்சிக்குச் சுமார் ஆயிரம் ஔஷதிகளைச் சேகரித்து அனுப்பினார். ஒவ்வொன்றைப் பற்றியும் மேல்நாட்டு விஞ்ஞான வைத்திய சாஸ்திரப்படி விஸ்தாரமான விளக்கங்களை எழுதி அனுப்பினார். இவை யாவும் இவருடைய ஆராய்ச்சியில் தெளிந்த விஷயங்கள். பொருட்காட்சியின் நிர்வாகஸ்தர்கள் இவர் அனுப்பிய பொருள்கள், அவை சம்பந்தமான விளக்கங்கள் ஆகியவற்றை வெகுவாகப் புகழ்ந்தும் மேலதிகாரிகளுக்கு எழுதியும் கௌரவித்தனர். இதன் பலனாகத்தான் இவருடைய குறிப்புக்கள் புத்தகமாகத் தொகுக்கப்பட்டுப் பிரசுரிக்கப்பட்டன. இந்நூலில் வேப்ப மரத்தின் உபயோகங்களைப் பற்றி விஸ்தாரமாகச் சொல்லி இருக்கிறார். உள் மரமும் வைரமும் தவிர, அதன் பட்டை, வேரின் பட்டை, பிஞ்சு, கொட்டை, அதன் எண்ணெய், பூ, இலை, கோந்து, அதிலிருந்து கிடைக்கும் கள் என்று இப்படிப் பலவும் (ஒன்பது பாகங்கள்) எப்படியெல்லாம் மருந்துகளாக உபயோகமாகின்றன என்பதை வெகு விளக்கமாகத் தெரிவித்துள்ளார்.

மேல்நாட்டு வைத்திய சாஸ்திரத்தில் காணும் எந்தெந்த மருந்துகளுக்குப் பதிலாக வேப்ப மரத்தின் எந்தெந்தப் பாகத்தை உபயோகிக்கலாம் என்றும் விளக்கிய பிறகு......


''வேப்பமரத்தின் குணகுணங்களைப் பற்றி இதுவரையில் சொன்னது யாவற்றையும் விட மிக முக்கியமான வேறொரு குணமுண்டு.....'' என்று தொடங்கி எழுதுகிறார்.

''அதாவது காற்றை ஆரோக்கியகரமாகச் செய்யும் குணமாகும். தென்னிந்தியாவில் சில கிராமங்கள் அவை தோன்றிய நாள் முதல் உலகில் அவ்வப்போது ஏற்படும் விஷூசிகா [காலரா என்னும் விஷ பேதி] என்னும் நோயினால் தீண்டவும் படாமல் தப்பி வந்துள்ளன. இந்த அபூர்வ சக்தி அவ்வூரிலுள்ள பெருவாரியான வேப்ப மரங்களால் காற்றில் உண்டாகும் ஆரோக்கியகரமான குணத்தினால்தான் என்று சொல்லக் கிடக்கிறது. இவ்வித கிராமங்களை நான் அறியேன். ஆனால்....'' என்று சென்னையில் தம் வீட்டைப்பற்றி எழுதுகிறார்.

இவர் வசித்து வந்தது திருவல்லிக்கேணி ஹைரோட் மீர்ஸாஹிப்பேட்டை முதலிய பிராந்தியங்களில்தான். இப்பிராந்தியங்களில் காலரா வருவது ஒரு வருஷாந்திரச் சம்பவமாகத் தவறாமல் இருந்த காலம். இந்தப் பேட்டையில் வந்தாலோ இந் நோய் அங்கு நெடுநாட்கள் வரையில் நிலைத்து நின்று விடுவதும் வழக்கமாம். இந்தத் தெருவில் பல வீடுகளில் பலருக்கும் இந்நோய் கண்டதுண்டு. எதிர் வீடுகள் பக்கத்து வீடுகளிலெல்லாம் அதி பயங்கரமான உக்கிரத்துடன் இந்த வியாதி இருந்ததுண்டு. இப்படியாக இருபத்தைந்து வருஷ காலம் இவர் அனுபவத்தில் கண்டிருந்தும் தம் வீட்டில் மட்டும் ஒருவராவது இந்த இருபத்தைந்து வருஷத்தில் அவ் வியாதியால் பீடிக்கப்பட்டதே இல்லையாம். இவர் வீட்டுக்கும் அத்தெருவில்—அப்பேட்டையில் மற்றுமுள்ள வீடுகளுக்கும் இருந்தது ஒரே வித்தியாசம்தான். இவர் வீட்டைச் சுற்றியும் சில வேப்பமரங்கள் இருந்தன. தமக்குத் தெரிந்த வரையில் வேறு ஒரு காரணமும் சொல்வதற்கில்லையென்றும் ஆகவே பாமர மக்கள் சொல்வதில் உண்மையுண்டு என்று தாம் தெளிந்திட நேரிட்டதையும் விளக்கியுள்ளார். இந்த ப்ளேவுக்கு.....வந்த ப்ளேவுக்கு....வரப்போகிற ப்ளேவுக்கு—இனலும் இவ்வகையைச் சேர்ந்த வேறு பல வியாதிகளுக்குக் காற்றை ஆரோக்கிய நிலையில் வைத்துக் கொள்வதுதான் தடுக்கும் உபாயம். இதற்கோ வேப்ப மரம் இவ்வளவு பயன் தருவது என்று மேனாட்டு முறைப்படி பயின்று, ஆராய்ச்சிகள் செய்த வைத்திய விஞ்ஞானி ஐம்பது, அறுபது வருஷங்களுக்கு முன் தெரிவித்துள்ளார். அவருடைய இப்புத்தகம் அரசாங்கத்தாரால் பிரசுரிக்கப்பட்டது. அந்த வைத்திய விஞ்ஞான அறிஞர் யார் என்கிறீர்களா? அவர்தான் டாக்டர் மொஹிதீன் ஷெரீப் கான் பகதூர். (தொடரும்)



அழகு திலகங்களாக விளங்க
"'HAZELINE' SNOW"
(TRADE MARK)
"'ஹாஸலீன்' ஸ்னோ" (டிரேட் மார்க்)
பர்ரோஸ் வெல்கம் & கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிட்.
பி. ஓ. பாக்ஸ 290, பம்பாய்



சாட்சி

சின்னமங்கலம் செவப்ப சேர்வையின் குமாரர் வீராசாமிச் சேர்வை, வடிவேலுவுக்குத் தம்முடைய ஒரே மகள் நாச்சியாரைக் கல்யாணம் செய்துகொள்ள விருப்பமா என்று தெரிந்து கொள்ள ஆள் அனுப்பினார்.

வெற்றிலை பாக்குக் கடை வைத்திருந்த வடிவேலு சொன்னான்: "முதலில் அந்தப் பத்துரூபாயைக் கீழே வைக்கச் சொல்லுங்கள். பிறகு கல்யாணத்தைப் பற்றிப் பேசலாம்!"

"எந்தப் பத்து ரூபாய்?" என்று கேட்டார் வீராசாமிச் சேர்வையின் ஆள்.

"அது அவர் மனசாட்சிக்கே தெரியும். நீங்கள் போய்ச் சொல்லுங்கள்" என்று பேச்சை முடித்து விட்டான் வடிவேலு.

இரண்டாம் பேருக்குத் தெரியாமல், பத்து ரூபாய் வந்து சேர்ந்தது. வடிவேலுவுக்கு மனம் சமாதானமாயிற்று. எட்டு வருஷங்கள் வீட்டுக்குள் இருந்த நாச்சியாருக்கு விடிவு காலம் பிறந்தது. வீடு வாசல் இல்லாத வடிவேலு, மாமனார் வீட்டோடு வந்து விட்டான். வந்த கையோடு, மாமனாருக்குக் கண்டிப்பான உத்தரவு ஒன்றும் போட்டு விட்டான்.

"மாமா! இந்தச் சாட்சிக் கையெழுத்து போடுகிற தொழிலுக்கு இன்றோடு ஒரு முழுக்குப் போட்டு விடுங்கள். எனக்குக் கடையில் ஏதோ நாலு காசு வருகிறது. அதை வைத்துக் கொண்டு காலம் தள்ளுவோம்!"

"ஆமாம், அப்பா!" என்றாள் சேர்வையின் மகள் நாச்சியார்.

வீராசாமிச் சேர்வைக்கு மருமகன் வார்த்தையைத் தள்ளவும் முடியவில்லை. இருபத்தைந்து வருஷங்களாக நடத்திவரும் தொழிலை விட்டு விடவும் மனமில்லை; ஒருகணம் நினைத்தார்

"நானா போகிறேன்? அந்தச் சென்னியப்பன்தான விடமாட்டேன் என்கிறான். கொடுக்கல் வாங்கல் செய்கிறவனுக்கு என்னைப் போல் தகுந்த சாட்சி யில்லாவிட்டால் காரியம் எப்படி நடக்கும்?"


"அவன் செய்கிற போக்கிரித்தனத்துக்கெல்லாம் நீங்கள் உடந்தையாக இருக்கிறது எனக்குப் பிடிக்கவில்லை" என்றான் வடிவேலு.

"என்ன செய்கிறது; எனக்கோ இந்த ஊரில் வேறே பிழைப்பு இல்லை. சென்னியப்பனை உனக்கு நன்றாகத் தெரியும். அவனைப் பகைத்துக் கொண்டால், சின்னமங்கலத்தில் குடியிருப்பு இல்லை நமக்கெல்லாம்; பழிபாவத்துக்கு அஞ்சாத கை!" என்று வீராசாமி தமது கட்சிக்குப் பலம் தேடினார்.

வடிவேலுவுக்குக் கோபம் வந்து விட்டது.

"அதைத்தான் பார்க்கப் போகிறேன் நான். சென்னியப்பன் தில்லுமல்லுகளெல்லாம் ரொம்ப நாட்களுக்குச் செல்லாது இனிமேல். ஊர்க்காரன் இப்பொழுது முழிச்சுக் கிட்டான்" என்றான்.

துறைவன்



வீராசாமிக்கு மருமகன் சிறு பிள்ளை வேகத்தில் உணர்ச்சி யுடன் பேசுவதாகப் பட்டது.

"சரி, சரி சென்னியப்பன் சாட்சிக்குக் கூப்பிடாமல் இருந்தால் நான் ஏன் போகிறேன்?" என்று பேச்சை மழுப்பித் தள்ளிவிட்டார் வீராசாமி.



சின்னமங்கலம் கிராமத்தில், பெயருக்கேற்றபடி எல்லா நடவடிக்கைகளும் சிறிய அளவில் தான் நடைபெறும். கொடுக்கல் வாங்கல் எல்லாம் ஐந்து ரூபாய்க்குக் கீழே தான். அடிதடி சண்டை நடந்தால்கூட, ஆளைத் தீர்க்கும்படியாக இராது. ஊமைக் காயங்களோடு முற்றுப் பெறும். ஊரில் பெரும்பாலோராக இருந்த குடியானவர்களுக்கு எதிலுமே நிதான புத்தியுண்டு. சென்னியப்பன் முப்பது ரூபாய் கொடுத்து விட்டு, நாற்பத்தைந்து ரூபாய்க்கு பிராமிசரி நோட்டு எழுதிக் கேட்டாலும் தாராளமாக எழுதிக் கொடுப்பார்கள். அவனை விட்டால் வேறு யார் கொடுக்க இருக்கிறார்கள் பணம்? ஆனால் வடிவேலு காரியம் வேறு. விவசாயத்தையே விட்டு விட்டு வெற்றிலை பாக்குக் கடை முதலாளி ஸ்தானத்தை எட்டிப் பிடித்தவன். அவனை ஒரு சமயம் சென்னியப்பன் வலையில் விழுந்து விட்டான். முப்பது ரூபாய்க்கு நோட்டெழுதிக் கொடுத்து இருபது ரூபாய் கடன் வாங்கினான். நிர்ப்பந்தமான சமயமாகையால் வேறு வழியில்லை. சென்னியப்பன் அநியாய வட்டி வாங்குகிறான் என்று வடிவேலு ஊரில் பிரசாரம் செய்வதாகச் சென்னியப்பன் காதில் விழுந்தது. 'இருக்கட்டும். இந்தப் பயலுக்கு நான் யார் என்று இனம் காட்டுகிறேன்' என்று வீம்பு கட்டிக் கொண்டான். இருபது ரூபாய் முதலும் வட்டியும் கொடுத்து விட்டு, பிராமிசரி நோட்டைத் திருப்பிக் கேட்டான் வடிவேலு. சென்னியப்பன் சிரித்தான்.


"பாக்கித் தொகை பத்து ரூபாய் இருக்கிறதே, தம்பி!" என்று பிராமிசரி நோட்டை எடுத்துக் காட்டினான் சென்னியப்பன்.

வடிவேலுவுக்குக் கண் சிவந்தது. பிடி சென்னியப்பனிடம் சிக்கி விட்டது என்று தெரிந்ததும், ஆத்திரம் கொண்டு காரசாரமாகப் பேசினான்.

சென்னியப்பனுடைய முகத்தில் மட்டும் சிரிப்பு சிறிதும் மாறவில்லை.

'தம்பிக்குக் கோபம் வருகிறதே! அர்த்தமில்லை. பிராமிசரி நோட்டிலே கையெழுத்து





போட்டிருக்கிறாயே, அதுபோகும் கோர்ட்டிலே!'' என்று மிகவும் எகத்தாளமாகப் பேசினான்.

''உன்னுடைய பணத்தைக் கோர்ட்டிலேயே வந்து வாங்கிக்கொள்'' என்று ஆவேசமாகக் கத்திவிட்டுப் புறப்பட்டான் வடிவேலு.

சின்னமங்கலம் பஞ்சாயத்துக்கோர்ட்டுக் கூரைக்கட்டடம் பிள்ளையார் கோவிலுக்குப் பக்கத்தில் இருந்தது. வழக்குகள் சிக்கல் விழுந்து திருப்ப போனால், வாதியோ பிரதிவாதியோ 'சத்தியம்' செய்து விடுவார்கள் அப்படிச் 'சத்தியம்' செய்வதற்கு, பிள்ளையார் சந்நிதியை நாடுவது வழக்கம்.

வெற்றிலைக் கடை வடிவேலுவின் மேல் லேவாதேவி சென்னியப்பன் பதித்த 'நம்பர்' பஞ்சாயத்துக் கோர்ட்டில் விசாரணைக்கு வந்தது.

''நான் வடிவேலுவிடம் கொடுத்தது முப்பது ரூபாய் ரொக்கம்'' என்றான் சென்னியப்பன்.

''இல்லை, இருபது ரூபாய்தான். நோட்டில் சும்மா எழுதியதுதான் முப்பது'' என்றான் வடிவேலு.

''சாட்சி இருக்கிறது நமக்கு'' என்றான் சென்னியப்பன்.

''சாட்சியா, அது யார்?'' என்று வடிவேலு திகைத்தான்.

அப்பொழுதுதான் மேற்படியூர் சேவப்ப சேர்வையின் குமாரர் வீராசாமிச் சேர்வை சாட்சியாக வந்து காட்சியளித்தார்

கோர்ட்டார் கேள்வி கேட்டார்கள்.

''சென்னியப்பன், வடிவேலுவுக்குப் பணம் கடன் கொடுக்கும் போது, நீர் பார்த்தீரா!''

''பார்த்தேன்.''

''எந்த இடத்தில் வைத்துப் பணம் கொடுக்கப்பட்டது?''

''பிள்ளையார் கோவில் முகப்பில்.''

''அவருக்கு எவ்வளவு ரூபாய் கொடுத்தார் சென்னியப்பன்?''

வடிவேலு வீராசாமிச் சேர்வை முகத்தைப் பார்த்தான். அந்த முகம் சிறிதும் கலக்கமில்லாமல் பிரகாசித்தது.

''முப்பது ரூபாய்.''

''பொய், முழுப்பொய்'' என்று கத்தினான் வடிவேலு. ''இவர் நான் பணம் வாங்கும்போது அங்கே இருக்கவில்லை''

''இந்தப் பிராமிசரி நோட்டில், சாட்சிக் கையெழுத்துப்போட்டிருப்பது நீர்தானா?'' கோர்ட்டார் கேட்டார்கள்.

''ஆமாம் நான்தான்'' என்று அழுத்தமாகப் பதில்



அன்னமிட்ட கை

மஞ்சுவின் உடல் தேறுவதற்காக அவள் கணவர் அவளோடு உதகமண்டலம் போய்த் தங்குவதற்கான ஆயத்தங்களைச் செய்தார்; போகும் மார்க்கத்திலேயே அவளது பிறந்தகம் இருந்தபடியால், அங்கு தங்கிவிட்டுப் போவது நல்லது என்று அபிப்பிராயப்பட்டார். மஞ்சுவோ உற்சாகமின்றி, "போனால் என் தங்கை தேவகி இருக்கிறாளென்றுதான் போகவேண்டும். பாவம், தாயில்லாப் பெண்; ஏற்கனவே கறிவேப்பிலைக் குச்சி மாதிரி ஒடிந்துவிழும் தேகம்!" என்று அங்கலாய்த்தாள்.

அப்பெண்களின் தகப்பனாரான அருணாசலம் தமது உள்ளூர்ப் பள்ளிக்கூடத்தில் டீச்சர் உபாத்தியாயர். முதல் மனைவி இறந்தபின் மறு விவாகம் செய்துகொண்டவர்; அதன் பிறகு அகத்துக்காரி அன்னபூரணியிடம் அவரே டீச்சர் பழகுவதாக இண்டலக்காரர்கள் பேசுவதுண்டு.

பிறந்தகம் போய்ச் சேர்ந்ததும் தகப்பனாரிடமிருந்து கிடைத்த அமோகமான வரவேற்பு. சித்தியானவள் மூத்த பெண்ணுக்கு ஆரத்தி எடுத்த வைபவம் — எல்லாமே ஒரு மாய்மாலம் போலத் தோன்றியது மஞ்சுவுக்கு.

"இன்றிரவே நீலகிரி எக்ஸ்பிரஸைப் பிடிக்கவேண்டும். இப்போதெல்லாம் என் உடம்புக்கு எதும் ஒத்துக் கொள்வதில்லை—அதுசரி, தேவகி எங்கே?" என்றாள் மஞ்சு.

"அவளுக்கு ஸ்கூல் பைனல் பரீட்சை கடைசி நாள் இன்னிக்கு. சாயங்காலந்தான் வருவாள்" என்று அருணாசலம் பதிலளித்துவிட்டு, மூத்த பெண்ணின் அந்தஸ்துக் கேற்றபடி முதல்தரமான விருந்து சமைக்க மனைவியிடம் உத்தாரம் கொடுத்து விட்டு, கொல்லைப்புறம் வாழையிலை பறிக்கப்போனார்.

தனிமையிலிருந்த சமயம் மஞ்சு தன் கணவரிடம் "என்ன சமையல் தடபுடலோ! தேவகியை இவர்கள் வளர்க்கும் லட்சணம் எனக்குத் தெரியாதா. இப்போது அந்தப் பெண் மேலும் இளைத்துத் துரும்பாயிருப்பது நிச்சயம். ஆடு மாதிரி பச்சைக் கறிகாய்களை சாப்பிடச் சொல்கிறாளாம்!" என்றாள்.

"பேஷ். நீ சமைக்கும் வேகாத சமையலைவிட பச்சைக் கறிகாய்கள் மோசமில்லையே. எனக்கும் நீ எப்போதுதான் முழுப் பச்சைக் கறிகாய்கள் தரப்போகிறாயோ!" என்று தமாஷ் செய்தார் அவள் கணவர்.

"சித்தியைப்போல எனக்குமென்ன அடுப்பு மூட்ட சோம்பலா? அப்படி அவள் சமைத்தாலும் என்ன சமைக்கிறாள்—கீரை, கோவைக்காய், வாழைத்தண்டு... காசு போட்டுக் கறிகாய் வாங்க மனசு வராது அவளுக்கு. அப்படி மிச்சம் செய்து சேர்த்த பணத்தால் என்னதான் கோட்டை கட்டப் போகிறாளோ—ஆஹூ, நான் சமைப்பது எவ்வளவு ருசி ருசியா . . . !"

"தெரியாதா, உன்னோட ருசிச் சமையல்தானே இப்போ உதகமண்டலத்துக்கு டிக்கெட் வாங்கும்படி கேட்கிறது!" என்று கேலி செய்தார் அவர்.

பேசிக் கொண்டிருந்தபோது, தரையில் உடைந்து கிடந்த கண்ணாடி வளையல் துண்டுகள் மஞ்சுவின் கண்களில் பட்டன. "என்ன அபசகுனம்! தேவகியின் வளையல் போலிருக்கிறதே!" என்று துணுக்குற்றாள் அவள். சித்தியின் பிடியிலே தேவகி சிக்கித் தவிப்பதுபோலவும், வளையல்கள் உடைபட்டு, மூளிக் கையுடன் தேவகி உலவுவது போலவும் கற்பனை செய்துகொண்டு ஆத்திரப்பட்டாள் மஞ்சு. அப்பா வந்ததும் தன் ஆத்திரத்தை வெளியிட்டாள். அவரோ சமாதானமாக, "வளரும் பெண்ணுக்கு அடிக்கடி வளையல் உடைவது சகஜந்தானே, மஞ்சு. தேவகிக்கு ஒரு குறையுமில்லை. வீணாக ஏன் அலட்டிக் கொள்கிறாய்.

HVM. 290A-X29 TM

என்னைப் பார். அவள் சாப்பிடும் சாப்பாட்டைத்தானே நானும் சாப்பிடுகிறேன். பொழுதெல்லாம் டீச் செய்தால்கூட இப்போதெல்லாம் எனக்கு சோர்வு ஏற்படுவதில்லை!'' என்று கூறிவிட்டு, எல்லோரையும் சாப்பிடக் கூப்பிட்டார்.

உண்மையிலேயே அருணாசலம் பத்து வயது குறைந்தவராகக் காணப்பட்டதாக மஞ்சுவே ஒத்துக் கொள்ளும்படி இருந்தது. அன்றைய சாப்பாடும் ருசியாகத் தான் இருந்தது.

''எல்லாமே எண்ணெயில் செய்திருப்பீர்களோ என்று முதலில் பயந்தேன். நல்ல வேளையாக...'' என்றாள் மஞ்சு

''மஞ்சு, நாலு வருஷம் டோக்கியோவிலிருந்தபோது, ஹோட்டலிலிருந்து வந்த எடுப்பு சாப்பாட்டால் இளைத்துப்போன அனுபவம் எனக்கு உண்டு. அன்ன பூரணி வந்தபிறகு எங்கள் சமையலே மாறிவிட்டது. பற்பல கடைகளில் நிறைந்து கிடக்கும் டின்களில் விற்கும் தூசிபடிந்து நாற்றமெடுத்த எண்ணெய்களை நாங்கள் வாங்குவதில்லை. சிக்கனம் செய்யும் கையாலேயே நிறைய நிறைய புதுப்புது ஆகாரங்களை அவள் பண்ணிப் போடும் அழகே அழகு. சில நாட்கள் நீங்கள் தங்கிவிட்டுப் போனால் உங்களுக்கே தெரியும்'' என்றார் அருணாசலம்.

''எண்ணெய்களுக்குப் பதிலாக டால்டா வனஸ்பதி உபயோகிக்கிறீர்களா?'' என்று கேட்டாள் மஞ்சு.

''ஆம். புத்தம்புதிய தாவர எண்ணெய்களிலிருந்து பக்குவத்தோடு தயாரிக்கப்பட்டு அடக்கமான டின்களில் கிடைக்கும் உயர்தர தாவரக் கொழுப்பே டால்டா வனஸ்பதி. நெய்யிலுள்ள அதே அளவு வைடமின் ஏ, டி ஆகிய இரண்டும் டால்டாவிலும் இருப்பதனால் அவை நமது பற்களுக்கும் எலும்புகளுக்கும் பலம் தந்து, சொல்சொடி வராமல் பாதுகாக்கின்றன. டால்டாவில் எந்தப் பண்டம் தயாரித்தாலும் அதன் பூரணமான ருசி பரிமளிக்கும்', என்றார் அருணாசலம். ''வனஸ்பதியை சாப்பிட்ட எலிகளின் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டதாக கேள்விப் பட்டதுண்டு'' என்று குறுக்கிட்டார் மாப்பிள்ளை.

''பாதிக்கப்பட்ட காரணம் வனஸ்பதியல்ல; மற்ற சத்துள்ள உணவுகள் ஏதும் எலிகளுக்குக் கொடுக்காததுதான் காரணம். பிற்பாடு அரசாங்கமே மூன்று வருஷகாலம் வனஸ்பதியைப் பூரணமாகப் பரிசோதித்துவிட்டு, ஆரோக்யத்திற்கு உத்தமமான கொழுப்பு வனஸ்பதி என்று நிர்மாணித்து விட்டனர். சகல சத்துக்களும் அடங்கிய பல்வேறு ஆகாரங்களையும் டால்டாவில் சமைத்து உண்டு, தினசரி பாலும் பருகி வருவோர்கள் ஆரோக்யத்திற்கு எந்தவிதமான பழுதும் வராது!'' என்று அழுத்தமாகக் கூறினார் அருணாசலம்.

''அப்படியானால் நாமும் ஒரு ஜாடி டால்டா வாங்கிப் பார்க்கலாமா, மஞ்சு?'' என்று கேட்டார் மாப்பிள்ளை.

''ஜாடியில் விற்காது டால்டா. பச்சை மரத்தின் படமும் 'டால்டா' என்ற பெயரும் உடைய பக்குவமான டின்களில் கிடைப்பதுதான் டால்டா வனஸ்பதி'' என்று அருணாசலம் தொடர்வதற்குள், ''அம்மா'' என்ற குரல் வாசற்புறம் ஒலித்தது. வாசலுக்கு விரைந்தாள் சித்தி; கையோடு அவள் அழைத்து வந்த வடிவழகியைப் பார்த்ததும் மஞ்சுவுக்கே அடையாளம் தெரியவில்லை. தங்கச் சிலைபோல் கொழித்து வளர்ந்திருந்த அந்தக் கட்டழகியே திடீரென்று ''அக்கா'' என்று கூவியதும் அப்படியே பூரித்துப் போனாள் மஞ்சு.

அதே சமயம், வெல்வெட் காகிதம் சுற்றிய பொட்டலம் ஒன்றைத் திறந்து அதிலிருந்த இரு ஜோடி பொன் வளையல்களை தேவகியின் கரங்களில் அணிவித்தாள் சித்தி!

இதயமிளகிவிட்ட மஞ்சு, ''சித்தி, உங்கள் பொன்னான கைக்குத்தான் இந்தப் பொன் வளையல் பொருந்தும்—அன்னமிட்ட கையல்லவா, அம்மா'' என்றாள். ''அம்மா'' என்றழைத்த அந்த ஒரு வார்த்தையே மஞ்சுவின் உள்ளத்தை விளக்கிவிட்டது.

கொடுத்தார் சாட்சி வீராசாமிச் சேர்வை. வழக்கு வேலாதேவி சென்னியப்பனுக்குச் சாதகமாகத் தீர்ப்பாகி விட்டது.

வெளியே வரும்பொழுது, வடிவேலு வீராசாமிச் சேர்வையை ஒரு பார்வை பார்த்தான். "எதற்காக இப்படிப் பொய்ச் சாட்சி சொல்லி வயிறு வளர்க்க வேண்டும்? பத்து ரூபாய் தண்டம் உம்மாலே. எல்லாம், அந்தப் பிள்ளையாருக்குத் தெரியும். அவர் தான் கேட்கப் போகிறார் உம்மை!" என்று சொல்லிவிட்டுக் கிளம்பினான் வடிவேலு.

* * *

"ஏனய்யா, இப்பொழுதெல்லாம் சாட்சிக் கையெழுத்துப் போட வருகிறதில்லை?" என்று அதட்டிக் கேட்டான் சென்னியப்பன்.

"அதெல்லாம் ஒன்றுமில்லிங்க முதலாளி! உடம்பே சரியில்லே. வயக் ஆச்சு பாருங்க. கோர்ட்டிலே ஏறி இறங்குகிற தொந்தரவு எதற்கின்னுதான் நிறுத்திக் கொண்டேன்" என்றார் வீராசாமி.

"உம்முடைய பெண்ணைக் கட்டிக் கொண்டானே அந்த வடிவேலு. அவன் ஊரிலே நம்மைப் பற்றிக் கண்டபடி புரளி பேசுகிறதாகத் தெரிய வருகிறது. கொஞ்சம் ஜாக்கிரதையாகவே இருக்கச் சொல்லும்!"

"ஐயையோ! அவரு சிறுபிள்ளைங்க. நீங்கள் அதெல்லாம் பெரிசா நினைக்கப்படாதுங்க!" என்று அவரைச் சமாதானப் படுத்துவதற்கு முயன்றார் வீராசாமிச் சேர்வை.

வீராசாமிக்கு உள்ளுக்குள் கலக்கம். மருமகன் இப்படிச் சென்னியப்பனைப் பகைத்துக் கொண்டது அவருக்கு நல்லதாகத் தோன்றவில்லை. எப்படியாவது சிக்கலில் மாட்டி வைத்துச் சென்னியப்பன் பழி வாங்கி விடுவானே என்பதை உணர்ந்து அவர் மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தார்.

* * *

அடுத்த வெள்ளிக்கிழமை. காலையில் போலீஸார் வந்து வெற்றிலை பாக்குக் கடை வடிவேலுவைப் பிடித்துக் கொண்டு போய் விட்டார்கள்.

நாச்சியாருக்குத் தகவல் எட்டியது. 'கோ'வென்று அழ ஆரம்பித்து விட்டாள். "எல்லாம் அந்தச் சென்னியப்பன் வேலையாகத்தான் இருக்கும்" என்று பொருமிக் கொண்டே, போலீஸ் அவுட் போஸ்டுக்கு ஓடினார் வீராசாமிச் சேர்வை.

விஷயம் என்னவென்றால், சென்னியப்பனை முதல் நாள் இரவில் யாரோ நாலைந்து பேர்கள் பிடித்துச் சக்கையாக அடித்துத் தள்ளிவிட்டார்கள். ஊருக்குத் தெற்கே மூன்று மைல் தொலைவிலுள்ள ஏரிக்கரையில் சம்பவம் நடந்திருக்கிறது. சென்னியப்பன் முக்கி முனகிக் கொண்டு நேரே போலீசாரிடம் வந்து பிராது கொடுத்துவிட்டான். தான் சந்தேகப் படும் புள்ளிகளின் ஜாபிதாவில், வடிவேலு பெயரையும் சேர்த்துச் சொல்லி விட்டிருந்தான்!

"நேற்று உன் கடையில் இருந்தாயா?" என்று தொடை கட்டின் ஸ்டேபிள் கேட்டார்.

"இல்லே. நேற்று கடை திறக்கவில்லே" என்றான் வடிவேலு.

"ஏன் கடை திறக்கவில்லே?"

"நேற்று முழுவதும் ஒரே தலைவலி. வீட்டிலேயே படுத்திருந்தேன்" என்றான் வடிவேலு.

போலீஸாருக்கு அவன்மேலிருந்த சந்தேகம் ஊர்ஜிதமாயிற்று.

வீராசாமிச் சேர்வை, கெஞ்சாத வண்ணம் கெஞ்சி மருமகனை ஜாமீனில் வெளியே கொண்டு வருவதற்குள் சாயங்காலம் நாலு மணிக்கு மேல் ஆகிவிட்டது.

"அந்தப் பாவி சென்னியப்பனுக்கு ஆயிரம் பொய்ச் சாட்சி சொல்லியிருக்கிறே அப்பா. அதற்குக் கைமேலே பலன் கிடைத்து விட்டது" என்று அழுதாள் நாச்சியார்.

வடிவேலு மனம் இடிந்து போய்விட்டான்.

மகளை அழாதே என்று சொல்லி விட்டு, வீராசாமிச் சேர்வை மருமகனைக் குறுக்கு விசாரணை செய்யத் தொடங்கினார்.

"நீ இந்தச் சம்பவத்திலே சம்பந்தப்படவில்லையே, உள்ளதைச் சொல்லு!"

"நான் அந்த வழிக்கெல்லாம் போகிறவன் இல்லே, மாமா!"

"அப்போ, நேற்று சாயங்காலம் எங்கே போயிருந்தே?"

"பிள்ளையார் கோவில் முகப்பிலே போய் உட்கார்ந்திருந்தேன்."

"எத்தனை மணிக்குத் திரும்பி வந்தே?"

"ஒன்பது மணி இருக்கும்."

"பிள்ளையார் கோவிலில் என்ன செய்து கொண்டிருந்தே?"

"ஏழு மணிக்கு யாரோ ஒரு சாமியார் அங்கே வந்தாரு. அவரும் நானுமாகப் பேசிக் கொண்டிருந்தோம்."

"எத்தனை மணி வரையில் நீங்கள் பேசிக் கொண்டிருந்தீங்க?"

"எட்டு, எட்டேகால் மணிக்குத்தான் அந்த இடத்தை விட்டுக் கிளம்பினேன்."

"அது எப்படி மணிக்கணக்கை அவ்வளவு சரியாகச் சொல்லுறே?"

"போலீஸ் அவுட் போஸ்ட் சேகண்டி எட்டு மணி அடிச்சது. பிறகு கொஞ்ச நேரத்துக் கெல்லாம், அந்தச் சாமியாரு புறப்பட்டாரு. நானும் வீட்டுக்குக் கிளம்பினேன்."

வீராசாமி பரபரப்படைந்தார். "இப்போ அந்தச் சாமியாரை எப்படியாவது தேடிக் கண்டுபிடித்தாகணும், சாட்சி சொல்ல."

வடிவேலு பெருமூச்சு விட்டான்.

"அவரு நாடோடிச் சாமியாரு. எங்கே போனாரோ இருக்குன்னே!"

வீராசாமிக்குப் பெருத்த ஏமாற்றம். ஒரு அருமையான சாட்சி தப்பி விட்டதே என்று!

இதைக் கேட்டுக் கொண்டிருந்த நாச்சியார் கண் கலங்கினாள். "எல்லாம் அந்தப் பிள்ளையாரப்பன் தான் நம்மைக் காப்பாத்தணும். அவரு பார்த்துக்கிட்டுத்தானே இருக்கிறாரு. இவரு அங்கே உட்கார்ந்திருந்ததை."

"ம்ஹூம்... பிள்ளையார் மட்டும் சாட்சி சொல்ல வந்தா எவ்வளவு நல்லாயிருக்கும்?" என்று பெருமூச்செறிந்தார் வீராசாமி.

* * *

இருபது நாட்கள் கழித்து, பக்கத்து நகரத்தில் இருக்கும் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில், வழக்கு விசாரணை நடந்தது.

வடிவேலுவுக்குக் கொடுக்கல் வாங்கல் விஷயமாகச் சென்னியப்பன் மேல் மனத்

தாங்கள் இருந்தது என்பதற்கும் வெற்றிலை பாக்குக் கடையில் வருகிறவர் போகிறவர்களிடத்தில் செல்லியப்பனின் அநியாயங்களைப் பற்றி எதிரி வடிவேலு காரசாரமாகப் பேசியதற்கும் சாட்சிகள் ருஜுக் கொடுத்தார்கள்.

குறுக்கு விசாரணையில் வடிவேலு, தான் அன்று சாயங்காலம் ஆறரை மணியிலிருந்து எட்டு மணி வரை பிள்ளையார் கோயில் முகப்பில் இருந்ததை வற்புறுத்திச் சொன்னான்.

"சம்பவம் எட்டரை மணி சுமாருக்கு நடந்திருக்கிறது. அந்நேரத்தில் நீ பிள்ளையார் கோயில் முகப்பில் இருந்ததற்குச் சாட்சி உண்டா?" என்றார் மாஜிஸ்டிரேட்.

"இல்லை" என்றான் வடிவேலு. அவனுக்குக் கோர்ட்டு நடவடிக்கை அலுத்து விட்டது.

வடிவேலுவின் வக்கீல் இரண்டு நாள் "வாய்தா" கேட்டுக் கொண்டார்.

"எப்படியாவது அந்தச் சாமியாரைத் தேடிப் பிடித்தாக வேண்டும்" என்று வீராசாமிச் சேர்வையை வற்புறுத்தினார்.

இருபது நாட்களாகத் தேடி அகப்படாத அந்த மாயச் சாமியார் இனிமேலா அகப்படப் போகிறார் என்று மனம் நொந்து கலங்கிக் கண்ணீர் விட்டாள் நாச்சியார்.

வீராசாமி தாம் செய்த பாவந்தான், மகள் வாழ்வை வந்து கவ்விக் கொண்டதாக நினைத்துச் சோர்ந்து போனார்.

• • •

நாச்சியார் அன்று கோர்ட்டுக்குப் போகவில்லை. கண்ணீரும் கம்பலையுமாக விளக்கு முன்னால் உட்கார்ந்து தெய்வங்களை யெல்லாம் வேண்டிக் கொண்டிருந்தாள்

"ஒன்றும் கவலைப்படாதே, நாச்சியாரு அவரவர் விதி அவரவருக்கு. உன் புருஷன் ஜாதகம் இப்படி யிருக்குமின்னு யார் கண்டாங்க!" என்று சொல்லி விட்டு, நகரத்துக்குப் போனார் வீராசாமி.

சாமியார் திடீரென்று கோர்ட்டில் தோன்றித் தன் புருஷனுக்குச் சாதகமாகச் சாட்சி சொல்லுவது போலவும், கோர்ட்டார் உடனே வடிவேலுவை விடுதலை செய்வது போலவும் ஏதேதோ பகற்கனவு கண்டு கொண்டிருந்தாள் நாச்சியார்

மணி பன்னிரண்டு அடித்தது.

"இதற்குள் தீர்ப்புச் சொல்லியிருப்பார்கள்" என்று நினைத்து அவள் உள்ளம் அதிர்ச்சி யடைந்தது. வாசலுக்கு வந்து, வண்டி ஏதாவது வருகிறதா என்று பார்த்தாள். தெருவெல்லாம் வெறிச்சோடிக் கிடந்தது. எல்லாம் சந்தோஷமாக முடிந்தால், பிள்ளையாருக்குச் "சிதர்" விடுவதற்கென்று வாங்கித் தயாராக வைத்திருந்த தேங்காய்களைப் பார்த்தாள் நாச்சியார்.

"அம்மா! கொஞ்சம் சாதம் இருந்தால் போடு தாயே, பசியா யிருக்குது."

யாரோ பிச்சைக்காரக் குரல் கேட்டது. வெளியே எட்டிப் பார்த்தாள் நாச்சியார். அதுவும் ஒரு சாமியார்தான். ஒரு வேளை இவர்தான் அந்தச் சாமியாராக இருக்குமோ? தெய்வத்தைக் கண்ணால் கண்டதுபோல் உடம்பு புல்லரித்தது நாச்சியாருக்கு.

ஓடிப்போய் இருக்கிற பழைய சாதத்தையெல்லாம் ஒரு பாத்திரத்தில் எடுத்துக் கொண்டு வந்து சாமியாரின் திருவோட்டில் கவிழ்த்தாள் ஒரு கிண்ணம் பழைய குழம்பை அதன்மேல் ஊற்றினாள்.

"நீ மகராசியா யிருக்கணும், தாயே!" என்று வாயார வாழ்த்தி, சாமியார் அங்கேயே உட்கார்ந்து சாப்பிட ஆரம்பித்தார்.

சாமியாரிடம் எப்படி விசாரிப்பது என்று தெரியாமல் நாச்சியார் திகைத்துக் கொண்டிருக்கும் பொழுதே, 'ஜல் ஜல்' என்று குதிரை வண்டிச் சத்தம் கேட்டது.

நாச்சியார் வாசலுக்கு வந்தாள்.

குதிரை வண்டி நின்றது. வீராசாமிச் சேர்வையும் வடிவேலுவும் சிரித்த முகத்தோடு கீழே இறங்கினார்கள்.

நாச்சியார் செய்த பிரார்த்தனை வீண் போகவில்லை. அவள் கண்களிலிருந்து கண்ணீர் அருவிப் பெருக்காக வழிந்தோடியது.

"பிள்ளையார் காப்பாற்றி யிருக்கிறாரம்மா, உன் புருஷனை!" என்று சொன்னார் வீராசாமி.

"மாமா!" என்று கூவினான் வடிவேலு. "இவர்தான், அந்தச் சாமியார்."

சாமியார் திகைத்துப் போனார். அவருக்குத் தலைகால் புரியவில்லை.

"கடையிலே என்ன நடந்தது?" என்று நாச்சியார் கேட்டாள்

வீராசாமிச் சேர்வை சொன்னார்:

"விசாரணை முடியப் போகும் போது, கோர்ட்டுக்கு வெளியில் தற்செயலாகச் செல்லப்பனைப் பார்த்தேன்."

"எந்தச் செல்லப்பன்?"

"அவன்தான், நம்ம ஊர் பஞ்சாயத்து சிப்பந்தி. லாந்தல் கம்பங்களிலே விளக்கேற்றுகிறவன். பிள்ளையார் கோயில் முகப்பிலே இருக்கிற கூண்டு லாந்தலுக்கும் அவன்தான் விளக்கேற்றுவான். வழக்கைப்பற்றி அவன் கிட்டே சொல்லும்போதே எனக்கு உடம்பு புல்லரிக்குது. 'எத்தனை மணிக்கு நீ அந்த வியாழக்கிழமை யன்றைக்கு விளக்கேற்றினாய்' என்று கேட்டேன். 'எட்டு மணிக்கு' என்று சொன்னான். உடனே அவனைக் கா கரன்னு கோர்ட்டுக்குள்ளே இழுத்துக்கிட்டுப் போயிட்டேன். வக்கீல் அப்படியே துள்ளிட்டாரு துள்ளி. அந்தச் செல்லப்பன் அன்றைக்கு, தீப்பெட்டியை மறந்துபோய் வந்துவிட்டான். பிள்ளையார் கோயில் முகப்பிலே இருந்த நம்ம வடிவேலுவிடம் தீப்பெட்டி கேட்டு வாங்கி அப்புறம் விளக்கைப் பொருத்தியிருக்கிறான். கூண்டிலே ஏறி அவன் சாட்சி சொன்னதும், கேஸ் டபார்னு நமக்குச் சாதகமாகத் திரும்பிப் போச்சு. பிள்ளையார் நம்மைக் கைவிடல்லை, காப்பாற்றி விட்டாரம்மா!"


சாமியாருக்கு, இப்பொழுதுதான் விஷயம் ஒரு வகையாக விளங்கியது.

வடிவேலுவுக்கு ஏதோ பேய்க் கனவு கண்டு விழித்துக் கொண்டது போலிருந்தது. பேச்சு ஓடவில்லை அவனுக்கு.

வீராசாமிச் சேர்வை சிரித்தார்.

நாச்சியார் 'சிதர்' தேங்காய்களை எடுத்துக் கொண்டாள். அவள், வீராசாமிச் சேர்வை, வடிவேலு, சாமியார் ஆகிய நால்வரும் உண்மைகளுக்கெல்லாம் மௌனச் சாட்சியாக வீற்றிருந்த பிள்ளையாரது சந்நிதியை நோக்கிப் போனார்கள்.

கள்ளமும் உள்ளமும்



ஊருக்கு மேற்கே பனந்தோப்பு. ஒரு மைல் நீளத்துக்கும் அரை மைல் அகலத்துக்கும் வரிசையாகச் சிப்பாய்களை நிறுத்திய மாதிரி பனைமரங்கள் நிறையக் காட்சியளித்தன. ஆடிக் காற்றில் 'ஹோ' வென்ற பேரிரைச்சலில் அந்தப் பிரதேசமே அலறும்போது நரிகள்கூடத் தோப்புக்குள் நுழையப் பயப்படும்.

ஆனால் மாரிமுத்துவுக்குப் பயமில்லை. அவன் அங்கேதான் பிறந்தான். அங்கேதான் வளர்ந்தான். அவனது உயிர் நிலை தொழில் நிலை எல்லாமே அந்தப் பனங்காட்டில்தான் இருந்தன.

யாரோ எந்தக் காலத்திலோ கட்டிய கல் மண்டபம் ஒன்று அந்தக் காட்டின் நடுவில் இருந்தது. காலத்தோடு தேய்ந்து சிதிலமாகிப் போன கட்டடம். மாரிமுத்துவின் அலுவலகம் அதுதான்.

மண்டபத்துத் தூண் ஒன்றில் தலையைச் சாய்த்தபடி அரைத் தூக்கத்தில் இருந்தான் அவன். தூக்கம் என்பது மாரிமுத்துவைப் பொறுத்தவரை உடலுக்கு ஓய்வு மனம் ஓயாது. அது என்னென்னவோ கணக்குப் போட்டு அழித்துக் கொண்டிருக்கும்.

மூங்கிலைப் போல விறைப்பான உடம்பு. கரணை கரணையாகத் திண்மை யேறிய கட்டான உடலமைப்பு. இவனை நம்பலாமா, கூடாதா என்கிற சந்தேகத்தை எழுப்பும் பார்வை. நீண்ட கால்கள். பனங்காட்டில் அவனுக்குச் சரியாக நரிகள்கூட ஓட முடியாது. கல்வி வாசனை இல்லாத முரடன்.

ஒரு முறை கொட்டாவி விட்டுக் கண்ணைப் பிசைந்து கொண்டு ஆகாயத்தைப் பார்த்தான் அவன். கடுக்காயை அரைத்துப் பூசியது போல வானம் இருளில் ஆழ்ந்து கிடந்தது. பனை ஓலைகள் சற்றைக் கொருதரம் காற்றில் சலசலத்தன. அது தவிர வேறு சத்தமே இல்லை.



''இம்புட்டு நேரமாச்சு.....இன்னும் காணுமே!'' என்று முணுமுணுத்தபடி எழுந்து குறுக்கும் நெடுக்கும் நடைபோட ஆரம்பித்தான் அவன். குழைந்து ஒட்டிய வயிறு இன்னும் உணவு உட்கொள்ளவில்லை என்பதைக் குறித்தது.

நடந்து கொண்டே இருந்தவன் சட்டென்று நின்றான். காதுகள் மோப்பம் பிடித்து விட்டவைபோல நிமிர்ந்தன.

''யாரு! அஞ்சலையா?''

''பூனையாட்டம் வந்தால் கூடக் கண்டுபிடிச்சிடறியே!'' என்று சிரித்தாள் அஞ்சலை. அவளுடைய தலையில் ஒரு கூடை இருந்தது. பண்டபத்துத் திண்ணையில் அதை இறக்கி வைத்தாள். அதனுள் இருந்த சாப்பாட்டுப் பாத்திரத்தை எடுத்து அவனிடம் கொடுத்தபடியே, ''இன்றைக்கு அம்பாசியா? பாதையே புலப்படல்லியே?'' என்றான்.

''அப்படித்தான் தெரியுது. வானத்திலே நிலா எப்படி இருக்கும்? அதுதான் தரைக்கு இறங்கி வந்து விட்டதே!'' என்று குறும்பாகச் சொன்னான் அவன்.

''உனக்கு எப்பொழுதும் கேலிதான். மணி என்ன இருக்கும்?''

''பதினொரு மணி இருக்கலாம்.''

''வீட்டை விட்டுப் புறப்படும் போதே பதினொரு மணி ஆயிட்டுது. இப்போது மணி பன்னிரண்டாவது இருக்கும்.''

''அப்படியா? நூறு வருசம் ஆயிட்ட மாதிரி இருக்குது எனக்கு.''

''ஏன்?''

''என்னவோ மனசிலே ஒரே பரபரப்பு'' என்று கூறிவிட்டு அவன் உட்கார்ந்து கொண்டான்.

''பனங்காட்டிலே தனியா இருக்கிறது உனக்குப் பயமா இருக்குதாக்கும்?'' என்றான் அவன்.

''அதெல்லாம் இல்லே.''

''பின்னே மனசிலே ஏன் பரபரப்பு?''

அவன் அவளை ஏறிட்டுப் பார்த்தான். தன்னை அவள் புரிந்துகொள்ளவில்லையே என்ற ஆதங்கம் அந்தப் பார்வையில் தெரிந்தது. மனத்தின் பரபரப்புக்குப் பயமா காரணம்? பயப்படுவதற்கு என்ன இருக்கிறது?

அஞ்சலை உண்மையில் அவனைப் புரிந்து கொள்ளவில்லை. ''சலசலப்புக்கு நான் பயந்தால் ஆண் பிள்ளையா?'' என்று முறுக்கினான். அவளுடைய மௌனத்தைக் கண்டு அவனுக்குக் கோபம் வந்து விட்டது. ''என்னை நீ சரியாகத் தெரிஞ்சுக்கிடல்லே'' என்றான்.

''தெரியாமல் என்ன? நல்லாத் தெரியுது. பேச்சும், வீறாப்பும் வெறும் வேஷம்தான். சிவப்புத் தலைக்குப் பயப்படாத நெஞ்சு உண்டா?''

''அஞ்சலே! அளந்து பேசு. இந்த மாரிமுத்து பேர் கேட்டால் டெப்டிகூடக் கொஞ்சம் யோசனை பண்ணுவாரு.''

''ஆமாம். ஆமாம். பழைய அனுபவம் இருக்குதில்லே?''

''என்ன சொன்னே? உங்க அப்பன், உங்க அண்ணன், உங்க ஊர்க்காரர்களைப் போலத் தலைமறைவா வியாபாரம் பண்ணுகிற சென்மம் இல்லே இது. தெரியுமில்லே?''

''ஏன் எங்க அப்பனுக்கு என்ன? யார் சொத்தை மோசம் செய்தாரு? யார் வீட்டிலே கன்னம் வைச்சாரு? அவரு தர்மத்துக்குப் பயந்தவரு....''

''யாரைப் பார்த்துத் திருடன் என்று சொல்லுறே?''

''அவுங்க அவுங்க மனசுக்கே அது நல்லாத் தெரியும்.''

மாரிமுத்து வெகுண்டு எழுந்தான். அடுத்த கணம் 'பளீர்' என்று ஒரு அரை விழுந்தது, அஞ்சலையின் கன்னத்தில். திணறிப்போய் அவள் கீழே விழுந்தாள்.

''நானா திருடன்? போக்கில்லாமல், வழியில்லாமல் திருடினவனா நான்? ஜாக்கிரதையாகப் பேசு. பெண் பிள்ளையாச் சேன்னு இத்தோடு விட்டேன், ஆமாம்'' என்று சீறினான்.

''உள்ளதைச் சொன்னால் உடம்பு எரியுதாக்கும்!'' என்று முகத்தைத் திருப்பியபடி எழுந்தாள் அவள்.



''ஏய்!...''

''என்ன அதட்டுகிறாய்? தனியாக ஒரு பெண் பிள்ளை அகப்பட்டுக்கிட்டால் வீரம் காட்டறியே?''

மாரிமுத்துவை இந்தத் தாக்குதல் அடக்கி விட்டது. அஞ்சலை மளமள வென்று உள்ளே போனாள். சிறிது நேரத்தில் ஒரு கூடையுடன் திரும்பி வந்தாள். தலைக்குச் 'சும்மாடு' இட்டுக் கூடையைத் தூக்கி வைத்துக் கொண்டாள். திரும்பிப் பார்க்காமல் வேகமாக நடந்தாள்.

அவன் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தான். இருந்த இடத்தை விட்டு எழுந்திருக்கவில்லை. மனம் பொருமியது. எப்போதோ அசந்தர்ப்பமாக வாய்த்த திருட்டுப் பட்டமும், அதைத் தொடர்ந்த ஜெயில் வாசமும் அஞ்சலையின் கண்டனத்துக்கும் கேலிக்கும் உள்ளாக வேண்டுமா? அவன் வேண்டுமென்றா திருடினான்? திருட்டுக் குற்றம் அவன்மீது விழுந்து அமுக்கி விட்டது. போயும் போயும் திருடுகிற அளவுக்குக் கேவலமாக நடந்து கொள்ளும் புத்தி இன்னமும் அவனுக்கு வரவில்லையே!

வேறு யார் இடித்துக் கூறியிருந்தாலும்கூட வருத்தம் இருந்திராது. அஞ்சலை அல்லவா ஏசிக் காட்டுகிறாள்! அவனுடைய வாழ்வையும் மனத்தையும் சுருட்டித் தன்னிடம் இழுத்துக்கொண்டு விட்டவள் பேசுகிற பேச்சா இது!

சாப்பாட்டை அவன் தொடவில்லை. மனமோ நிலைப்படாது போயிருந்தது. எழுந்து நடந்தான். இத்தனை காலமும் அஞ்சலையின் அன்பைப் பெற்று விட்டதாக எண்ணிப் பூரித்திருந்த மனம் உடைந்து விட்டது. இனி என்ன வாழ்க்கை வேண்டியிருக்கிறது?

தோப்பைக் கடந்து சாலைக்கு வந்தான். பாதை தெரியவில்லை, கும்மிருட்டில். அவனது வாழ்வின் கதியற்ற போக்கைப்போல, அப் பாதை நீண்டிருந்தது.

திடீரென்று தொலைவில் ஒரு மோட்டாரின் முன் விளக்கு தெரிந்தது. சிறு வட்டமாக ஆரம்பித்த அது வர வரப் பெரிதாகியது. இந்த வேளையில் இந்தக் கிராமத்துக்கு யார் வரக் கூடும்?

மாரிமுத்து அதிக நேரம் யோசிக்கவில்லை. பாதையை விட்டு இறங்கி, வயலின் குறுக்கே ஓட ஆரம்பித்தான். வழியில் எதிர்ப்பட்ட சிறு சிறு வாய்க்கால்களையெல்லாம் தாண்டிக் கொண்டு சறுக்கி விழுந்து, காலிலிருந்து ரத்தம் கசிவதைக் கூடப் பொருட்படுத்தாமல் ஓடினான்.

ஊரின் எல்லையைத் தொட்டதும் திரும்பிப் பார்த்தான். மோட்டார் ஊருக்குள் புகுவது தெரிந்தது. பரபரப்பும் துடிப்பும் உந்த மீண்டும் ஓடினான்.

கூடையுடன் வீட்டின் பின்புறத்தை அடைந்த அஞ்சலை, தன் முன் வேர்க்க விறுவிறுக்க நிற்கும் மாரிமுத்துவைக் கண்டதும் ஒன்றும் புரியாமல் ஒரு கணம் திணறினாள். அவனைப் பார்க்கவே பயமாக இருந்தது. உடலெல்லாம் ரத்தக் கறை. பெருமூச்சு சீறி வந்த வேகத்தில் மூக்கே துண்டித்து விடும்போலிருந்தது.

''ஏய்! குடையைக் கீழே இறக்கு. மரியாதையா இறக்கு....'' என்று கத்தினான் அவன்.

''எதற்கு?'' என்று திகைப்புடன் கேட்டாள் அஞ்சலை.

''அதெல்லாம் சொல்ல முடியாது.''

''என்ன அதிகாரம் பண்ணறே? இதற்காகத்தான் ஓடி வந்தாயா? உன் முகத்திலே விழித்தாலே பாவம். வழியை விடு'' என்றாள்.

''முடியாது. இறக்கு குடையை. இல்லாட்டி வீண் வம்பு வரும்.''

''நல்லா இருக்குதே நியாயம். வழியை மறிக்கிறது மில்லாமல் வம்பு வேறு வருமாமில்லே? சத்தம் போட்டுக் கும்பலைக் கூட்டிடுவேன். வழியை விடு'' என்றாள் அஞ்சலை.

''எங்கே, சத்தம் போடு, பார்ப்போம்'' என்றான் அவன்.

''இப்பொழுது எதற்காகக் குடையை இறக்கணுங்கிறே?''

''எதற்காகவா? எனக்குத் தெரியாமல் இரண்டு பங்குச் சரக்கில்ல பிடிச்சுக் கிட்டு வந்திருக்கிறே! என்னை ஏமாந்தவன்னு நினைத்தாயா?''

''அப்படித் திருட்டுப் புத்தி எங்க வம்சத்துக்கே கிடையாது.''

'பளீர்' என்று ஒரு அறை விழுந்தது அவள் கன்னத்தில். குடை கவிழ்ந்தது தரையில். அதனுள் இருந்த புட்டிகள் உடைந்து சாராய நாற்றம் 'குப்' என்று வெளிப்பட்டது. இதே சமயம் வீட்டின் பின்புறக் கதவு திறக்கவும் நாலைந்து போலீஸ்காரர்கள் நுழைந்தனர்.


மாரி முழித்து கூச்சல்போட ஆரம்பித்தான். ''என்னை மறிச்சப் போலீசிலேயா பிடிச்சுக் குடுக்கிறே? இரு. இரு. திரும்பி வந்து உன்னை என்ன செய்கிறேன் பார்'' என்று உறுமினான்.

அஞ்சலை விழித்தாள். அவனை அவளா மறித்துப் போலீசில் ஒப்படைத்தாள்! இது என்ன நாடகம்? மெல்ல மெல்ல அவளுக்கு எல்லாம் புரிந்தது. மாரி முத்து ஓடி வந்ததும், அவளை வழி மறித்ததும் தன் கையில் விலங்கை ஏற்றுக் கொள்ளத்தானா?

''சீக்கிரமே திரும்பி வாங்க. அது வரையில் காத்திருப்பேன்'' என்றாள் அவள், கண்களில் நீர் மல்க.

கன்னத்தில் விழுந்த அடியை விட உள்ளத்தில் விழுந்த அடி பெரிதாக இருந்தது. ஆனால் அதிலே அன்பின் போதையும் இருந்தது!


மக்ளீன்ஸ் பற்களை
முன்னைவிட அதிவெண்மையாக
சுத்தம் செய்கிறது!
MACLEANS
peroxide
TOOTH PASTE
MTY 44 TAM
மக்ளீன்ஸால் வெண்
மையாக்கப்பட்ட பற்கள்
ஆரோக்கியமானது
மட்டுமல்லாமல் பற்சிதைவினி
ன்றும் காப்பாற்றப்படுகின்றன.


மேலும்
மலிவானது!
குடும்பம்
முழுவதற்கும்
ஓரே டால்க்
PROTEX
All Purpose
TOILET POWDER
ப்ரோடெக்ஸ்
சர்வ பிரயோக டாய்லட் பவுடர்
ஜயண்ட் சைஸ் அழகிய
டப்புடன் கிடைக்கும்!

காலம் மாறும், கவலைப்படாதே!

குமார்



ஒரு அழகான பூந்தோட்டம். எங்கும் ரோஜா மலர்களின் வாசம் பரவி வண்டுகளையும் வண்ணத்திப் பூச்சிகளையும் 'வாருங்கள்' என்று அழைத்த வண்ணமாக இருந்தன. அந்த ரோஜா மலர்களில் வண்ணத்திப் பூச்சிகள் ஒய்யாரமாகப் பறந்து சென்று உட்கார்ந்தன. வண்டுகளும் ஆனந்தமாகப் பாடிய வண்ணம் தேனைப் பருகிக் கொண்டிருந்தன. இவ்வளவு சந்தோஷத்துக்கு நடுவில் எங்கிருந்தோ ஒரு விம்மல் சத்தம் கேட்டது. ஒரு கட்டெறும்பு, விம்மலும் அழுகைச் சத்தமும் வரும் இடத்தை நோக்கிச் சென்றது.

அங்கு ஒரு புழு அழுது கொண்டிருந்தது. "இவ்வளவு நல்ல சூழ்நிலையில் நீ மட்டும் ஏன் அழுது கொண்டிருக்கிறாய்? சொல்!" என்றது எறும்பு.





"இவ்வளவு அழகான ரோஜா மலர்களின் மீது வண்ணத்திப்பூச்சி குதூகலமாகப் பறந்து சென்று உட்கார்ந்து ஆனந்தப்படுகிறது. நான் கேவலம் ஒரு புழு. நெடிய தூரம் வலிக்க ஊர்ந்து செல்ல வேண்டியிருக்கிறது. அப்படிச் சென்று ரோஜா மலரை நெருங்கினாலும் அது விரட்டுகிறது. நானும் பறந்து சென்று மலர் மேல் உட்காரும் நிலை கிடைக்கவில்லையே!" என்று ஏக்கத்துடன் கூறியது.

இதைக் கேட்ட எறும்பு, "பூ. பூ! இவ்வளவு தானே! கவலைப்படாதே. காலம் மாறும்" என்று சொல்லி அவ்விடத்தை விட்டுச் சென்று விட்டது.

மழைக் காலம் வந்தது. எல்லாப் பூச்சிகளையும் போல வண்ணத்திப் புழுவும் தன் இருப்பிடத்தில் ஒண்டிக் கொண்டிருந்தது. 'காலம் மாறும்; கவலைப்படாதே' என்று எறும்பு சொன்னது பலிக்க ஆரம்பித்து விட்டது. மெள்ள மழைக் காலம் போய் வசந்தகாலம் துளிர் விட்டது. புழுவுக்கு முதுகில் வண்ணத்திப் பூச்சியைப் போல் அழகான இறக்கைகள் முளைக்க ஆரம்பித்தன. இறக்கை கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து பறக்கும் சமயமும் வந்தது. "எறும்பே! உன் வாக்கும் பலித்தது. என் கஷ்ட காலமும் பறந்து போய் விட்டது. 'போ போ' என்று விரட்டிய ரோஜாமலரும் 'வா வா' வென்று வருந்தி அழைக்கும் காலம் வந்து விட்டது!" என்று பாடிய வண்ணம் ரோஜா மலரிடம் குலாவியது.

அரசகுமாரி ஆயிஷா

~4~

கதை.....கௌசிகன்

படம்.....பாபு



அடிமை காசிமின் மூலம் மங்குவின் சூழ்ச்சிகள் முழுதும் அறிந்தார் மன்னர். மங்கு எடுத்துச் சென்ற சீசாவிற்குள் பார்த்த பெண்ணுருவம் அரசகுமாரி என்பதைக் காசிம் புரிந்து கொண்டான்.

ஹாஸிமார் கோபத்துடன் சீறிக்கொண்டு அங்கு உலாவினார். "என்னையே மந்திரவாதியாக ஏமாற்றி விட்டான் துரோகி. கத்தோட்டையும், ஹூக்காவும் வெறும் கதை" என்று ஆத்திரமடைந்தார் அரசர்.






அப்போது மங்கு காட்டிய மந்திர நீர் உள்ள பாத்திரம் அவர் கண்ணில் தென்பட்டது. அதைப்பார்த்த அரசருக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது.

ஆவேசத்துடன் அதை உதைத்துத் தள்ளினார். மோகினியின் பெண்ணுருவைக் கொண்ட அந்த மந்திர நீர்ப்பாத்திரம் சுவரில் மோதிச் சுக்கு நூறாகியது. திரவம் சுற்றும் தரையில் சிதறியது.





திரவம் தெறித்த இடத்திலிருந்தெல்லாம் பச்சை நிறமான புகை 'குபுகு' வென்று பொங்கிச் சுருண்டு சுருண்டு மேலே எழுந்தது. அப்படிப் பரவிய புகை மெள்ள மெள்ள

ஆடி அசைந்து ஒன்று சேர்ந்து பிரமாண்டமான ஒரு மனித உருவமாகக் காட்சி அளித்தது. மங்குவின் மந்திர வேலைகளில் இதுவும் ஒன்று போலும் என்று அரசர் மனதில் எண்ணினார்.



அந்த பூதாகாரமான உருவம் தன் இடி போன்ற குரலில் சிரித்தபடியே, "சலாம் அர-சே! பல்லாயிரம் வருஷங்களாகப்பாத்திரத்திலே சிறைப்பட்டுக் கிடந்த என்னை விடுதலை செய்ததற்கு நான் நன்றி செலுத்-




-தக்கடமைப்பட்டுள்ளேன்." என்றது பூதம். 'விடுதலை, விடுதலை' என்று ஆர்ப்பரித்த அந்த ஆவி உருவைப் பார்த்து அரசர், "மங்குவிடமிருந்து என் மகளை மீட்டுவர எனக்கு நீ உதவி செய்ய மாட்டாயா?" என்று கேட்டார்.



"அது தான் என்னால் முடியாது. எப்போது இந்தத்திரவமெல்லாம் தரையில் சிதறியதோ அப்போதே என் பலமெல்லாம் போய்விட்டது. இனி என்னால் மனிதர்களுக்கு எவ்வித உதவியும் செய்ய முடியாது" என்றது புகைபூதம்.



"மங்குவின் கற்கோட்டை சந்திரமலைகளுக்கு அப்பால் உள்ளது. அதை அடைய நூவீன்-கும் மணல் நிறைந்த பாலைவனத்தைக் கடக்க வேண்டும். ஆர்வலருக்குக் கீழேயுள்ள மனிதர்களால் அதைக் கடக்க முடியாது.



வீரர்களாலோ, மந்திர சக்திகளாலோ அவ-லை வெல்ல முடியாது" என்றது பச்சைப் புகை உருவம் - மெள்ள மெள்ள அந்தப் புகை உருவம் இவர்கள் பார்வையிலிருந்து தேய்ந்-



-தபடியே "இப்போது நான் சொன்ன வார்த்தைகளில் உள்ள ரகசியத்தை யார் ஒருவன் அறிகிறானோ அவனே உன் மகளை மீட்டு வரக் கூடியவன்" என்று சொல்லி மறைந்தது.

(தொடரும்)

பாட்டுக்கச்சேரி



பாட்டுக் கச்சேரி — இங்கே
பாட்டுக் கச்சேரி!

கேட்க வாருங்கோ — ஜோராய்க்
கேட்க வாருங்கோ!

வெங்கு பாடுகிறான் — சும்மா
வெளுத்துக் கட்டுகிறான்!

தகர டப்பாவில் — பாலு
தாளம் அடிக்கிறான்!

காப்பிச் செம்பிலே — கண்ணன்
கடம் அடிக்கிறான்!

வாக்கிங் ஸ்டிக்கிலே — பட்டு
'வயலின்' வாசிக்கிறாள்!

மொட்டைக் கத்திரியில் — ராஜி
'முகர்சிங்' வாசிக்கிறாள்!

வட்டை ஒன்றிலே — கஞ்சிரா
வரதன் வாசிக்கிறான்!

தகிட தகிட தோம் — தகிட
தகிட தகிட தோம்!

கேட்க வாருங்கோ — ஜோராய்க்
கேட்க வாருங்கோ!







17. பொம்மைப் பட்டணம்

இரண்டு கண்டெலிகளும் மேஜையின் மேல் பாயும் தருணத்தில், திறந்திருந்த அடுத்த அறையிலிருந்து ஒரு பெரிய காட்டுப் பூனை வெளியே வந்தது. பார்ப்பதற்குச் சிறு புலிக்குட்டியைப் போல் தோற்ற மளித்தது அந்தக் காட்டுப் பூனை. கண்ணாடி ஜாடிக்குப் பக்கத்தில் இருந்த கண்டெலிகளைப் பார்த்ததும் அது அவற்றின் மீது ஒரே தாவாகத் தாவியது.

மந்திரவாதி ஜிக் கதவைத் திறந்ததும் போலீஸ் அதிகாரிகள் உள்ளே நுழைந்தனர். "உன்னை அரசன் கட்டளைப்படி கைது செய்யப் போகிறோம். உன் வீட்டையும் இப்பொழுதே சோதனை செய்யப் போகிறோம். மால்கோஷும், கலாவும் எங்கே இருக்கிறார்கள் என்று சொல்லாவிட்டால் உன் உயிருக்கே ஆபத்து நேரிடும். எங்களுக்கு உதவியாக அரண்மனை மந்திரவாதியையும் அழைத்து வந்திருக்கிறோம். ஆகையால் உன்னுடைய மந்திர தந்திரங்கள் யாவும் எங்களிடம் பலிக்கமாட்டா. உன் செய்கைகள் யாவும் அரை நொடியில் அம்பலத்துக்கு வந்து விடும். உஷார்!" என்று ஜிக்கைப் பார்த்து எச்சரிக்கை செய்தார்கள் போலீஸ் அதிகாரிகள்.

அவர்கள் சொல்லியதைக் கேட்ட ஜிக் சிரித்தான். "நன்றாக வீட்டைச் சோதனை போட்டுக் கொள்ளுங்கள். மந்திரவாதியை விட்டு எந்தச் சாமானையும் பரீட்சை செய்து கொள்ளுங்கள். எனக்குப் பயம் இல்லை" என்றான். உடனே போலீஸ் அதிகாரிகள் "மூன்றாவது மாடியில் ஏதோ இரகசிய அறைகள் இருப்பதாகக் கேள்விப்பட்டோம். அங்கே போகலாம்" என்று கூறினார்கள்.

உடனே 'ஜிக்' "நீங்கள் அப்படிச் சொல்லாவிட்டாலும் அங்கேதான் உங்களை அழைத்துப் போகப் போகிறேன். முதலில் அந்த அறையைப் பாருங்கள். பிறகு உங்களுக்கு எந்த அறையைப் பார்க்க வேண்டுமோ நான் காண்பிக்கத் தயாராக இருக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டே மூன்றாவது மாடியில் உள்ள தன்னுடைய இரகசிய அறைக்கு அவர்களை அழைத்துச் சென்றான். அப்பொழுது ஜிக் தனது மனத்தில் "போலீஸ் அதிகாரிகளும் மந்திரவாதியும் எனது இரகசிய அறைக்குப் போவதற்குள் காட்டுப் பூனையின் வயிற்றுக்குள் அல்லவா கண்டெலிகள் இருக்கப் போகின்றன!" என்று நினைத்து ஆனந்தப்பட்டான்.

திறந்திருந்த கண்ணாடி ஜாடிக்குப் பக்கத்தில் இருந்த கண்டெலிகள் இரண்டும் மிகவும் புத்திசாலியான கண்டெலிகள் அல்லவா? திறந்த அறையிலிருந்து வந்த காட்டுப் பூனையை அவை பார்த்து விட்டன. அந்தப் பூனை தங்களின்மீது பாய யத்தனித்திருப்பதைக் கவனித்து விட்டு அரை நொடியில் மேஜைக்குப் பக்கத்தில் இருக்கும் முக்காலியில் குதித்தன. பிறகு இரண்டு கண்டெலிகளும் அவசரமாகக் கீழே இறங்கிப் பூனையினிடமிருந்து தப்பி ஓட யத்தனித்தன. கண்டெலிகளை நோக்கிப் பூனை வேகமாக மேஜையின்மீது பாய்ந்தது. பூனை தனது பாய்ந்த வேகத்தினால் திறந்திருந்த கண்ணாடி ஜாடியை வேகமாகக் கீழே தள்ளியது. அந்தக் கண்ணாடி ஜாடி கீழே ஓடிக் கொண்டிருந்த கண்டெலிகளுக்கு அருகில் விழுந்து உடைந்தது. உடனே நாலாபக்கமும் அதில் இருந்த மாற்று மந்திரப் பொடி சிதறியது; கண்டெலிகளின் மீதும் பட்டது. காட்டுப் பூனையின் தேகத்திலும் மாற்று மந்திரப் பொடி பட்டது. மால்கோஷும், கலாவும் மீண்டும் தங்கள் சுய உருவத்தை அடைந்தார்கள். ஆனால் அப்பொழுது மற்றொரு அதிசயமும் நடந்தது. காட்டுப் பூனைக்குப் பதிலாக ஒரு அழகிய அரச குமாரனும் தோன்றினான். மூன்று பேர்களும் ஒருவருக்கொருவர் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டார்கள். அப்பொழுது அங்கிருந்த சூழ்நிலையைத் தெரிந்து கொண்டார்கள்.

புதியதாகத் தோன்றிய அரசகுமாரன் தனது பெயர் ஜிலேந்திரன் என்றும் தான் பல மைல்களுக்கப்பால் உள்ள மாஞ்சை நாட்டைச் சேர்ந்தவன் என்றும் தெரிவித்தான். தான் மகாராஜா அரண்மனையில் விருந்தினனாய்ப் பல மாதங்களுக்கு முன் வந்ததாகவும் சொன்னான். அவன் தோற்றுப்போன மந்திரவாதியின் அறைக்குப் பக்கத்தில் இருந்ததாகவும் ஒருநாள் காலை 'ஜிக்' என்ற மந்திரவாதியும், தோற்றுப்போன மந்திரவாதியும் அரச குமாரியை அன்று இரவு அப் பட்டணத்தை விட்டு அப்புறப்படுத்துவதற்குத் திட்டம் போட்டிருப்பதை அறிந்து, அரசனிடம் அந்தச் சமாசாரத்தைச் சொல்ல யத்தனித்திருக்கும் பொழுது இரண்டு மந்திரவாதிகளும் விஷயத்தை அறிந்து, அவர்கள் கையில் இருந்த மந்திரக் கத்தியினால் தன் தலையைத் தடவியதாகவும், பிறகு தனக்கு என்ன நேர்ந்தது என்று தெரியாது என்றும் சொன்னான்.

அப்பொழுது அவர்கள் இருந்த கதவு படார் என்று திறந்தது. மால்கோஷ், கலா, ஜிலேந்திரன் முதலியவர்களெல்லாம் உயிர் பெற்றிருப்பதைப் பார்த்ததும், மந்திரவாதி ஜிக் மூர்ச்சை அடைந்து கீழே விழுந்தான். அதற்குப் பிறகு அவன் எழுந்திருக்கவே இல்லை.

ஜிலேந்திரன் எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டு அவசரமாகத் தன் இருப்பிடத்துக்குப் புறப்பட்டான். மால்கோஷும், கலாவும் உயிர் பெற்றுத் திரும்பி வந்ததைக்கண்டு குல்மா அடைந்த சந்தோஷத்துக்கு அளவே இல்லை.

மாமா குல்மாவிடம் விடைபெற்றுக் கொண்டு மால்கோஷும் கலாவும் அவ்வூரை விட்டுப் புறப்பட்டார்கள். மந்திர ஜமக்காளம் 'ஜாம்' என்று மேற்குத் திசையை நோக்கிப் பறந்து சென்று கொண்டிருந்தது. '' அண்ணா எங்கே போவது ?'' என்று கலா கேட்டாள். எங்கே போவது என்பது யாருக்குத் தெரியும். உனக்கு எப்படி எப்படித் தோன்றுகிறதோ, அந்தத் திசையெல்லாம் போ. பார்த்துக் கொள்ளலாம்'' என்றான்.

பல ஊர்களெல்லாம் தாண்டி ஜமக்காளம் பறந்து சென்று கொண்டிருந்தது. அப்பொழுது அவர்கள் பறந்து கொண்டிருந்த சற்றுத் தூரத்துக்கப்பால் வானத்தில் உயர ஏதோ ஒரு உருவம் தெரிந்தது. இந்த உருவம் வரவர மந்திர ஜமக்காளத்தை நோக்கி வருவது போல் இருந்தது. அந்த உருவம் சமீபத்தில் வரவர ஏதோ சத்தத்தை உண்டாக்கியதுபோல் இருந்தது. பயந்து கொண்டே மால்கோஷும் கலாவும் அந்த உருவத்தையே நோக்கிக் கொண்டிருந்தார்கள்.

''அந்த உருவம் பறக்கும் குதிரையாக அல்லவா தோன்றுகிறது. ஆஹா! அந்தக் குதிரையைப் பார்த்தாயா? என்ன அழகான வெள்ளைக் குதிரை? அதன் இரண்டு பக்கங்களிலும் சிறிய இறக்கைகள்'' என்றான் மால்கோஷ் ஆச்சரியத்துடன்.

அந்தப் பறக்கும் குதிரை அவர்களை நோக்கியே வந்து கொண்டிருந்தது.

இதைப் பார்த்த கலா, ஜமக்காளத்தை வேறு பக்கமாகத் திருப்பிப் பறக்கச் செய்தாள். ஆனால் பறக்கும் குதிரையோ ஜமக்காளம் எந்தப் பக்கம் செல்லுகிறதோ, அந்தப் பக்கமே வந்து கொண்டிருந்தது. உடனே மால்கோஷ், ''கலா! இந்தப் பறக்கும் குதிரையில் ஏறி வருவது யாரோ ஒரு மந்திரவாதியாகத்தான் இருக்க வேண்டும். எப்பொழுது நம்மையே பின்பற்றி வருகிறானே, அந்த மந்திரவாதியினால் நமக்கு ஏதாவது தீங்கு நேரிடுமோ என்று பயமாக இருக்கிறது. சற்றுக் கீழிறங்கி வேறு திசையை நோக்கிச் செல், பார்க்கலாம்'' என்று பயந்து கொண்டே சொன்னான்.

கலா உயரப் பறந்து சென்று கொண்டிருந்த ஜமக்காளத்தைச் சற்றுத் தணித்து வேறு திசையில் ஓட்டினாள். ஆனால் பறக்கும் குதிரை அவர்களை விடுவதாக இல்லை. குதிரையை யார் ஓட்டி வருகிறார்கள் என்று பார்க்க விரும்பினான் மால்கோஷ். ஆனால் அவன் உட்கார்ந்திருந்த ஜமக்காளத்துக்கு மேல் பறக்கும் குதிரை இருந்ததினால் அவன் தெளிவாகப் பார்க்க முடியவில்லை. தான் பறக்கும் ஜமக்காளத்துக்கு அந்தப் பறக்கும் குதிரை தணிந்து போகுமோ என்று எதிர்பார்த்தான் மால்கோஷ். ஆனால் பறக்கும் குதிரை ஜமக்காளத்தை விடச் சற்று உயரத்திலேயேதான் பறந்து கொண்டிருந்தது.

ஜமக்காளம் எந்தப் பக்கம் போகிறதோ, அந்தப் பக்கமேதான் பறக்கும் குதிரை வந்து கொண்டிருந்தது. மால்கோஷ் சொல்லியபடி, கலா ஜமக்காளத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக, பூமியை நோக்கியே ஜாக்கிரதையாகப் பறக்க விட்டுக் கொண்டிருந்தாள். நல்ல வேளையாக அவர்கள் அப்பொழுது பறந்து கொண்டிருந்த இடம் பல மைல்கள் விஸ்தீரணம் உள்ள பெரிய பாலைவனமாகக் காணப் பட்டது. அதனால் தான் பூமிக்குச் சமீபமாக மரங்கள் தொந்தரவு இல்லாமல் கலாவினால்ஜமக்காளத்தைக் கீழ் நோக்



நன்றி அறிவிப்பு



எனது குமாரன் திருவளர்ச் செல்வன் சந்தாசலபதிக்கும், பழனிச்செட்டிபட்டி வி. கே. ராஜாராம் அவர்களின் சகோதரி திருவளர்ச்செல்வி கலைசசுவுக்கும் 7-6-57 தேதி யன்று அருப்புக்கோட்டையில் நடைபெற்ற திருமண வைபவத்திற்கும், அன்று மாலை நடைபெற்ற திருமதி டி. வி. ரத்தினம் அவர்களின் இன்னிசை விருந்துக்கும், குமாரி விஜயலக்ஷ்மி அவர்களின் பரதநாட்டியத்திற்கும் வருகை தந்து சிறப்பித்த அனைவருக்கும், மணமக்களுக்குப் பரிசுகளும், வாழ்த்துக்களும் அனுப்பிய அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எம்.பி.எம்.ரத்தினசபாபதி செட்டியார்,

ஜவுளி வியாபாரம், அருப்புக்கோட்டை, புதுக்கோட்டை & பதுளை (சிலோன்.)

கிப் பறக்கவிட முடிந்தது. ஜமக்காளம் கீழ் நோக்கிச் செல்லச் செல்ல, பறக்கும் குதிரையும் ஜமக்காளத்தைப் பின் தொடர்ந்தே கீழே நோக்கிப் பறந்தது.

அந்தச் சமயத்தில் தடால் என்று பறக்கும் குதிரையிலிருந்து ஏதோ ஒரு சாமான் பறக்கும் ஜமக்காளத்தில் விழுந்தது. பயத்தினால் மால்கோஷ் திரும்பிப் பார்க்காமல் கலாவைப் பிடித்துக் கொண்டான். பயம் கொண்ட கலா தான் கையில் பிடித்துக் கொண்டிருந்த முத்து மாலையை நழுவ விடவே, ஜமக்காளம் தடால் என்று பூமிக்கு வந்து சேர்ந்தது. அதற்குப் பிறகு பறக்கும் குதிரை மிகவும் உயரப் பறந்து வேறு திக்கை நோக்கிச் சென்று விட்டது.

ஜமக்காளம் பூமிக்கு வந்து சேர்ந்த சிறிது நேரம் வரையில் ஒன்றுமே பேசாமல் மால்கோஷூம் கலாவும் ஜமக்காளத்திலேயே உட்கார்ந்திருந்தார்கள். பறக்கும் குதிரை அவ்விடத்தை விட்டு அகன்றதும் அவர்களிடம் இருந்த பயம் சற்றுக் குறைந்தது. பிறகு மெதுவாகத் தங்களுக்குப் பின்புறம் இருந்த சாமான் எதுவாக இருக்கும் என்று சற்றுத் தயங்கித் தயங்கிப் பார்த்தான். மால்கோஷ் பிறகு கொஞ்சம் தைரியம் அடைந்து, விழுந்த சாமானைத் தன் கையால் தடவினான். சந்தோஷம் அடைந்தான். "கலா தைரியமாகத் திரும்பிப் பார். யாரோ ஒரு பொம்மைப் பட்டணத்தை அல்லவா நமக்கு என்று போட்டிருக்கிறார்கள்!" என்றான்.

பொம்மை என்ற உடனே கலா சந்தோஷத்துடன் 'எங்கே அண்ணா?' என்று கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். பார்த்தவுடன் அவள் சந்தோஷத்துக்கு அளவில்லை. "அண்ணா! நீ கூறியது உண்மைதான். இது ஒரு பொம்மைப் பட்டணம்தான். ஆஹா! இது எவ்வளவு பெரிதாக இருக்கிறது. ஜமக்காளத்தை விட இரண்டு பங்கு அல்லவா பெரிதாக இருக்கிறது! அண்ணா, இந்தப் பொம்மைப் பட்டணத்தைச் சாவகாசமாகப் பார்க்கலாம். தயவு செய்து இதைத் தூக்கிக் கொஞ்சம் கீழே வை. யாராவது வருவதற்குள் ஜமக்காளத்தை மடித்து முத்துமாலையுடன் பையில் வைத்துக் கொள்கிறேன்" என்றாள். மிகவும் சிரமப்பட்டு ஜமக்காளத்திலிருந்து அந்தப் பொம்மைப் பட்டணத்தை மால்கோஷூம்,கலாவும் பூமியில் வைத்தார்கள்.

"ஆஹா, என்ன அற்புதமான வேலைப்பாடு. இது மாதிரியான பொம்மைப் பட்டணத்தை நான் பார்த்ததே இல்லை. உயர்ந்த மரத்தினால் அல்லவா செய்யப்பட்டிருப்பது போலத் தோன்றுகிறது. இந்த விலை உயர்ந்த பொம்மையை யார் எதற்காக நம்மிடம் சேர்த்தார்கள் என்று தெரியவில்லையே! ஒருவேளை அந்தப் பறக்

கும் குதிரையிலிருந்து நம்முடைய ஜமக்காளத்தில் இந்தப் பொம்மை தவறி விழுந்திருக்குமோ? இருக்காது. அப்படி இருந்தால் நம்மிடம் அதைத் திருப்பிக் கேட்டு வாங்கி யிருக்கமாட்டார்களா? இதை யார் நம்மிடம் போட்டார்கள் என்று பார்ப்பதற்குள் பறக்கும் குதிரை போய்விட்டதே!'' என்று மால்கோஷ் சொன்னான்.

''அண்ணா! இந்தப் பொம்மை உண்மையாக ஒரு பட்டணத்தையே சித்திரித்திருக்கிறது. அதோ பார், ஒரு அரண்மனை. அரண்மனையில் அரசன் சிம்மாசனத்தில் ஜோராக உட்கார்ந்திருக்கிறான். அவனுக்குப் பக்கத்தில் மந்திரிகளும் சேவகர்களும் மற்றையப் பேர்களும் உட்கார்ந்திருக்கிறார்கள். அரசனுக்கு எதிரில் மிகவும் அழகாக இருக்கும் ஒரு பெண் நாட்டியம் ஆடுவது போல் நின்று கொண்டிருக்கிறாள். ஒரு பெரிய சங்கீத கோஷ்டி உட்கார்ந்திருக்கிறது. நடுவில் உட்கார்ந்திருக்கும் பொம்மை பாடுவது போலத் தோற்றமளிக்கிறது. பக்கத்தில் ஒரு பொம்மை தபேலா வாசிப்பது போல் இருக்கிறது. பேண்ட் வாத்தியக்காரர்களும் வாசித்துக் கொண்டிருக்கிறார்கள். அதோ அந்தப்புரத்தில் ஒரு அரசகுமாரியைப் போலப் பொம்மை தோற்றமளிக்கிறது. என்ன அழகு! ஐயோ பாவம்! அந்தப் பொம்மையின் வலது கை ஒடிந்து விட்டதே! மேலிருந்து கீழே விழுந்த அதிர்ச்சியினால்தான் உடைந்திருக்க வேண்டும். அதோ பார்த்தாயா? ஒரு பெரிய ஆறு. அந்த ஆற்றுக்கு மேல் ஒரு பெரிய பாலம். பாலத்தின்மீது பல வண்டிகளில் நிரம்பக் கூட்டம் இருப்பது போல அல்லவா காண்பிக்கப்பட்டிருக்கிறது. அடாடா! இந்த அழகான பாலத்தின் நடுவிலே உடைந்திருக்கிறது. அழகாக அமைக்கப்பட்டிருக்கும் ஆற்றின் கரையும் உடைந்திருக்கிறது. ஆற்றிலே கரை புரண்டு தண்ணீர் ஓடுவது போல அல்லவா தோற்றமளிக்கிறது. இதை மேலே இருந்து போடாமல் நம்முடைய கையில் கொடுத்திருந்தால் அரசகுமாரியின் கையோ, அல்லது பாலமோ, அல்லது ஆற்றங்கரையோ உடையாமல் இருந்திருக்கும். அண்ணா, அண்ணா! பெரிய ஜெயில் மாதிரி தோன்றுகிறது. அதற்குள்ளே நிரம்பக் கைதிகள். ஜெயிலைச் சுற்றிக் கட்டப்பட்டிருக்கும் பொம்மைச் சுவர் கூட உடைந்திருக்கிறது. அண்ணா அதோ பார். நிரம்ப வீடுகள். எங்கு பார்த்தாலும் விளக்குகள். ஜனங்கள் போகிறதும் வருவதாகவும் காணப்படுகிறது. அண்ணா இந்த வேடிக்கையைப் பார். ஒரு மூலையில் காடுபோல் செய்யப்பட்டிருக்கிறது. அந்தக் காட்டுக்கு நடுவில் என்ன இருக்கிறது பார்த்துச் சொல், அண்ணா!'' என்றான். ஆச்சரியத்துடன் மால்கோஷ் கவனித்தான். (தொடரும்)

அத்தியாயம் 39

மனக் குழப்பம்

ஸ்ரீனிவாசமூர்த்தியும் சிவசங்கரனும் அந்தத் துப்பாக்கியைப் பார்த்துக் கொண்டே சற்று நேரம் மௌனமாக நின்றார்கள்.


''என்ன விசித்திரமான நிகழ்ச்சி?'' என்றார் சிவசங்கரன்.

''இது யாருடையது என்று உனக்குத் தெரியுமா?''

''நன்றாகத் தெரியும். இது கருணாகரனுடையது. நான் அன்றும் அதைக் கவனிக்கவில்லை. விமானத்தில் ஏறிய போது அதை விமானியிடம் கொடுத்தேனே, அப்போதும் பார்க்கவில்லை. எனக்கு அதைத் தொடவே ஒருவிதமான அச்சம் ஏற்பட்டு விட்டது.''

''ஆகவே, இதிலிருந்து உன் துப்பாக்கி அந்த இடத்தில் கிடந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. போலீஸார் அதைப் பார்த்திருந்தால் இத்தனை நாள் உன்னைக் கைது செய்திருப்பார்கள். ஆகவே போலீஸார் ஸ்தலத்துக்குப் போவதற்குமுன்னாலேயே யாரோ அதை எடுத்துக் கொண்டு வந்திருக்கவேண்டும். அந்தத் துப்பாக்கி யாருடையது என்று கண்டுபிடித்து 'ப்ளாக் மெயில்' செய்ய யாராவது முயற்சி செய்து கொண்டிருக்கலாம்.

மலைச்சாரல்




''இப்போது குற்றம் நடந்த இடத்தில் என்னுடைய துப்பாக்கி கிடந்தது என்று சொல்லி அதை எடுத்துக் கொண்டு போலீஸில் ஒப்படைத்தால் நம்புவார்களா? மாட்டார்களா?''

''மாட்டார்கள். அதற்கு ஏற்பாடு செய்யத் தெரியாதா என்ன? எவனாவது ஒரு நரிக்குறவனைப் பிடித்து அந்த இடத்தில் துப்பாக்கி கிடந்ததாகவும், தான் அதை விற்கலாமென்று எடுத்து வந்ததாகவும் சாட்சி சொல்ல வைக்கலாமல்லவா? எனக்கு ஒரு சந்தேகம். அந்தத் துப்பாக்கி எப்படியோ அச்சுதனிடம் கிடைத்திருக்கிறது என்று நினைக்கிறேன். உன் துப்பாக்கியை அடையாளம் தெரிந்துகொள்ள மாட்டானா?''

''ஓ தெரிந்து கொள்வான்!''

''அச்சுதனிடம் துப்பாக்கி இருக்கிறது. அவன் நீதான் கருணாகரனைச் சுட்டுவிட்

டாய் என்று நம்புகிறான். அந்தத் துப்பாக்கியைக் கொண்டு தான் நிரபராதி என்பதை நிரூபித்துக் கொள்ள அவன் விரும்பவில்லை. சில நாட்கள் சிறையில் இருந்தாலும் பாதகமில்லை என்று நினைக்கிறான். நீயே வழக்கை நடத்தப் போவதால் அவனை விடுதலை செய்து விடுவாய் என்று நம்பிக் கொண்டிருக்கிறான். அப்போது இருவரும் தப்பிவிடலாம் என்பதுதான் அவன் எண்ணமாக இருக்க வேண்டும். நீ ஒருவேளை வழக்கை நடத்தா



ஆனந்தி

மாதவி

மல் ராஜிநாமா செய்து விடுவாயோ என்ற பயத்தினால் பாலகோபாலிடம் அப்படிச் சொல்லி அனுப்பியிருக்கிறான். பாலகோபாலுக்கே முழு உண்மையும் தெரியாதென்று நினைக்கிறேன்'' என்றார் சீனிவாசமூர்த்தி.



'' என் மனம் ஒரேயடியாகக் குழம்புகிறது. சற்று முன்வரை அச்சுதன் பாலகோபாலை அனுப்பியதை நினைத்து வெறுப்படைந்தேன். இப்போது அவன்மீது பரிவும் அன்பும் ஏற்படுகின்றன. அச்சுதனுக்கு என்னிடம் மரியாதையும், அன்பும் உண்டென்பது எனக்குத் தெரியும். இருந்தாலும் இவ்வளவு தூரம் எனக்காகப் பல கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்வானென்று நினைக்கவே இல்லை. நீ சொல்வது சரியாக இருக்க முடியுமா? ஏன் வேறுவிதமாக நடந்திருக்கக் கூடாது?'' என்று கேட்டார் சிவசங்கரன்.

'' அதை நான் எப்படிச் சொல்ல முடியும்? நான் ஊகத்தினால் தானே கூறுகிறேன். தவறாக இருக்காதென்று சொல்லவில்லையே.''

'' நான் வேலையை ராஜிநாமா செய்துவிட வேண்டும் என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தேன்.''

'' அது ரொம்பத் தவறு. நீதான் இந்த வழக்கை நடத்த வேண்டும். உன்னுடன் நானும் வருகிறேன்.

இன்னும்கூட எனக்கு ஏதோ ஒரு விஷயம் பொருத்த மில்லாமல் இருப்பதாகப் படுகிறது. யோசனை செய்து பார்த்தால் அதுவிளங்கிவிடும் என்றுநினைக்கிறேன்.''

''வழக்கு அச்சுதனுக்கு எதிராக முடியும் போலத் தோன்றினால் நான் குற்றத்தை ஒப்புக் கொண்டு விடப் போகிறேன்.''

''நீ அப்படிச் செய்ய வேண்டிய அவசியம் நேராது என்று நினைக்கிறேன். எனக்கு ஒரு விஷயம்தான் புரியவில்லை. இருட்டு வேளையில் அந்த ஒற்றையடிப் பாதையின் ஓரத்துப் புதரில் கருணாகரன் ஏன் ஒளிந்து கொண்டிருக்க வேண்டும்?''

''நான் வருவதை அவன் பார்த்து விட்டு, என்னைப் பார்க்க விருப்பமில்லாமல் ஒளிந்து கொண்டிருக்கலாம்.''

''அட கடவுளே! நீ இவ்வளவு சாதுவாக இருப்பாய் என்று நான் நினைக்கவே



இல்லை. உனக்கு வேறு எந்தக் காரணமும் புலப்படவில்லையா?''

''இல்லையே!''

''நீ வரும் பாதையில் ஒரு பெரிய புதரில் துப்பாக்கியுடன் ஒருவன் ஒளிந்து கொண்டது எதற்காக இருக்கும் என்று உனக்குப் புரியவில்லையா?''

சிவசங்கரனுக்கு மின்னல் வேகத்தில் ஒரு எண்ணம் எழுந்தது. ''என்ன...'' என்று இழுத்தார். அவரால் பேச்சை முடிக்க முடியவில்லை.

''ஆமாம். அப்படித்தான் இருக்க வேண்டும். உன் மீது அவனுக்கு எவ்வளவு கோபம் இருந்தது என்பதை நினைத்துப் பார். அவனுடைய அக்காவின் அன்பை நீ கவர்ந்து கொண்டாய். அச்சுதனுக்கும், முகுந்தனுக்கும் நண்பனாக இருந்தாய். விஜயராகவன் உன்னிடம் மதிப்பு வைத்தார். ஆலைத் தொழிலாளிகளிடம் அவன் தோற்கும்படி நீ செய்து விட்டாய். எல்லாவற்றுக்கும் மேலாக ஜயந்தியை நீ மணந்து கொள்ளப் போகிறாய் என்ற வதந்தி வேறு உலாவி வந்தது.''

''அது அவனுக்குத் தெரிந்திருக்க முடியாது.''

''ஏன் முடியாது? உன்னிடம் அச்சுதன் மிக சிரத்தையாக வந்து சொல்லவில்லையா? அது மாதிரி வேறு யாராவது கருணாகரனிடம் போய்ச் சொல்லியிருக்கலாம் அல்லவா?''

''இருக்கலாம். ஆனாலும் அவனால் அதை நம்பி இருக்க முடியாது.''

''சாதாரணமாக இருந்தால் நம்பியிருக்க மாட்டான். அப்போது அவன் இருந்த மன நிலையில் நிச்சயமாக நம்பிக்கை உண்டாகியிருக்கும். உன்னைத் தேடிக் கொண்டு துப்பாக்கியுடன் புறப்பட்டிருக்கலாம்.''

''என்னால் அப்படி நினைக்கவே முடியவில்லை. கருணாகரனால் இவ்வளவு கொடூரமான காரியம் செய்ய முடியாது. அவன் சுபாவத்தில் கோழை மனம் படைத்தவன். தைரியசாலி போல மற்றவர்களுக்காக நடித்து வந்தான். அவனுடைய முன்கோபத்துக்குக்கூட அவனுடைய கோழைத்தனந்தான் காரணம் என்று நான் பல முறைகள் நினைத்ததுண்டு.''

''இருக்கலாம் அப்பா! ஆனாலும் அந்தச் சூழ்நிலையில் அவனுடைய மனத்தில் எந்தவிதமான எண்ணம் எழுந்திருந்தாலும் அதிசயப்படுவதற்கில்லை. தான் கோழை இல்லை என்பதை நிரூபித்துக் காட்டுவதற்காகவே இந்த மாதிரி காரியங்களைச் சிலர் செய்வதுண்டு என்று உனக்குத் தெரியுமா?''

''போதும், ஸ்ரீநிவாஸ். இனிமேல் ஒன்றும் சொல்லாதே. எனக்குப் பைத்தியம் பிடித்து விடும் போலிருக்கிறது.''

''நீ மாத்திரம் சற்று யோசனை செய்து உடனே போலீஸ் ஸ்டேஷனுக்குப்போய் 'ரிப்போர்ட்' செய்திருந்தாயானால் உன் மீது ஒரு சந்தேகமும் ஏற்பட்டிருக்காது. நீ துப்பாக்கி முனையை மட்டும் பார்த்ததாகவும், தற்காப்புக்காகச் சுட்டதாகவும் கூறியிருந்தால் சந்தேகப்பட்டிருக்கவே மாட்டார்கள். அவன் இப்படி நினைத்திருக்கலாம் என்றே உனக்குத் தோன்றாமல் போனது எனக்கு ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறது.''

சிவசங்கரனுக்கு முன் எப்பொழுதையும் விட இப்போது துயரம் மேலிட்டது. தான் முன்யோசனைக் குறைவினால் இப்படிப்பட்ட சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டு விட்டதைக் குறித்து அளவிலாத வருத்தம் அடைந்தார்.

ETERNA...



எடர்னா ...

... என்ற பெயரே நீடித்த உழைப்பை குறிக்கிறது. இந்த கவர்ச்சிகரமான மாடல் நெ. 9043 எவர்ஸில்வர் கேஸில் பொருத்தப்பட்டுள்ளது. பல ரக நவீன டயல்களில் கிடைக்கும். அது தண்ணீரால் பாதிக்கப்படாதது * தூசி புகாது * அதிர்ச்சிக்குப் பாதுகாப்பு * காந்தத் தடுப்பு உடையது *

இதன் விலை ரூ. 232/-

FAVRE-LEUBA

AND COMPANY PRIVATE LIMITED

பேவர்-லூபா & கம்பெனி பிரைவேட் லிமிடெட்

பம்பாய் — கல்கத்தா

சீனிவாசமூர்த்தி அவனைத் தேற்றினார். " இனிமேல் கலங்கிப் பயனில்லை. என் மனத்தில் இதில் ஏதோ பெரிய சூழ்ச்சி இருக்கிறதென்று படுகிறது. கருணாகரனை யாரேனும் தூண்டி விட்டிருக்கலாமோ என்று கூடத் தோன்றுகிறது. இந்த உலகில் எது நடக்கும், எது நடக்காது என்று சொல்வதற்கில்லை. இருவரும் கமுகமலைக்குப் புறப்பட்டுப் போகலாம். கலைப்படாதே " என்றார்.

இருவரும் கீழே இறங்கி வந்தார்கள்.

சுபாஷிணி தன் கணவர் சீனிவாசமூர்த்தியைப் பார்த்து, " இன்றிரவு நமது நண்பர் பகவந்த்லால் வீட்டில் விருந்துக்குப் போக வேண்டும். மறந்து விடாதீர்கள் " என்றாள்.

" ஆமாம். சிவசங்கரனையும் அவர் அழைத்திருக்கிறார். மூவருமே போகலாம். எனக்கு இப்போது வேலை யிருக்கிறது. வெளியே போய் விட்டுச் சீக்கிரம் வந்து விடுகிறேன் " என்று கூறி விட்டுக் கிளம்பினார் சீனிவாசமூர்த்தி.

அத்தியாயம் 40

காதல் தம்பதிகள்

சுபாஷிணி, சீனிவாஸ மூர்த்தி, சிவ சங்கரன் மூவரும் அன்று மாலை பகவந்த்லாலின் வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்றார்கள். அவர்கள் வசித்த இத்வாரி என்னுமிடத்திலிருந்து ராம்தாஸ் பேட்டைக்குப் போவதற்கு நாக்பூரின் நெருக்கமான தெருக்களைக் கடந்து போக வேண்டும். நாக்பூரின் நடுவில் உள்ள 'சிதா புல்டி' சதுரத்தைத் தாண்டிச் சென்றபோது சிவசங்கரன் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார். அவருடைய மனத்தில் அலை அலையாக எண்ணங்கள் பொங்கி எழுந்தன.

'சிதா புல்டி' சதுரத்தில் ஒரே கூட்டமாக இருந்தது. ஏகப்பட்ட கடைகள் இருப்பதால் சாமான்கள்வாங்குவோரும் விற்போருமாக 'ஜே ஜே' என்று இருந்தது. இத்தனை பேர்கள் இந்த ஊரில் சாதாரணமாக வாழ்க்கை நடத்தும் போது தமக்கு மாத்திரம் ஏன் இவ்வாறு விசித்திரமான அனுபவங்களெல்லாம் ஏற்பட வேண்டும் என்று நினைத்து வேதனைப்பட்டார் சிவசங்கரன்.

அவருடைய மனோ வேதனை முகத்தில் பிரதிபலித்தது. நாக்பூருக்கு வந்து ஒரு மாதம் ஆவதற்குள்ளாகவே நாலைந்து வயது கூட ஆனவர் மாதிரி காணப்பட்டார் சிவசங்கரன்.

" நாம் இன்னும் இரண்டு நாட்களில் புறப்பட்டு விடலாம் சங்கரா. என் வேலைகளை ஒருவாறு முடித்துவிட்டேன்" என்றார் சீனிவாஸமூர்த்தி.

" நானும் உங்களுடன் கண்டிப்பாக வருவதாகத் தீர்மானித்திருக்கிறேன் " என்றாள் சுபாஷிணி.

"ரொம்ப சந்தோஷம். கமுகமலைப் பிரதேசமும், காடும் அவசியம் பார்த்து அனுபவிக்க வேண்டிய இடங்கள். என்னுடைய துரதிர்ஷ்டம் எனக்கு அந்த இடத்தை நினைத்தாலே பிடிக்கவில்லை" என்றார் சிவசங்கரன்.

" நான் கமுகமலைப் பிரதேசத்தைப் பார்ப்பதற்காக வரவில்லை. எனக்கு உங்கள் மாதவியைப் பார்த்துச் சிநேகம் செய்து கொள்ள வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. அதற்காகத்தான் வரப் போகிறேன் " என்றாள் சுபாஷிணி.

சிவசங்கரன் மௌனமாக இருந்தார்.

"மூன்று பேர்களும் விமானத்தில் செல்வதென்றால் ரொம்பச்செலவுதான். இருந்தாலும் நாம் அங்கே எவ்வளவு சீக்கிரம் போகிறோமோ அவ்வளவு நல்லது. எனக்கும் வழக்கு விவரங்களைக் கொஞ்சம் ஆராய வேண்டும். ஆகவே விமானத்தில் சென்னை செல்ல டிக்கட் வாங்கி விடுகிறேன். அங்கிருந்து கமுகமலைக்குப் போய் விடலாம் " என்றார் சீனிவாசமூர்த்தி.

"சரி" என்றார் சிவசங்கரன்.

அதற்குள் ராம்தாஸ் பேட்டையில் அவர்கள் தேடி வந்த பகவந்த்லாலின் வீடு வந்து விட்டது. மூவரும் இறங்கி உள்ளே சென்றார்கள்.

உள்ளே சென்றதும் முதலில் சிவசங்கரனின் கண்களில் பட்டது பாலகோபால்தான். சிவசங்கரனைப் பார்த்ததும் வேகமாக அருகில் வந்து, "உங்களை மீண்டும் சந்தித்ததில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி" என்றார்.

சிவசங்கரன் பாலகோபாலின்கையைக் குலுக்கிவிட்டு, சீனிவாசமூர்த்தியையும் சுபாஷிணியையும் அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

" நான் இன்றிரவு விமானத்தில் ஊருக்குக் கிளம்புகிறேன் " என்றார் பாலகோபால்.

"நானும் இன்னும் இரண்டு நாட்களில் புறப்பட்டு வருகிறேன், மிஸ்டர் பாலகோபால்! நம் நண்பரிடம் சொல்லுங்கள் " என்று சிவசங்கரன் கூறினார். அதற்குள் பகவந்த்லால் அங்கே வந்து

மூவரையும் அமரச் சொல்லிப் பிரமாத மாக உபசாரம் செய்தார்.

"இன்னும் இரண்டு பேர்கள் வர வேண்டும், மிஸ்டர் சீனிவாசமூர்த்தி. அவர்கள் வந்ததும் நாம் சாப்பிட ஆரம் பிக்கலாம்" என்ருர் அவர்.

அவருடைய புதல்வியான ரமா அழ கான காஷ்மீர் பட்டுப் புடவை அணிந்து கொண்டு குறுக்கும் நெடுக்கும் அலைந்து கொண்டிருந்தாள். சுபாஷிணியைஅவள் பார்த்ததும் ஓடி வந்து மராட்டி மொழி யில் ஏதோ சொன்னுள். அவளுடைய முகமலர்ச்சியிலிருந்து அவள் சுபாஷிணி வந்ததில் தனக்குள்ள சந்தோஷத்தைத் தெரிவிக்கிருள் என்று உணர்ந்தார் சிவ சங்கரன். சுபாஷிணி பதிலுக்கு ஏதோ சொல்ல இருவருமே கலகல வென்று நகைத்தார்கள். இரண்டு பேர்கள் சந் தோஷமாக இருந்தால் பார்க்க எவ் வளவு ரம்மியமாக இருக்கிறது என்று நினைத்தார் சிவசங்கரன்.

அதற்குள் மற்றவர்களும் வந்து விடவே அவர்கள் சாப்பிடுவதற்காக அடுத்த அறைக்குச் சென்ருர்கள். ஒரு மேஜையில் விதம்விதமான உணவு வகை கள் அழகாக அடுக்கி வைக்கப்பட் டிருந்தன. இன்னெரு மேஜையின் மீது பல தட்டுகளும், கரண்டிகளும் வைக்கப் பட்டிருந்தன. சிவசங்கரனுக்கு ஏதோ பொருட்காட்சியைப் பார்ப்பது போல இருந்தது.

அவரவர்கள் தட்டை எடுத்துக் கொண்டு தாங்களாகவே தங்களுக்கு வேண்டிய உணவை எடுத்துக் கொள்வ தைப் பார்த்தார் சிவசங்கரன். சுபாஷிணியும் தட்டில் தனக்கு வேண்டி யதை எடுத்துக் கொண்டு வந்தாள். சிவ சங்கரன் பேசாமல் நிற்பதைக் கண்ட தும், "நான் வேண்டுமானுல் உதவி செய்யட்டுமா?" என்று கேட்டாள்.

"வேண்டாம், வேண்டாம். தன் கையே தனக்குதவி" என்று புன்னகை யுடன் கூறிவிட்டு மேஜையருகில் சென் ருர் சிவசங்கரன்.

சீனிவாசமூர்த்தி பகவந்த்லாலுடன் பேசிக் கொண்டே ஒரு பக்கம் சாப் பிட்டுக் கொண்டிருந்தார். பாலகோபா லும் பகவந்த்லாலின் பிள்ளையும் பேசிக் கொண்டே மேஜையருகில் வந்து உணவு களைப் பரிமாறிக் கொண்டார்கள்.

சிவசங்கரனைப் பார்த்ததும் பால கோபால் தம் நண்பனுக்கு அறிமுகம் செய்து வைத்தார். சிவசங்கரனிடம், "இவன் என் நண்பன். பகவந்த்லாலின் புதல்வன் மோதி" என்று கூறினுர். மோதி ஒரு புன்னகை புரிந்து விட்டுத் தன்னுடைய வேறெரு நண்பனைக் கவ னிக்கப் போனுன்.

பாலகோபாலும் சிவசங்கரனும் ஒரு பக்கத்தில் சென்று சாப்பிடத் தொடங் கிஞர்கள். "இன்று நீங்கள் ரொம்ப மாறிப் போய் விட்டீர்களே! அன்று நான் கவலையடைந்து விட்டேன்" என்ருர் பாலகோபால்.

"நீங்கள் திடீரென்று வந்து ஏதேதோ பொய்களைச் சொல்லி, பயமுறுத்தப் பார்த்தால் எனக்குக் கோபம் வராதா? உங்களிடம் எனக்கு ஒரு கோப மும் இல்லை. நீங்கள் சொன்ன விதம் தான் எனக்குப் பிடிக்க வில்லை. மாதவி யின் பெயரை நீங்கள் அநாவசியமாகப் பிரயோகம் செய்தீர்கள். அதை நான் விரும்ப முடியாதல்லவா?"

"மன்னியுங்கள் சிவசங்கரன்! நான் தவருன நோக்கத்துடன் அதைப் பிரயோகம் செய்ததாகக் கருத வேண் டாம். உங்களிடம் கட்டாயம் பேச வேண்டுமே. நீங்கள் மறுத்து விட்டால் என்ன செய்வது என்ற பயத் தினுல் தான் அவ்வாறு செய்தேன். நான் அப்படி நினைக்கக் காரணம் இருந்த தல்லவா? ஆகவே அதைத் தயவு செய்து மறந்து விடுங்கள்" என்று பணிவான குரலில் கூறினுர் பாலகோபால்.

"அதற்கென்ன பரவாயில்லை. நான் இந்த மாதிரி விஷயங்களை நினைவில் வைத்துக் கொள்வதே இல்லை" என்ருர் சிவசங்கரன்.

சற்று நேரம் கழித்துப் பாலகோபால் ரமாவுடன் பேசிக் கொண்டிருந்ததைக் கவனித்தார் சிவசங்கரன். ரமா ஏதோ கூறினுள். பாலகோபால் பதிலுக்கு ஏதோ கூறிவிட்டுப் பெரிதாகச் சிரித் தார். அதைக் கண்டதும் சிவசங்கரனுக்கு அருவருப்பாக இருந்தது. பால கோபா விடம் தாம் அவ்வளவு நன்ருகப் பேசி யிருக்க வேண்டாம் என்று தோன்றியது.

கடைசியாக எல்லோரும் புறப்பட்டுக் காரில் ஏறிக் கொண்டனர். காரில் போய்க் கொண்டிருந்தபோது சீனிவாச மூர்த்தி சிவசங்கரனிடம், "நீ இந்தப் பாலகோபாலைப் பற்றி என்ன நினைக் கிருய்?" என்று கேட்டார்.

"நினைக்க என்ன இருக்கிறது? எனக்கு முதலிலிருந்தே அவரை அதிகமாகப் பிடிக்க வில்லை. அச்சுதனின் நண்பனுக இருப்பதால் அடியோடு ஒதுக்க முடிய வில்லை" என்ருர்.

"இன்று உன்னிடம் ரொம்பக் குழைந்து குழைந்து பேசிக் கொண்டிருந் தாரே? அதனுல் கேட்டேன். எனக்கும்

அவருடைய பேச்சிலும் நடத்தையிலும் நம்பிக்கை ஏற்படவில்லை. எதற்கும் அஞ்சாத நெஞ்சழுத்தம் உள்ளவராகத் தோன்றுகிறது.''

''பாலகோபாலுக்குக் கருணாகரனைக் கொல்ல எந்தவிதமான நோக்கமும் இருப்பதாகத் தெரியவில்லை. நீ ஏதாவது கற்பனை செய்யாதே. அப்படியெல்லாம் யாரையும் மாட்டி வைத்து வழக்கைக் குழப்ப முடியாது.''

சுபாஷிணி திடுக்கிட்டு, ''என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''உங்கள் கணவர் பாலகோபாலை வழக்கில் மாட்டிவிட முயற்சி செய்தால் நான் என்ன சொல்வதாம்?'' என்று கேட்டார் சிவசங்கரன்.

''சங்கரா! உனக்குக் கொஞ்சமும் கற்பனாசக்தியே இல்லையே அப்பா! இந்தத் துப்பாக்கி மாறாட்டத்தைக் கண்டு பிடித்து அதை அமுக்கி வைத்திருப்பது பாலகோபாலாக இருக்குமோ என்று நான் எண்ணுகிறேன். அச்சுதனுக்கே தெரியாமல் கூட இவர் இங்கே வந்திருக்கலாம். நீ எங்கே போயிருக்கிறாய் என்று இவ்வளவு சீக்கிரம் கண்டுபிடிக்க எவ்வளவு சாமர்த்தியம் வேண்டும்? ஒரு முக்கிய நோக்கம் இல்லாமல் யாரும் அப்படிச் செய்ய மாட்டார்கள்.''

''இந்த வக்கீல்களுக்கே யாரைப் பார்த்தாலும் சந்தேகம்தான். இந்தப் பேச்சு போதும். எனக்கு இரவெல்லாம் தூக்கம் வரமாட்டேனென்கிறது. துப்பாக்கியும், தோட்டாவும், காடும், மலையும் கனவில் கூட என்னைத் துன்புறுத்துகின்றன'' என்றாள் சுபாஷிணி.

''எல்லாம் என்னால்தானே?'' என்று வருத்தமாகக் கூறினார் சிவசங்கரன்.

''நீங்கள் என்ன செய்வீர்கள் பாவம்? நீங்களும்தான் தூக்க மருந்தைப் புட்டி புட்டியாகக் காலி செய்கிறீர்கள். ஆனால் இனிமேல் தூக்க மருந்து சாப்பிடாதீர்கள். அது உடம்புக்கு மிகவும் கெடுதல்'' என்றாள் சுபாஷிணி.

''பாலகோபால் தூக்கம் இல்லாமல் தவிப்பதாகத் தோன்றவில்லை. ஆள் ரொம்பக் கெட்டி என்று தோன்றுகிறது'' என்றார் சீனிவாசமூர்த்தி.

''இதைப் பாருங்கள். உலகில் இப்படி எல்லாரையும் சந்தேகப்பட்டுக் கொண்டே போனால் வாழ்க்கையே பாழாகப் போய் விடும். பரஸ்பரம் உள்ள நம்பிக்கையினால்தான் உலக வாழ்க்கை இனிமையாக இருக்க முடியும். உலகத்தில் நாமாக வரவழைத்துக் கொள்கிற கஷ்டங்களில் சந்தேகப்படுவதனால் வரும் கஷ்டம்தான் மிகவும் அதிகம்'' என்று பிரசங்க பாணியில் பொழிந்தாள் சுபாஷிணி.

''சுபாஷிணி! இப்போது உன் உபதேசங்களை நான் கேட்கத் தயாராக இல்லை. உன் பிரசங்கங்களையெல்லாம் மாதர்சங்கங்கள், அனாதை ஆசிரமங்கள், பள்ளிக்கூடங்கள் இவற்றுடன் நிறுத்திக் கொள். எங்களைப் போன்ற கட்டைகளுக்கு உபதேசம் செய்து என்ன பயன்?'' என்று பரிகசித்தார் சீனிவாசமூர்த்தி.

''நீங்களே பாருங்கள் சிவசங்கரன். இந்தப் புருஷர்களுக்குப் பெண்கள் ஏதாவது சொன்னாலே பிரசங்கம் என்று தோன்றும். நாலு வாக்கியம் முழுக்கச் சொல்லி முடித்தால் நான்குமணி நேரம் பிரசங்கம் செய்த மாதிரி பரிகாசம் செய்வார்கள்!'' என்றாள் சுபாஷிணி.

''அது உண்மைதானே? உன்னுடைய நாலே வாக்கியங்களில், நான்கு மணி நேரம் செய்யும் பிரசங்கத்திலுள்ள சாராம்சம் இருக்கிறதென்று நான் சொல்கிறேன். நீ இல்லை என்கிறாயா?''



காரை ஓட்டிக் கொண்டிருந்த சுபாஷிணி சீனிவாசமூர்த்தியைத் திரும்பிப் பார்க்கவே, கார் சற்றுக் கோணலாகப் போயிற்று.

சீனிவாசமூர்த்தி ஒரே கணத்தில் காரின் திசையைச் சரியாகத் திருப்பி விட்டு, ''சுபாஷிணி! கார் ஓட்டுவதாக இருந்தால் ரோடைப் பார்த்து ஓட்ட வேண்டும். என் முகத்தைப் பார்த்துக் கொண்டு கார் ஓட்டினால், என்ன ஆகும் தெரியுமோ? இப்போது அந்த மருந்துக்



திருமதி சாமளா — திரு ரா. வெங்கடேசன் இவர்கள் திருமணம் சென்னையில் சமீபத்தில் நடைபெற்றது. மணமகன் பம்பாய் சிமெண்டு மார்க்கெட்டிங் கம்பெனியின் விளம்பர இலாகாவைச் சேர்ந்தவர்.

வாழ்க, சாமளா — வெங்கடேசன்

கடைக்குள் காரை விடப் பார்த்தாயே, அந்த மாதிரிதான் ஆகும்'' என்றார்.

'' நான் என்ன செய்யட்டும்? உங்கள் முகம் அவ்வளவு அழகாக இருக்கிறது. உங்களையே பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் போல் ஆசையாக இருக்கிறது. அது என்மீது தவறா?'' என்று குழைந்த குரலில் கேட்டாள் சுபாஷிணி.

சிவசங்கரனுக்கு அவர்களுடைய பேச்சு மகிழ்ச்சியை ஊட்டியது. அதே சமயத்தில் தாமும் மாதவியுடன் இப்படியெல்லாம் பேசி மகிழக் கொடுத்து வைக்கவில்லையே என்ற தாபம் உண்டாயிற்று.

சீனிவாசமூர்த்தி சிவசங்கரனின் சிந்தனையைக் கலைத்து, '' பார்த்தாயா சங்கரா! காதல் திருமணம் செய்து கொள்வதைப் போன்ற ஆபத்து வேறு ஒன்றும் இல்லை. வீட்டில் இருக்கும்போது இந்தச் சுபாஷிணி ஒரு தடவைகூட என் முகத்தை ஏறெடுத்துப் பார்க்க மாட்டாள். கார் ஓட்டும்போது ஆசையாகப் பார்க்கிறாளாம்! எங்களுடைய காதல் விவகாரம் ஊரெல்லாம் தெரிந்து போய் விட்டபடியால், நாங்களும் மற்றவர்களுக்காக இன்னும் காதல் நாடகம் போடுகிறோம்'' என்றார்.

''நாடகமோ? உண்மையோ? நான் என்ன கண்டேன் ஸ்ரீநிவாஸ்?'' என்றார் சிவசங்கரன்.

அதற்குள் சுபாஷிணி இடீரென்று பிரேக்கை அழுத்தினாள். ஒரு நாய் 'வீல்' என்ற சத்தத்துடன் விழுந்தடித்துக் கொண்டு வேகமாக ஓடியது.

''ஏனம்மா? உன்னுடைய ஜீவஹிம்சை செய்யக் கூடாது என்ற உபதேசமெல்லாம், ஜீவகாருண்ய சங்கத்தில் பேசுவதுடன் முடிந்து விடுகிறதாக்கும்?'' என்று மறுபடியும் அவளைப் பரிகசித்தார் சீனிவாச மூர்த்தி.

சுபாஷிணிக்கு இது கோபத்தை வரவழைக்கவே அடுத்த திருப்பத்தில் வேகமாகத் திரும்பினாள். சிவசங்கரனுக்கே சற்றுப் பயமாக இருந்தது.

''அம்மாடி! சொர்க்க வாசலை எட்டிப் பார்த்து விட்டு வந்து விட்டோம்'' என்றார் சீனிவாச மூர்த்தி.

'' நாம் சொர்க்கத்துக்குப் போவோம் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதா?'' என்றாள் சுபாஷிணி.

'' நீ கார் ஓட்டிக் கொண்டிருந்தால் சந்தேகம்தான். நான் ஓட்டினால் ஒரு வேளை அந்தப் பாக்கியம் கிடைக்கலாம். இன்று அந்த நாய் நம்மைச் சபித்தது போல நீ இடிக்கும் அத்தனை மிருகங்களும் சபித்தால் எப்படி நாம் சொர்க்கத்துக்குப் போக முடியும்?''

'' நீங்களே கேளுங்கள், சிவசங்கரன். இவர் சொல்வதை எல்லாம் கேளுங்கள். இந்த ஆண்களுக்கே அவர்கள் செய்யும் காரியத்தைப் பெண்கள் கற்றுக்கொண்டு செய்தால் தங்களையும் அறியாமல் பொறாமை உணர்ச்சி வந்து விடுகிறது. அதை மறைப்பதற்காகப் பரிகாசம் செய்து கொண்டே இருப்பார்கள். எத்தனை ஆண்கள் 'ஆக்ஸிடென்டி'ல் அகப்பட்டுக் கொள்கிறார்கள்? அதைப் பற்றி இப்படிப் பரிகசிப்பார்களா? பெண்கள் என்றால் உள்ளுக்குள்ளே இகழ்ச்சிதான். மாதர் முன்னேற்றத்தைப் பற்றி யார் கரடியாய்க் கத்தினால் என்ன? கணவன்மார்கள் தங்கள் மனைவிகளை உண்மையில் மதிக்கமாட்டார்கள்'' என்றாள் பொய்க் கோபத்துடன்.

சிவசங்கரனுக்கு அவர்களுடைய பேச்சு விநோதமாகவும் வேடிக்கையாகவும் இருந்தது. மாதவி தன்னுடன் இப்படியெல்லாம் பேசியதில்லை என்பது ஞாபகம் வந்தது. ஒரு வேளை விவாகம் செய்து கொண்டபிறகுதான் பெண்கள் கணவனுடன் உரிமையாகப் பேசுவார்கள் போலிருக்கிறது. 'என் மாதவி என்னுடன் உரிமையாகப் பேசி வாதம் செய்யும் காலம் வருமா?' என்று ஏங்கினார். மாதவியை உடனே பார்க்க வேண்டும் என்ற தாபம் அவர் உள்ளத்தில் பெருகியது. (தொடரும்)

இதன் பரிசுத்தம் ஓட்டினால்



பாதுகாக்கப்படுகிறது

துஷார்

விடமின்கொண்ட
வனஸ்பதி

இதன் பரிசுத்தம்
சீல் செய்யப்பட்ட
டப்பாவினால்
பாதுகாக்கப்படுகிறது.



2 பவுண்டு,
5 பவுண்டு,
10 பவுண்டு
டின்களில்
கிடைக்கிறது

துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ் லிட்., கர்நூல்



அன்புக்குரிய சுஜாதா,

உன் கடிதத்தில் வரவரக் குடும்பச் செலவு செய்வது மிகவும் கஷ்டமாக இருக்கிறது என்று வருந்தி எழுதி இருக்கிறாய். இந்த அக விலையில் குடும்பம் நடத்துவது சிரமம்தான். சர்க்காரில் செலவு ஏற ஏறப் புது வரும்படி களுக்கு வழி செய்கிறார்கள். நம்மால் என்ன முடியும்? மத்தியதரக் குடும்பத்துக்குச் செல வுக்கும் வரவுக்கும் கொஞ்சம்கூடப் பொருத்த மில்லை! இருந்தாலும் நமக்குள் சாதுர்யமாக வகுத்துக் கொள்ளத்தானே வேண்டும்?

எந்தச் செலவுகள் முக்கியமெனப் பார்ப் போம். போலி கௌரவத்துக்காகச் செய்யும் செலவைக் கண்டிப்பாக நிறுத்திவிட வேண் டும். குழந்தைகள் ஆரோக்கியமாக வளர வும் முன்னுக்கு வரவும் செய்யவேண்டிய செலவு மிகவும் முக்கியமானது. அறிவும், உடலும் வளரும் காலத்தில், குறைவு இருந் தால் பிற்காலத்தில் இவர்கள் வாழ்நாளில் குறைபாடு இருக்குமல்லவா?

அவரவர்கள் வருவாய்க்கு ஏற்பத் தமாஷ் வேடிக்கைகளும் அவசியம்தான். நல்ல கலை களைப் பார்த்து, கேட்டு ரசிப்பதும் ஓரளவு தேவைதான். ஒரு அம்மாள் மூன்று வயதுப் பெண் குழந்தைக்குத் தொண்டைச் சதை அடைப்புக்கு ஆபரேஷன் செய்யச் செல வாகுமேயென்று யோசிப்பதாகச் சொன்னார். குழந்தை அதனால் மெலிந்திருந்தது. ஆனால் குழந்தை உடம்பு குலுங்க நகை அணிந்திருந் தாள். இது என்ன முறையோ?

ஒரு மத்தியதரக் குடும்பப் பெண், குழந் தைக்கு ஹார்லிக்ஸ் வாங்கிவரக் கையில் இருந்த சில்லறைகளைத் திரட்டி எடுத்துக் கொண்டு போனாள். வழியில் இருந்த எவர் ஸில்வர் கடையில் புதுமாதிரியாக இருந்த கிண்ணத்தைப் பார்த்ததும், அதை வாங்கி வந்து விட்டாள். இம்மாதிரி சபலத்துக்கே இடம் கொடுக்கக் கூடாது.

சில குடும்பங்களில் தினசரி வாழ்க்கையில் கடும் செட்டாக இருந்துவிட்டுக் கல்யாணம் போன்ற விசேஷங்களில் வாரி இறைக் கிறார்கள். அப்படிச் செய்வது அர்த்தமற்ற செய்கை. சில ஆண்கள் வருகிற கொஞ்ச சம்பளத்தில் தமக்கு வெற்றிலைப்பாக்கு, சீட் டாட்டம் இம்மாதிரியான செலவுகளுக்கு நான்கில் ஒரு பங்கு ஒதுக்கிக் கொள்கிறார்கள். ஆனால் படிக்கிற பையனுக்கு ஒரு பென்ஸில் வாங்கித்தர முக்கால் அழுகிறார்கள். இதெல் லாம் பொறுப்பற்ற செய்கை; அதை அவர் கள் உணரும்படி எடுத்துச் சொல்லிக் குறைக் கப் பார்ப்பதும் நம் கடமை.

புலியைப் பார்த்துப் பூனை சூடு இழுத்துக் கொண்ட கதைபோல, பணக்காரர்களைப் பார்த்து, அவர்களுடைய வசதியான வாழ் வைப் பார்த்துப் பொறாமை கொண்டு, சாதாரண நடுத்தர வகுப்பினரும் தங்கள் குடும்பச் செலவுகளை அதிகப்படுத்திக் கொள்ளு வது மடமை. வரவுக்குமேல் செலவு செய்யும் ஒரு குடும்பம் என்றுமே நிம்மதியா யிருக்க முடியாது. பிறர் செய்கிறார்களே என்பதற் காக நாம் எதையும் செய்யக்கூடாது. நம் சௌகரியம்தான் நமக்கு முக்கியம். நமது வரவுக்குத் தக்கபடி செலவு செய்வதுதான் கௌரவம்; விவேகமும்கூட.

வீட்டில் எந்தச் செலவுகளை யார் ஏற்று நடத்தினால் நன்றாக இருக்கும், சிக்கனமாக நடக்கும் என்பதெல்லாம் பிரச்னைதான். எங்க ளுடைய உறவினர் ஒருவர் பணத்தைச் சேர்க்க வழி தெரிந்து கொண்டு விட்டேனென்றார். பணத்தைச் சேர்க்கும் மாபெரும் கலையை அவரிடம் அறிந்துகொள்ள விவரம் கேட் டேன். அவர், "இவ்வளவு நாள் வீட்டுக்குச் சாப்பாட்டுப் பொருள் வாங்கிப் போடுவது, துணிகள் வாங்குவது எல்லாம் நானே வைத் துக் கொண்டிருந்தேன். இப்பொழுது அவை களை என் மனைவியிடம் ஒப்புவித்து விட்டேன். அவளுக்குப் பணத்தை எடுக்கவே மனம் வர வில்லை. யோசித்துச் செலவு செய்வதால் மிச்சமாகிறது. அதை எனக்குத் தெரியாமல் வேறு வைத்துக்கொள்ள விரும்புகிறாள்" என்று கூறினார். இது உண்மைதான். வீட்டுச் சாமான்களை எந்த அளவில் வாங்குவதெனப் பெண்கள்தான் அறிவார்கள். அவர்கள் மனம் வைத்தால் இயலாததில்லை. பெண்கள் சேமிப் பதில் கெட்டிக்காரர்கள்தான்.

ஒருவருக்கொருவர் நம்பிக்கை தேவை. பொறுப்பும் இருந்துவிட்டால் நன்றாய்க் குடும்பம் நடத்தலாம்.

நிறைய வசதி உள்ள குடும்பங்களுக்கு இம் மாதிரி தகராறெல்லாம்நேராது. மத்தியதரக் குடும்பத்தில் தான் கஷ்டங்கள் நேருகின்றன. ஒரு திட்டம் போட்டு இதுதான் நமக்கு எனச் செய்து பார்.

இப்படிக்கு,

பூமாதேவி

குறிப்பு: மூன்று மாதங்கள் 'தேவியின் கடிதங்கள்' என்ற தலைப்பில் எழுத ஒப்புக் கொண்ட இக் கடிதங்கள், ஒன்றரை வருட காலம் நீடித்து விட்டன. 'கல்கி' அன்பர்களின் பாராட் டும், உற்சாகமும் இவ்வளவு நாட்கள் மகிழ்ச்சியோடு எழுதும்படி தூண்டின. அந்தச் சந்தோஷத்துடனே இந்தக் கடி தத்தை முடித்துக் கொள்ள விரும்புகி றேன். கல்கி நேயர்களுக்கு என் நன்றி.


அழகு மிகுந்த நீண்ட
அடர்ந்த கூந்தலுக்கு
பாமாலிவ்
பெர்ப்யூம்ட் கோகோனட் ஹேர் ஆயில்
குடும்ப முழுவதிற்கும் மிக்க உகந்தது !
பெரிய எகானமி அளவு புட்டியினால் பணம் மிச்சமாகிறது!
மூன்று விது விருப்பான வாசனைகளில் கிடைக்கும்.
லவண்டர்
மல்லிகை
ரோஜா


உங்கள் வீட்டைச்
சுற்றிப்பாருங்கள்
தரை சுத்தமாக இருக்கிறதா? சில
மணி நேரங்களுக்கு முன்புதான்
அது சுத்தம் செய்யப்பட்டது. திரைச்
சீலைகள் அழுக்கடைந்திருக்கின்
றனவா? நேற்றுதான் அவை
சலவையாகி வந்தன. பூக்கள்
புதியனவா? ஆம் ஆனால் அவை
இருக்கும் அந்தத் தாமிரப் பூந்
தொட்டி—அது எப்பொழுது
பிராஸோவினால் பாலிஷ் செய்யப்
பட்டது? உங்கள் வீட்டில் வைப்பதற்குத்
தகுந்த தாமிர, பித்தளை சாமான்
கள் எவையேனும் இருந்தால் அவை
பிராஸோவினால் பாலிஷ் செய்யப்
பட்டு பளபளப்பாகவும் சுத்தமாகவும்
இருப்பது அவசியம். எப்பொழு
தேனும் ஒருதடவை செய்யப்பட்டல்ல—
முறை தவறாமல்.
பிராஸோ
மெட்டல் பாலிஷ்
உங்கள் வீட்டிற்குப் பிரகாசத்தைக்
கொண்டு வருகிறது.


கைகண்ட
நிவாரணி!
அபாயமில்லாதது!
சாப்பிடுவதற்கு
இனிமை
ஆனது!
M&B
'ZEPHROL'
Trade Mark
Brand
'ஸெப்ரால்'
காப் ஸிரப்
Manufactured by: MAY & BAKER LTD
Distributed by: MAY & BAKER (INDIA) PRIVATE LTD
Bombay • Calcutta • Gauhati • Madras • New Delhi
D, 61


வஸந்தத்தின் புத்துணர்ச்சி
உங்களுக்கு இன்றும்..என்றும்
மிக்க நேர்த்தி வாய்ந்த காஷ்மீர் பொக்கே
உங்கள் உடலுக்கு இளவேனிற்காலே
யின் புத்துணர்ச்சியளிக்கிறது..
அதைக் குளிர்ச்சியாகவும்
வாசனை திகழவும்
வைக்கிறது.
Cashmere Bouquet
TALCUM POWDER
காஷ்மீர்
பொக்கே
டால்கம் பௌடர்
ஆண்கள்
விரும்பும்
நறுமணத்துடன்



அலுவலகத்திலிருந்து புறப்பட்ட ராமானுஜம் நேராகத் தமது அறைக்குச் செல்லாமல் கடற்கரையைப் பார்க்க நடக்கலானார். உற்சாகமாகப் பொழுதைக் கழிப்பதற்காக அங்கு அவர் செல்லவில்லை. பிடுங்கல்களிலிருந்து சற்று நேரம் விடுதலை பெற, கட்டணமின்றி வரவேற்கும் கடலை நோக்கி நடந்து கொண்டிருந்தார். அறைக்குச் சென்றால் எவனாவது கடன்காரன் பழியாகக் காத்திருப்பான். அல்லது ஊரிலிருந்து பணம் அனுப்பச் சொல்லி அவசரக் கடிதம் எழுதியிருப்பாள் பெண்.

'ஊரிலிருந்து ஏதாவது கடிதம் வந்திருக்குமோ?' என்று ஒரு கணம் நினைத்தார்.

அதை நினைக்கும்பொழுதே ஒரு எரிச்சல் உண்டாயிற்று. ஆனால் மறுகணம் தாமாகவே வருத்தப்பட்டுக் கொண்டார். "பாவம்! அவர்கள்தான் என்ன செய்வார்கள்!" என்று முணுமுணுத்தவாறு ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுக் கொண்டார்.

வாஸ்தவம்தான். பாவம், அவர்கள்தான் என்ன செய்வார்கள்?....

ராமானுஜத்தின் குடும்பம் திருச்சியில் இருந்தது. அவரும் முதலில் அங்குதான் வேலை பார்த்து வந்தார். சம்பளம், பஞ்சப்படி எல்லாமாகச் சேர்ந்து நூற்றிருபது ரூபாய் வந்து கொண்டிருந்தது. திடீரென்று அவரை அதே சம்பளத்தில் சென்னைக்கு மாற்றினார்கள். தம் குடும்ப நிலையை விளக்கி, சென்னைக்கு மாற்றாமல் இருக்கும்படி எவ்வளவோ வேண்டிக் கொண்டார். ஒன்றும் பலனில்லை.

அவர் குடும்பம் அப்படி ஒன்றும் பெரிதல்ல. ஒரு பெண்ணும், ஒரு பிள்ளையும்தான். பெண், மைத்ரேயி கல்யாணத்துக்குத் தயாராயிருந்தாள். பிள்ளை ஸ்கூல் பைனலில் படித்துக் கொண்டிருந்தான். அவர் மனைவியையும் சேர்த்து மொத்தம் நான்கு பேர்கள் இருந்தனர்.

டாம்பீக வாழ்க்கை வாழாவிட்டாலும் அவருடைய வருமானத்தைக் கொண்டு கௌரவமாகவும் சௌகரியமாகவும் வாழ்ந்து வந்தார்கள். ஆனால், அந்த வருமானத்தைக் கொண்டு சென்னையில் எப்படிச் சௌகரியமாயிருக்க முடியும்? எனவே, குடும்பத்தைத் திருச்சியில் விட்டு விட்டு அவர் மட்டும் சென்னை சென்றார். ஒரு தனி அறை எடுத்துக்கொண்டு கூடுமானவரையில் சிக்கனத்தைக் கைப்பிடித்து மாதா மாதம் குறைந்தது எழுபது ரூபாய் ஊருக்கு அனுப்பிக் கொண்டிருந்தார். 'பணம் போதவில்லை; இன்னும் ஏதாவது அனுப்பவும்' என்று ஒவ்வொரு மாதமும் கடிதங்கள் வந்து கொண்டிருக்கும். முடிந்தவரையில் கடனும் வாங்கி ஊருக்கு அனுப்பிக் கொண்டிருந்தார்.

நீர்க் கரையிலே நிர்க்கதியாய்க் கிடந்த பழைய கட்டுமர மொன்றில் உட்கார்ந்தபடி அப்போதையப் பொருளாதார நிலையை எப்படிச் சமாளிப்பதென்று ஆராய்ந்து கொண்டிருந்தார் ராமானுஜம். எதிரில் அலைமோதிக் கொண்டிருந்த ஆழியின் அக்கரையைத் தேடுவதுபோலிருந்தது அது!

சுமார் எட்டு மணி வரையில் அப்படியே உட்கார்ந்திருந்தார். அப்புறம் மனவேதனையைவிட 'வயிற்று வேதனை அதிகமாகவே எழுந்து அறையை நோக்கி நடக்கலானார்.

அறைக் கதவைத் திறந்ததும் அவர் எதிர்பார்த்தது போலவே கீழே ஒரு கவர் கிடந்தது. அதை எடுத்து விலாசத்திலுள்ள எழுத்தைப் பார்த்தார். மைத்ரேயி தான் எழுதியிருந்தாள்.

அதைப் பார்த்ததும் அவரையு மறியாமல் ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது. "பாவம், நீ என்ன செய்வாய்? ..இங்கே நான் ஏதோ நிறைய வைத்துக் கொண்டு அனுப்பாமல் இருப்பதாக உங்கள் எண்ணம் .." என்று முணுமுணுத்தவாறு கடிதத்தைப் பிரித்துப் படித்தார். அவர் தலை சுற்றியது!

கடிதத்தை முன்னும் பின்னுமாகத் திருப்பிப் பார்த்தார். சந்தேகமே யில்லை.—அவருக்கு எழுதப்பட்டதுதான்; மைத்ரேயிதான் எழுதியிருந்தாள்!

"அப்பா அவர்களுக்கு, மைத்ரேயி அனேக நமஸ்காரம். தந்தி கொடுக்கக் கையில் பணமில்லாததால் இந்தக் கடிதம் கிடைத்தவுடன் நீங்கள் புறப்பட்டு வரவும். பாலாஜி தாத்தாவின் கடைசிக் காலம் நடந்து கொண்டிருக்கிறது. டாக்டர்கள் கைவிட்டு விட்டார்கள். எந்த நிமிஷமும் அவர் ஆவி பிரியலாம். யார் யாரோ வெல்லாம் ஏதேதோ உறவு சொல்லிக் கொண்டு தாத்தாவின் வீட்டில் கூடியிருக்கிறார்கள். எல்லாம் அவருடைய சொத்துக்காகத்தான். ஆனால், தாத்தா உங்கள் பெயரைத்தான் அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறார். எதையும் எழுதி வைக்காமல் அவர் கண்ணை மூடி விட்டால் பிறகு யாரும் அவருடைய சொத்தில் காலணாவைக் கூடக் கண்ணால் பார்க்க முடியாது. ஆகையால் நீங்கள் உடனே புறப்பட்டு வரவும்.

இப்படிக்கு, அம்மா சொல்படி,
மைத்ரேயி."

இப்படி ஒரு கடிதத்தைப் பார்த்தால் அவர் தலை சுற்றாமல் என்ன செய்யும்? பாலாஜி

யின் ஆஸ்தி குறைந்தது பதினைந்து லட்ச ரூபாய் இருக்கும். கொஞ்சம் அதிகமாக இருந்தாலும் இருக்குமே தவிரக் குறையாது. அவ்வளவையும் விட்டுப் பிரிந்து அவர் செல்லப் போகிறார். அதையும் மனமாரத் தமக்கு எழுதி வைக்கப் போகிறார். என்ன ஆச்சரியம்!

ஆம்; ஆச்சரியம்தான். பணம் பணம் என்று பணத்துக்காகப் பிராணனை வைத்துக் கொண்டிருந்த பாலாஜி, இப்பொழுது அவ்வளவு பணத்தையும் விட்டுவிட்டுப் பிராணனை விடப் போகிறார் என்றால்? அதுவும் இன்னொருவருக்குக் கொடுப்பதென்றால்...

ராமானுஜத்துக்குச் சிறிது நேரம் ஒன்றுமே புரியவில்லை. 'ஒரு வேளை எல்லாமே பொய்யாயிருக்குமோ?' என்ற சந்தேகம் தோன்றியது. 'எதற்கும் போய்ப் பார்த்து விடுவோம்' என்று எண்ணியவராய் அவசரம் அவசரமாக அறையைப் பூட்டிக் கொண்டு ரயிலுக்குக் கிளம்பினார்.

பாலாஜியைப் பற்றிய சிந்தனையிலேயே சென்றார். பாலாஜிக்கு மாளிகை போன்ற ஒரு பங்களா இருந்தது. ரொக்கமாகவும் நிலபுலன்களாகவும் ஏராளமான சொத்து இருந்தது. மனைவி மக்கள் கிடையாது. ஏகாங்கியாகக் காலம் கழித்து வந்தார். உறவினர்கள் என்று யாரையும் பக்கத்தில் நெருங்க விட்டது கிடையாது. ராமானுஜமும் ஏதோ தூர உறவினர்தான். திருச்சியில் உள்ள வரையில் ராமானுஜம் தான் அடிக்கடி சென்று அவரைப் பார்த்து விட்டு வருவார். இரண்டொரு சமயம் பாலாஜி உடம்பு சரியில்லாமல் படுத்திருக்கையில் ராமானுஜத்தின் மனைவிதான் கஞ்சி வைத்துக் கொடுப்பது முதலிய உதவிகளைச் செய்தாள். அதற்காக அவர் ஒரு வார்த்தை நன்றி தெரிவித்தது கூடக் கிடையாது. உலகமே தமக்குச் செய்யக் கடமைப்பட்டதாக அவர் எண்ணம். அப்படிப்பட்ட மகானுபாவன் இப்பொழுது சகலத்தையும் தாரை வார்த்துக் கொடுத்து விட்டுக் கண்ணை மூடப் போகிறார்! எல்லாம் நிஜம்தானா?

ஓட்டமும் நடையுமாகப் பறந்து வந்து டிக்கட்டை வாங்கிக் கொண்டு பிளாட்பாரத்துக்குள் நுழைந்தார் ராமானுஜம். வண்டி புறப்படுவதற்கு இன்னும் சில நிமிஷங்களே இருந்தன. அநேகமாக எல்லாப் பெட்டிகளும் நிறைந்து விட்டன. உட்காருவதற்குக் கூட இடமின்றி ஒரு பெட்டியின் நடைபாதையில் ஏறி நின்று கொண்டார்.


அப்பொழுது ஒரு ஆள் அவரிடம் வந்தான்.


"ஸார்! பர்த் வேணுமா ஸார்?" என்றான்.

உட்காரக்கூட இடமில்லாமல் தவிக்கையில் நிம்மதியாகப் படுப்பதற்கு பர்த் கிடைப்பதென்றால்! திடீரென்று அதிர்ஷ்ட தேவதையின் கடாட்சம் தம் மீது திரும்பியிருப்பதை ஒருகணம் நினைத்துக் கொண்டார். பிறகு 'எங்கே இருக்கிறது?' என்று கேட்டபடி வண்டியை விட்டுக் கீழே இறங்கி விட்டார்.

"எட்டணா கொடு, ஸார்!" என்றான் அந்த ஆள்.

"எட்டணாவா? நாலணா தருகிறேன்!" என்று கூறியவாறு அவன் பின்னால் சென்றார். அவன் எட்டணா பல்லவியையே பாடிக்



கொண்டு வந்தான். ராமானுஜமும் திரும்பத் திரும்ப 'நாலணா' என்று சொல்லிக் கொண்டே அவனைத் தொடர்ந்தார்.

ஒரு பெட்டியின் முன்பு வந்து நின்று ஜன்னல் வழியாக உள் பக்கம் எட்டிப் பார்த்து, "டேய், ஜப்பான்! பர்த்தை ஐயாவுக்கு விடுடா!" என்றான் ஆத்திரமாக. அவன் இறங்கியதும் ராமானுஜமும் ஏறி உட்கார்ந்து கொண்டு ஒரு நாலணாவை எடுத்து அவனிடம் கொடுத்தார்.

"என்ன ஸார், இது?" என்றான்.

"என்னவா? தெரியலையா இதுதான் நாணயம்!" என்றார் ராமானுஜம்.

"நல்லாயிருக்கு, உங்க நாணயம்! இன்னும் நாலணா கொடு ஸார்!" என்றான் சிறிது கண்டிப்பான குரலில்.

"ஏன், ரூபாயாகக் கேளேன்!"

"ரூபாய் கொடுக்கிற புண்ணியவானும் உண்டு. நீ இன்னும் நாலணா கொடு, சார். இல்லாட்டி பர்த்தை விட்டுவிடு! பர்த்துக்கு ஆளாயில்லே?"

"பர்த்தை விடணுமா? என்ன உங்க பாட்டன் வீட்டு வண்டி பாரு. மரியாதையாகப் போறியா? இல்லே. போலீசைக் கூப்பிடணுமா?" என்று கோபத்தோடு இரைந்தார். அவனும் ஏதோ கத்தினான். அதற்குள் வண்டி நகரத் தொடங்கியது.


பர்த்தில் துண்டை விரித்துக் கைகளை மடித்துத் தலைக்கு வைத்துக் கொண்டு மல்லாக்காகப் படுத்தார் ராமானுஜமும். அந்த ரயிலின் வேகத்தைப் போலச் சிந்தனையும் ஓடிக் கொண்டிருந்தது. கடைசியாக ஒரு தீர்மானத்துக்கு வந்தார்.

நிஜமாகவே பாலாஜி சொத்து முழுவதையும் தமக்கு அளித்து விட்டுக் கண்ணை மூடுவாரேயானாலும், அவரைப் போல இல்லாமல் தான தருமங்களும் நிறையச் செய்ய வேண்டுமென்று சங்கற்பம் செய்து கொண்டார்.


இதோ உள்ளது!

உலகிலே மிகச் சிறந்த

பிரேக் லைனிங்



இந்தியாவில் இப்பொழுது கிடைக்கும் பயர்ஸ்டோன் வயர்-பாக்ட் பிரேக் லைனிங், இந்தத் தொழில் உற்பத்தியில் 30 ஆண்டு அனுபவத்தின் பலனாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. கடும் நியமங்களுக்கு உட்பட்டு தயாரிக்கப்படும் விசேஷ கலவை முறையே இந்த பிரேக் லைனிங்கின் நிகரற்ற தரத்திற்கு உத்திரவாதம் அளிக்கிறது. இதைப் பொருத்தியதும் உங்கள் காருக்குப் பத்திரமாகச் செல்லவும், உடனடியாக நிற்கும் சக்தியும் கிடைக்கிறது. பயர்ஸ்டோன் வயர்-பாக்ட் பிரேக் லைனிங் பொருத்தினால், அபாயகரமான "பிரேக்-இன்" ஏற்படுவதில்லை. இதர ரக பிரேக் லைனிங்கைக் காட்டிலும் இது குறைவாகத் தேய்வதால், உங்கள் பணமும் மீதமாகும்!



- பயர்ஸ்டோன் வயர்-பாக்ட் பிரேக் லைனிங் இப்பொழுது அநேகமாக எல்லா கார்கள், பஸ்கள் மற்றும் டிரக்குகளுக்கும் கிடைக்கும்.
- சரியான முறையில் கடையாணிகளைப் பொருத்த, நீடித்து உழைக்கும் சல்லடைக் கம்பிகள் அமையப் பெற்றுள்ளது. இது தவறான முறையில் பொருத்துவதைத் தடுக்கிறது.
- கடும் சோதனைகளுக்குட்பட்டு தயாரிக்கப்படுவதால், தரம் மாறாமல், உன்னத உழைப்பிற்கு உத்திரவாதம் அளிக்கிறது. ஸெட் ஒவ்வொன்றும் குறைவாகத் தேயும் தன்மை வாய்ந்தது.

Firestone வயர்-பாக்ட்
பயர்ஸ்டோன் பிரேக் லைனிங்

பிரேக் லைனிங் உற்பத்தியில் 30 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவம்

சிறிது நேரத்தில் மெய்ம்மறந்த நித்திரையில் ஆழ்ந்து விட்டார். பிறகு இன்பக் கனவுகள்!

எவ்வளவு நேரம் அவர் கனவு கண்டு கொண்டிருந்தார் என்று அவருக்கே தெரியாது! இடியோடு இடி மோதுவதைப் போன்ற ஒரு சப்தம். ஆகாயத்தில் பறப்பதைப் போன்ற ஒரு உணர்ச்சி. கண்ணைத் திறந்து பார்த்த ராமானுஜம், தாம் பர்த்திலிருந்து கீழே விழுந்திருப்பதையும் உடம்பில் ஆங்காங்கு இலேசாகக் காயம் பட்டிருப்பதையும் உணர்ந்தார். மெள்ள எழுந்து ஜன்னல் வழியாக வெளியில் எட்டிப் பார்த்தார். அப்பா! என்ன பயங்கரம்!

அன்று முதல் சில நாட்களுக்கு 'அரியலூர்' என்ற பதம் உலகம் முழுதும் ஒலித்தது!

எழும்பூரில் முதலில் ஏறி நின்று கொண்டிருந்த பெட்டியைப் பார்த்தார். அது தண்ணீருக்கு அடியில் தவம் செய்து கொண்டிருந்தது. மூன்று நாட்கள் கழித்துத்தான் அந்தப் பெட்டி வெளியில் எடுக்கப்பட்டது என்பதைப் பின்னால் தெரிந்து கொண்டார்.

அந்தப் பெட்டியிலேயே அவர் இருந்திருந்தால்?...இதை நினைக்கும்பொழுதே அவர் மூச்சு நின்று விடும்போலிருந்தது. சட்டென்று அவர் மனக்கண் முன்பு அந்த ஆள் வந்து நின்றுகொண்டு, "பர்த் வேணுமா ஸார்?" என்று கேட்டான். "பாவம், இன்னும் நாலணா கொடுக்காமல் போனேனே..." என்று உண்மையாக அனுதாபப்பட்டார்.

எப்படியோ அன்று மத்தியானம் ஒரு மணி சுமாருக்குத் திருச்சியை அடைந்தார். அவர் வரவுக்காகவே காத்திருந்தவர் போலப் பாலாஜி, தமது சொத்து முழுவதையும் அவரிடம் ஒப்படைத்து விட்டுப் பொன்னாசையோடு மண்ணாசையையும் துறந்தார்.

மறுநாளே தமது ஒண்டுக் குடித்தனத்தைக் காலிசெய்துவிட்டுப் பாலாஜியின் பங்களாவை ஆக்கிரமித்துக் கொண்டார் ராமானுஜம். அதேபோல் வாழ்க்கைத் தரமும் உயர்ந்தது. பாலாஜியின் ஈமக்கிரியைகளைத் தடபுடலாகச் செய்தார். ஆனால் உறவினர்கள்தான் யாருமில்லை. ராமானுஜம் பெயருக்குப் பாலாஜி தமது உயிலை எழுதி வைத்ததும் ஒவ்வொருவராக மறைந்து விட்டனர்.

இரண்டு வாரங்கள் சென்றன. ராமானுஜம் திரும்பவும் சென்னைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். வேலையை ஒப்புக்கொள்வதற்கல்ல; வேலைக்கு ராஜினாமா எழுதிக் கொடுத்திருந்தார். அவர்கள் நேரில் வந்து கணக்கைச் சரி செய்துகொண்டு போகுமாறு எழுதியிருந்தார்கள். அதற்காகத்தான்.

"அப்பா!" என்று கூப்பிட்டுக் கொண்டு அவரிடம் வந்தாள் மைத்ரேயி.

"என்னம்மா?" என்றார் மிகுந்த வாத்ஸல்யத்துடன். இந்த ராமானுஜம் முன்பெல்லாம் 'அப்பா' என்றால் 'என்ன' என்று எரிந்து விழுவார்!

"பட்டணத்தில் அந்த ஆளைப் பார்ப்பீர்களா அப்பா?" என்றாள்.

"எந்த ஆளை?"

"அவன்தான்; உங்களுக்கு 'பர்த்' பிடித்துக் கொடுத்தானே?"



தென்திருப்பேரை, அபிநவ காளமேகம் கவி திரு அனந்தகிருஷ்ணய்யங்கார் பேரனும், திரு திருவேங்கடத்தய்யங்கார் புத்திரருமான திரு கிருஷ்ணன் அவர்களுக்கும் தென்திருப்பேரை மிராசுதார் திரு டி. எஸ். வெங்கடாசலமய்யங்கார் புத்திரி வேதவல்லிக்கும், தென்திருப்பேரையில் சமீபத்தில் வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது. வாழ்க மணமக்கள்!

ராமானுஜம் ஒரு கணம் யோசித்தார். அன்று மட்டும் அவன் வராதிருந்தால்?.. அவர் கற்பனை எங்கெல்லாமோ சென்று விட்டது. சட்டென்று சமாளித்துக் கொண்டவராய், "எங்கேயாவது பிளாட்பாரத்தில் அலைந்து கொண்டிருப்பான். ஏன்..." என்றார்.

"ஏனா?...அவனைப் பார்த்து அவனுக்குத் தகுந்த சன்மானம் செய்ய வேண்டாமா, அப்பா?" என்றாள். அவள் கண்களில் எங்கோ அலைந்து கொண்டிருக்கும் அந்த அவனுக்காக நன்றியும் கருணையும் நிறைந்திருந்தன. அவள் சொல்வது ராமானுஜத்துக்கும் நியாயமென்று பட்டது.

"என்னம்மா செய்யலாம்?" என்றார்.

"நிறையச் செய்யுங்கள் அப்பா...ஒரு ஆயிரம் ரூபாயாவது அவனுக்குக் கொடுங்கள்..." என்று சர்வ சாதாரணமாகப் பதில் சொன்னாள் மைத்ரேயி. பரம்பரையாக ஒரு ராஜ குடும்பத்தில் பிறந்தவளைப் போலத் தோற்றமளித்தாள். ராமானுஜம் குரலில் ஒரு அதிர்ச்சியுடன் "எவ்வளவு?" என்றார்.

"ஆயிரம் ரூபாய்தானப்பா!" என்றாள் அவள் அலட்சியமாக.

"எதற்காக, அம்மா அவ்வளவு? அவன் என்ன தெரிந்தா செய்தான்?.."

"எப்படிச் செய்தால் என்ன? அன்று அவன் வந்திராவிட்டால் இன்று நாங்கள் உங்களையும் இழந்து, எப்படியெல்லாம் தெருத் தெருவாக அலைவோமோ?...இன்று நம்முடைய இவ்வளவு செல்வத்துக்கும் சந்தோஷத்துக்கும் அவன்தானேப்பா காரணம்! நமக்கு இருக்கும் சொத்தில் ஆயிரம் ரூபாய் ஒரு பிரமாதமா? நாம் சந்தோஷமாயிருக்கிறோம்; அவன் குடும்பமும் சந்தோஷமாயிருக்கட்டுமே!" என்றாள். ராமானுஜம் ஒரு விநாடி அவளையே பார்த்துக் கொண்டிருந்தார். 'உன்னை அடையப் போகும் பாக்கியவான் யாரோ?' என்று ஒரு குரல் அவர் உள்ளத்தில் ஒலித்தது.

"ஆகட்டும் அம்மா. இது என்ன பிரமாதம்?" என்று கூறிவிட்டு இரும்புப் பெட்டியைத் திறந்து தனியாக ஒரு ஆயிரம் ரூபாயை எடுத்துக் கோட்டுப் பைக்குள் வைத்துக் கொண்டு கிளம்பினார்.

சென்னைக்கு வந்து அவர் நான்கு நாட்களாகின. முதல் மூன்று நாட்களும் சாயங்கால நேரத்தில் எழும்பூருக்குச் சென்று அந்த ஆளுக்காக அலைந்து கொண்டிருந்தார். அவன் கண்ணில் படவேயில்லை. அன்று அவர் எப்படியும் ஊருக்குக் கிளம்பியாக வேண்டும். எனவே அன்று சில சாமான்கள் வாங்குவதற்காகக் கடைத்தெரு பக்கம் சென்றார். துணிக் கடைகளிலும், சைனாபஜாரிலும் வேண்டிய சாமான்களை வாங்கிக் கொண்டார். அவனுக்காக வைத்திருந்த பணத்திலிருந்து இருநூறு ரூபாய்க்கு மேல் செலவழிந்து விட்டது.

அன்று இரவு தூத்துக்குடி எக்ஸ்பிரஸில் இரண்டாம் வகுப்புப் பெட்டியொன்றில் ராமானுஜம் ஜம்மென்று உட்கார்ந்திருந்தார். சற்றைக்கெல்லாம் இன்னொருவர் வந்து அவருக்கு எதிரில் அமர்ந்தார். இருவருக்கும் பேச்சு ஆரம்பமாயிற்று. அங்கே சுற்றி இங்கே சுற்றி அரியலூரைப் போய்ப் பிடித்ததுஅவர்கள் சம்பாஷணை. ராமானுஜம் தமது அனுபவத்தைச் சொன்னார். சொல்லி விட்டு, "அன்று மட்டும் அவன் வந்திராவிட்டால்..." என்று உடம்பை ஒரு முறை சிலிர்த்துக் கொண்டார்.

"வந்திராவிட்டால்?..." என்று இழுத்தார் அந்த சகப் பிரயாணி. பதில் ஒன்றும் சொல்லாமல் ஒரு வித வியப்புடன் அவரைப் பார்த்தார் ராமானுஜம்.

"அவன் வந்திராவிட்டால் நீங்கள் இறந்திருப்பீர்களோ?..."

"பின்னே?..."

"அப்பொழுதும் நீங்கள் எப்படியாவது பிழைத்திருப்பீர்கள்! பெட்டி, தானாக உடைந்து கொண்டு உங்களை மட்டுமாவது வெளியே தள்ளியிருக்கும். உங்கள் ஆயுள் கெட்டி ஸார்! அவன் ஏதோ தன் வயிற்றுப் பிழைப்புக்காக வந்தான்" என்றார். அவர் குரலிலும் பார்வையிலும் ஒரு நிஷ்டூரம் கலந்திருந்தது. அவருக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் ராமானுஜம் யோசித்துக் கொண்டிருக்கையில் ஜன்னலுக்கு வெளியிலிருந்து "ஸார்!..." என்று குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தார். அந்த ஆள்!

"ஸார்! நல்லா இருக்கீங்களா ஸார்?... வண்டி விழுந்ததைக் கேள்விப்பட்டதுமே உங்களைத்தான் ஸார் நினைச்சுக்கிட்டேன். ஏதாவது இனாம் கொடுங்க ஸார்" என்றான் அவன் உரிமையோடு.

சட்டென்று கோட்டுப் பைக்குள் கையை விட்டு நோட்டுக் கற்றையைக் கையில் எடுத்தார். அவ்வளவையும் அவனுக்குக் கொடுப்பதற்காகத்தான் எடுத்தார். அப்பொழுது எதிரில் உட்கார்ந்திருப்பவர் சற்று முன்பு கூறிய வார்த்தைகள் அவர் காதில் ஒலித்தன. என்ன நினைத்துக் கொண்டாரோ, அந்தக் கற்றையிலிருந்து ஒரு ரூபாய்த் தாளை எடுத்து அவனிடம் நீட்டினார். அதைக் கையில் வாங்கிக்கொண்ட அவன் "சந்தோசம் ஸார்!" என்று வணக்கம் செலுத்திவிட்டுக் கூட்டத்தில் மறைந்தான். மற்ற நோட்டுகள் மீண்டும் பைக்குள் புதைந்தன. "பார்த்தீர்களா ஸார், ஆளுக்கு சந்தோஷம் தாங்கவில்லை!" என்றார் ராமானுஜம்.

"பின்னே இல்லையா ஸார்; ஒண்ணுமில்லாத காரியத்துக்கு ஒரு ரூபாயென்றால்..." என்றார் அந்த மனிதர். ராமானுஜத்தின் உள்ளத்தில் ஒரு திருப்தி நிலவியது. சற்றைக்கெல்லாம் வண்டி நகரத் தொடங்கியது. சென்ற பிரயாணத்தின்போது தாம் ஏதோ தீர்மானம் செய்ததாகவே ராமானுஜத்துக்கு இப்பொழுது நினைவு இல்லை!

இவ்வளவையும் அசரீரியாக இருந்து கொண்டு யாராவது பார்த்துக் கொண்டிருந்திருப்பாரேயானால் இந்த முடிவுக்குத்தான் அவரால் வந்திருக்க முடியும்.

ஒருவர் வாழ்வில் அவருக்கு முன்பின் அறிமுக மில்லாத ஒருவர் தெய்வமாக வருகிறார். இன்னொருவர் வாழ்வில் அதேபோல ஒருவர் சனிகவரனாக வருகிறார்; இதற்கு யாரை நோவது?...அவரவர்களுடைய அதிருஷ்டத்தைத்தான் சொல்ல வேண்டும்!

"கல்கி" ஆகஸ்டு மாதச் சிறுகதைப் போட்டி

பரிசு ரூபாய் நூறு

மாதந்தோறும் நடக்கும் இந்தச் சிறுகதைப் போட்டியில் எழுத்தாளர்கள் எல்லோரும் கலந்து கொள்ளலாம். எழுத்தாளர்கள் சொந்தமாகவே கதைகள் புனைந்து அனுப்ப வேண்டும். போட்டிக்கு ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம். கதைகள் "கல்கி"யில் ஆறு பக்கத்திலிருந்து எட்டு பக்கத்துக்குள் இருக்க வேண்டும். ஒவ்வொரு மாதமும் அந்தந்த மாதப் போட்டிக்கு வந்த கதைகளில் சிறந்ததற்கு நூறு ரூபாய் பரிசு வழங்கப்படும்.

முந்திய மாதப் பரிசுக் கதை அடுத்த மாத மூன்றாவது வாரத்தில் வெளியாகும். பிரசுரத்துக்குத் தகுதியுள்ள மற்றக் கதைகளும் "கல்கி"யில் பிரசுரமாகும். கதைகள் அந்தந்த மாதம் 20-ம் தேதிக்குள் "கல்கி" காரியாலயத்துக்கு வந்துவிட வேண்டும்.

கதைகளைத் திரும்பப் பெற விரும்பும் எழுத்தாளர்கள் கதைகளுடன் போதிய தபால் தலைகள் வைத்து அனுப்பவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

தேர்ந்தெடுத்த கதைகளைத் திருத்துவதற்கும், குறைத்து வெளியிடுவதற்கும் ஆசிரியருக்குப் பூரண உரிமை உண்டு.

துணி வியாபாரிகளின் குதூகலம்.

துணி வாங்க வருபவர்களை வசீகரிக்கும் பலவித டிசைன்கள், [illegible], சிறந்த நெசவாலும் தரத்தாலும் அதிகமாக வியாபாரமாகிறது..... இவைகளிலே ஒவ்வொரு பிரபல துணி வியாபாரியும் தனது கடையில் வைத்து வியாபாரம் செய்ய விரும்புவது. இவைகளே

Resist Print

மற்றும்
இதர வகைகள்
ஷீட்டிங்ஸ், புடவைகள்
வேஷ்டிகள்.

அரவிந்த் ... மில்ஸ் லிமிடெட்.

ஆமதாபாத்.

சோலைவனத்திடையே...



திரு அகிலன் அவர்களின் அருமையான சிறு கதை 'பாலைவனத்திடையே' இன்பியலைச் சேர்ந்ததாக இருந்தது. இன்பியலாக்க முயன்றிருக்கிறார் இந்தக் கதையின் ஆசிரியர்.

ராஜஸ்தான் பாலைவனத்தின் கீழ்க்கோடியைத் தாண்டி, இயற்கை அழகு ததும்பி நின்ற சமவெளியில் விரைந்து கொண்டிருந்தது நான் அமர்ந்திருந்த புகை வண்டி.

தஞ்சை மாவட்டத்தில் எங்கோ ஓர் மூலையில் இருந்த எனக்குத் திடீரென்று டில்லியில் ஒரு பொறுப்பு மிக்க உத்தியோகம் கிடைத்தது. நண்பன் பலராமனிடம் கூட விடைபெற நேரமில்லாது டில்லிக்கு ஓடி வந்த நான், இந்த ஐந்து வருட காலத்துக்குள் எவ்வளவோ மாறிவிட்டேன். எத்தனையோ நிகழ்ச்சிகளை மறந்தும் விட்டேன். ஆனால் பலராமனையோ அவன் பாலைவனத்தினிடையே நடத்திய சோகமயமான காதல் கதையையோ என்னால் மறக்க முடியவில்லை.

நேற்று திடீரென்று சென்னை மாகாணத்திலிருந்து ஒரு கடிதம் வந்தது எனக்கு. அவசரமாகப் பிரித்துப் பார்த்தேன். சுருக்கமாக எழுதப்பட்டிருந்தது அது :

"நண்பா !

ஐந்து ஆண்டுகளாக நம்மிடையே எவ்விதத் தொடர்பும் இல்லாமல் போய்விட்டது. இன்று எவ்வளவோ சிரமப்பட்டு உன் முகவரியை அறிந்து உனக்குக் கடிதம் எழுதுகின்றேன்.

நான் இப்பொழுது தஞ்சை மாவட்டத்திலுள்ள 'சோலைவனம்' என்ற கிராமத்தில் வசித்து வருகிறேன். நீ சென்னைப் பக்கம் வந்தால் அவசியம் என்னைக் காண வந்து சேர். முன்பு துன்பத்தில் தோய்ந்த கதை ஒன்று சொல்லி இருக்கிறேனே, நினைவிருக்கிறதா? இப்பொழுது அதற்கு நேர் எதிரிடையான கதை ஒன்று உனக்குச் சொல்லக் காத்



இருக்கிறேன். சந்தர்ப்பம் கிடைத்தால் தவற விட்டுவிடாதே. அவசியம் வந்து சேர்.

பலராமன்."

'லீவ்' நிறைய இருந்தது. ஆறு மாதத்துக்கு எழுதிக் கொடுத்துவிட்டுப் புறப்பட்டு விட்டேன். புகை வண்டி சென்னையை நோக்கி ஓடிக் கொண்டிருந்தது. சென்னையை நெருங்க நெருங்க என்னுடைய ஆவலும் அதிகமாகிக் கொண்டே வந்தது. பலராமனின் பக்கத்தில் போய் தொடியில் குதித்துவிட மாட்டோமா என்று என் மனம் துடியாய்த் துடித்தது.

தஞ்சையை அடைந்து சோலைவனத்துக்குச் செல்லக் கூடிய வழிமுறைகளைத் தெரிந்து கொண்டேன்.

சோலைவனம் அமைந்திருந்த இடம் அமைதியான ஒரு பிரதேசம். காவிரித்தாயின் வற்றாத நீர்ப்பெருக்கு அந்த கரை அழகுத் தேவதையின் இருப்பிடமாக ஆக்கி இருந்தது.

பலராமனின் வீட்டைக் கண்டு பிடிக்க நான் அதிக சிரமப்படவில்லை. காவிரித்தாயின் வலக்கரத்தில் ஒரு பெரிய சோலையின் நடுவில் அவனுடைய மாளிகை அமைந்திருந்தது. சுற்றுச் சுவரின் நுழைவு வாயிலில் 'கங்கா பவனம்' என்று பெரிய எழுத்துக்களில் கவர்ச்சிகரமாகப் பொறிக்கப் பட்டிருந்தது.


'கங்கா...' அந்தப் பெயரைக் கண்டவுடனேயே என் கண்களில் நீர் கசிந்தது. 'பாவம்! அதன் பிறகு அவளுக்குத் திருமணம் ஆயிற்றோ என்னவோ? அல்லது உயிரோடுதான் இருக்கிறளோ? இறந்துவிட்டாளோ? அவள் நினைவாக இந்த இடத்துக்குப் பெயர் வைத்திருக்கிறன் போலும், பலராமன்' என்று எண்ணியபடியே உள்ளே சென்றேன்.

என்னைக் கண்ட பலராமன்ஓடோடியும் என்னை வந்து இறுகத்தழுவிக் கொண்டான்.

நான் சோலைவனத்தை வந்தடைந்த பொழுதே அந்தி மயங்கி வந்தது. இப்பொழுதோ நன்கு இருட்டி விட்டது. இரவு எட்டு மணி சுமாருக்குச் சாப்பிட உட்கார்ந்தோம். பல ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ்நாட்டின் அறுசுவை உணவை ஒரு கை பார்த்தேன்.

எங்கள் இருவருக்கும் ஒரு பெண்மணிதான் உணவு பரிமாறினள். அவள் பலராமனின் மனைவியாகத்தான் இருக்க வேண்டும் என ஊகித்துக் கொண்டேன். நல்ல அழகியாக இருந்தாள். பேரழகி என்றுதான் அவளைச் சொல்லவேண்டும். அவள் அழகை வர்ணிப்பதென்பது இயலாத காரியம். இப்படிப்பட்ட அழகியைக் கண்ட மாத்திரத்திலேயே கங்காவின் நினைவு பலராமனின் மனத்திலிருந்து பறந்துபோயிருக்க வேண்டும் என்று எனக்குப்பட்டது.

சாப்பிட்டு முடித்ததும் மாளிகைக்குப் பின்னால் உள்ள காவிரிக்கரையை அடைந்து வெண் மணல் பரப்பப்பட்டிருந்த ஒரு மேடையில் இருவரும் அமர்ந்தோம்.



''நண்பா! பாலைவனம் சோலைவனமாக முடியும் என்பதை நீ ஒப்புக் கொள்கிறாயா?'' என்று பலராமன் என்னைக் கேட்டான்.

''என்னால் ஒப்புக் கொள்ள முடியாதுதான். ஆனால் தற்கால விஞ்ஞான ஆற்றலால், மனித முயற்சியால் இது நிறைவேறலாம் என நம்புகிறேன். ஆழ்கடலிலும் அடுக்கு மாளிகை அமைக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை.''

''உண்மைதான். ஆனால் இவற்றைத் தவிர வேறு ஏதோ ஒன்றும் மறைமுகமாக இருந்து, தானே இயங்கத்தான் செய்கிறது. அதற்கு என்ன பெயர் கொடுப்பது என்றுதான் எனக்குப் புரியவில்லை. நண்பா! இப்பொழுது நமக்கு உணவு பரிமாறினாளே, அவள் யார் என்று தெரியுமா?...''

'' உன் மனைவியாக இருக்க வேண்டும் என எண்ணுகிறேன்.''

''அது மட்டுமல்ல; என்னுடைய காதலியும் கூட. ஆம், நண்பா! பாலைவனத்திலே பிறந்த பசுங்கிளிதான் அவள்.''

'' என்ன! கங்காவா...''

என்னை அறியாமலேயே உணர்ச்சி வசப் பட்டு 'உரக்கக் கூவி விட்டேன். என் இதயம் படபட வென்று அடித்துக் கொண்டது.

பலராமன் தொடர்ந்து, '' ஆமாம், கங்காவேதான். பாலைவனத்திடையே பறி கொடுத்தேனே அதேகங்கா தான். விவரமாகச் சொல்கிறேன் கேள்'' என்று கூறிவிட்டுக் கதையை ஆரம்பித்தான். ஒவ்வொரு வார்த்தையிலும் எத்தனை துடிப்பும் எவ்வளவு பொருளும் பொதிந்திருந்தன!

அன்று என்னிடம் விடைபெற்றுச் சென்ற பலராமன் நடைப்பிணம் போலவே ஆகி விட்டான். தன்னுடைய துன்பக் கதையை என்னிடம் சொன்ன பிறகு அவன் மனச் சுமை குறைவதற்குப் பதிலாகப் பன்மடங்கு அதிகமாகிவிட்டது. எந்நேரமும் 'கங்கா...கங்கா' என்று பிதற்ற ஆரம்பித்து விட்டான்.

தாய் தந்தை அற்ற அவன் உற்றார் உறவினர் வீட்டை எட்டியும் பார்க்கவில்லை. காலை மாலை இரவு எப்பொழுதும் கடற்கரையே கதி என்று கிடந்தான். அந்தப் பரந்த கடற்கரை அவனுக்கு ராஜஸ்தான் பாலைவனத்தைப் போல் தென்பட்டிருக்க வேண்டும். அந்த மணலை மூட்டு மூட்டாகக் குவித்துக் கொண்டு அதை அணைத்தபடியே, பாய்ந்து வரும் தரங்கத்தைப் பார்த்தபடியே படுத்துக் கிடப்பான். அந்த அலைக்கரங்கள் கரையில் படீர் படீர் என்று ஆவேசத்தோடு அறைவது ''கங்கா...கங்கா...'' என்று முழக்கமிடுவது போல் அவன் காதுகளில் ஒலித்தது.

ஒரு நாள் மாலை. இருளரசி தன் நீண்ட கரங்களை அகல விரித்தபடியே உலகை அணைத்



துக் கொண்டு வந்தான். வழக்கடபோல் கடற்கரையில் கிடந்தான் பலராமன்.

அப்பொழுது—

ஒரு நினைவிலிருந்து மற்றொரு நினைவைத் தாவிப்பிடிக்கும் அணில் போல் எங்கிருந்தோ வந்த ஒருவன் 'டபக்' கென்று அவனுடைய கரங்களைப் பிடித்துக் கொண்டு 'பலராம்' என்று மெள்ளக் கூவினான். அந்தக் கூவல் தமிழைப் போல இல்லை. அதில் சிந்தி மொழியின் சத்தம் தெளிவாக ஒலித்தது.

பலராமன் திடுக்கிட்டு போய், "யாரப்பா நீ?" என்றான் தமிழிலேயே.

"என்னை உனக்குத் தெரியவில்லையா?... தெரிந்து கொள்வதற்கு நியாயம் இல்லைதான். ஆனால் உன்னை எனக்கு நன்றாகத் தெரியும்."

பலராமனின் கேள்விக்கு அவன் பதில் சொன்னான். ஆனால் அவன் பதில் சொல்லிய மொழியைக் கேட்டதும்....

பலராமனின் கண்கள் வானத்தில் கோடி சந்திரனை ஒரே சமயத்தில் கண்டதைப் போல் அகன்று விரிந்தன. அவன் உள்ளத்தில் ஒரு புதிய உற்சாகம் காவிரிப் பிரவாகத்தைப் போல் பாய்ந்தது. இத்தனைக்கும் காரணம் அந்தப் புதியவன் பேசிய சிந்தி மொழிதான்.

அந்த மொழியால்தான் அவன் கங்காவோடு காதல் காவியம் பாடினான். அந்த மொழியால்தான் கங்காவின் தமையன் கொள்ளைக்கார மோகன் சிங்கோடு வீரம் பேசினான். அந்த மொழியால்தான் கங்காவின் தகப்பன் ராம்நாராயணனோடு நட்புரிமை பாராட்டினான். அந்த மொழியை, எத்தனையோ மைல்களுக்கு அப்பால் உள்ள ராஜஸ்தான் பாலையில் வழங்கும் அந்த இனிய மொழியை இந்தச் சென்னை மெரீனாவில் பேசுவது யார்?,

"நீ...நீ...." பலராமன் தடுமாறினான்.

"நான்...நான்தான் மோகன் சிங். கங்காவின் தமையன்."

"ஆ! கொள்ளைக்கார மோகன் சிங்கா! கங்காவின்..."

"சூ...சத்தம் போடாதே. என்னைப் பயங்கரமான ஆபத்து சூழ்ந்து நிற்கிறது. எப்பொழுதோ நான் தூக்கிலே தொங்க வேண்டியவன். ஆனால், உன்னைக் கண்டு பிடித்துக் கங்காவை உன்னிடம் ஒப்படைக்காமல் சாகக் கூடாது என்ற உறுதிதான் என்னை இன்னும் உயிரோடு வைத்திருக்கிறது..."

"என்ன! கங்காவை என்னிடம்....என்னிடம்..."

"பலராம்! நான்கு ஆண்டுகளாகப் படாத பாடுபட்டு, எங்கெங்கோ தேடி அலைந்து கடைசியில் இங்கு கண்டு பிடித்திருக்கிறேன் உன்னை. அதற்குள் எல்லாவற்றையும் நாசமாக்கி விடுவாய் போல் இருக்கிறது. நான் ஒரு கொலைகாரன், கொள்ளைக்காரன் என்பதை மறந்து நீ கத்துகிறாயே!" என்றான்.

பலராம் பதில் ஒன்றும் பேசாது மரமாய் நின்று கொண்டிருந்தான். அதைக் கண்ட மோகன்சிங், "பலராம்! இப்பொழுதே, இந்த இடத்திலேயே எல்லாவற்றையும் விவரமாக உன்னிடம் சொல்லியாக வேண்டும். இனியும் என்னால் போலீஸ்காரர்களை ஏமாற்ற முடியாது" என்று கூறி அவனுடைய கைகளைப் பற்றிக் கொண்டு போய் ஒரு ஒதுக்குப்புறமான இடத்தில் அமர்ந்தான்.

சிறிது நேர மௌனத்துக்கு பின்பு மோகன் சிங் தன் கதையைக் கூறத் துவங்கினான்.

★

அப்பொழுது பதினைந்து வயதைத் தாண்டிக் கொண்டிருந்தான் மோகன் சிங். ஒரு நாள் நட்ட நடுநிசி. தந்தை ராம் நாராயணனை அணைத்தாற் போல் உறங்கிக் கிடந்தான் அவன்.

திடீரென்று ஒரு பயங்கர வெறிக்கூச்சல் காதைப் பிளந்தது. ராம்நாராயணன் வீடு மட்டுமின்றி அந்த ஊரே அமளிப்பட்டது. கொலைக்கு அஞ்சாத தேவ்சிங் கூட்டத்தினர் குதூகலமாகப் பொருள் வேட்டை ஆடுவது தான் இத்தனை அமளிக்கும் காரணம். வேட்டை முடிந்து போகிறபோக்கில் தேவ் சிங்கின் முரட்டுக் கரம் மோகன் சிங்கை அலக்காகத் தூக்கிக் குதிரையில் வைத்துக் கொண்டு சென்றது.

இருபது வயதை அடைந்த மோகன்சிங் எல்லாவகையிலும் தேவ்சிங்குக்குச் சரிசமமாக விளங்கினான். அவனுக்கு வீட்டு நினைப்பே ஏற்படுவதில்லை. 'வேட்டை' நினைப்புத்தான் அதிகம். ஆனாலும் பாசம் அவனை விட்டுப் பறந்து போய் விடவில்லை. சகோதரி கங்காவின் மேல் அவனுக்கு ஒரு தனி ஆசை இருக்கத்தான் செய்தது.

அந்த ஆசைதான் தேவ்சிங்குக்கும் மோகன் சிங்குக்கும் தீராத பகையை மூட்டிவிட்டது. மோகன் சிங்கின்மேலும் ஒரு தவறும் இல்லை. எவன்தான் பாய்ந்தோடும் புள்ளிமானைப் புலியினிடம் ஒப்படைப்பான்?

கங்காவை மணக்க விரும்பிய தேவ்சிங்குக்கு எவ்வளவோ இதமாக எடுத்துக் கூறினான் மோகன்சிங். முரடனான அந்தக் கிழட்டுச் சிங்கம் எதையுமே காதில் வாங்கிக் கொள்ளவில்லை. கைபடாத காட்டு மலரை எப்படியும் கவர்ந்துவிடத்தான் தீர்மானித்தான் தேவ் சிங். ஆனால் மோகன் சிங் விட்டுவிடவில்லை. தனக்கு வேண்டிய சகாக்களோடு சென்று தேவ் சிங்கைச் சக்கையாக உதைத்து விரட்டி விட்டான். அன்றைக்கு ஏற்பட்ட பகைதான் காட்டாற்று வெள்ளம்போல் நாளுக்கு நாள் அதிகரித்துப் பெருக ஆரம்பித்து விட்டது.

ஒருவரை ஒருவர் தீர்த்துக் கட்டச் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி இருந்தார்கள். இந்தச் சமயத்தில்தான் பலராமன் அங்கு வந்தான்.

பட்டாளக்காரனான பலராமன் அடிக்கடி தன் தந்தையைச் சந்திப்பதற்காக வீட்டுக்கு வருகிறான் என்ற செய்தி மோகன் சிங்குக்கு எட்டியதும் அவன் திடுக்கிடத்தான் செய்தான். தந்தையைச் சந்திக்க வருகிறானா, தங்கையைச் சந்திக்க வருகிறானா என்பதை யூகிக்க அவனுக்கு வெகு நேரம் பிடிக்கவில்லை. அவன் குருதி கொப்பளித்துக் கொண்டு ஓடியது. 'அந்தப் பட்டாளக்காரனைப் பார்க்கிறேன் ஒரு கை' என்று ஆவேசத்தோடு கூவித் தன் உறையிலிருந்து கத்தியை உருவி மீண்டும் செருகிக் கொண்டான்.

அன்று இரவுதான் கங்காவைக் 'கடத்திக் கொண்டு பாலைவனக் குன்றுகளிடையே வந்து கொண்டிருந்தான் பலராமன்.

அந்தக் குன்றுகளிடையே இருந்த பயங்கரமான குகைகளில்தான் மோகன்சிங் தன் சகாக்களோடு வசித்து வந்தான். அந்தப் பக்கத்தில் அன்னியர்களின் வாடையே வீசாது. தப்பித் தவறித் தேவ் சிங்கின் ஆட்கள் அங்கு வந்துவிட்டால் அவர்கள் உயிரோடு திரும்பிச் செல்ல மாட்டார்கள். அப்படி வருகின்றவர்களைக் கவனிக்க எப்பொழுதும் ஒரு ஆள் குன்றின்மேல் உலவிக் கொண்டிருப்பான். அவன்தான் யாரோ இரண்டு பேர்கள் குன்றுகளுக்கிடையே வருவதாக மோகன்சிங்குக்குத் தகவல் கொடுத்தான்.



உடனே கவனிக்க ஆரம்பித்தான் மோகன் சிங். பாட்டரி விளக்கின் பிரகாசத்தில் பலராமனின் முகம் தெளிவாகத் தெரிந்தது. 'பக்கத்திலே கங்கா; அருமைத் தங்கை. எப்படி இருக்கும் மோகன் சிங்குக்கு? ஏற்கனவே அவன் நினைத்திருந்ததற்கும் இதற்கும் எவ்வளவு ஒற்றுமை ஆகிவிட்டது?

அதனால் தான் வெறிகொண்ட வேங்கையைப் போல் பாய்ந்தான். இடையே மட்டும் கங்கா குறுக்கிடாமல் இருந் திருந்தால் பலராமனைக் கக்குநாருக் கிழித் தெறிந்திருப்பான். அவனுடைய நல்ல காலம் உயிரோடு ஊர் திரும்ப முடிந்தது.

கங்காவின் கையைப் பிடித்தவாறே ஊரை நோக்கி நடக்க ஆரம்பித்தான் மோகன் சிங். அவனுடைய உள்ளத்தில் என்றும் இல்லாத ஒரு திருப்தி நிறைந்திருந்தது. அவனுடைய கண்களிலிருந்து குடம் குடமாகக் கொட்டிக் கொண்டிருக்கும் கண்ணீரை அவன் சட்டை செய்யவில்லை.

ஊர் இன்னும் சிறிது தூரமே இருந்தது. ஏதேதோ இன்ப நினைவுகளில் தன்னை மறந்து வந்த மோகன் சிங் 'ஓ...' என்ற வெறிக் கூச்சலைக் கேட்டுத் திடுக்கிட்டான்.

கணத்தில் அவனுக்கு எல்லாம் விளங்கியது. 'தனிமையில் வந்து தேவ் சிங்கின் ஆட்களிடம் அகப்பட்டு கொண்டோமே!' என்று தன் மடத்தனத்தை எண்ணி நொந்து கொண்டான். நிராயுதபாணியாக இல்லாவிட்டாலும் அந்தப் பத்துப் பேர்களை எதிர்த்து அவர்களிடமிருந்து கங்காவைக் காப்பாற்ற அவனால் முடியவில்லை. தன் கை வாளின் உதவியால் அவன் தப்பித்ததே பெரும் ஆச்சரியம்தான்.

அலறித் துடிக்கும் கங்காவை லட்சியம் செய்யாமல் தூக்கிக் கொண்டுபோய் விட்டார்கள் தேவ்சிங்கின் ஆட்கள். மோகன் சிங் பலத்த காயத்தோடு உயிர் தப்பினான்.

பாவம்! இப்பொழுது அவன் ஆத்திரப் படுவதற்குப் பதிலாக அழுது அழுது வேதனையுற்றான். 'கங்காவின் கதி என்ன ஆகுமோ?' என்ற நினைவு அவனைத் தவிக்கச் செய்தது. அவனுடைய துன்பம் அனைத்தும் துணிவாக உருச் சேர்ந்தது. தன்னிடமிருந்த சொற்ப ஆட்களோடு சென்று தேவ்சிங்கைத் தாக்கி, கங்காவை மீட்பதற்குப் பெரு முயற்சி செய்தான். பாலைவனமெங்கும் பச்சை ரத்தம் பாய்ந்தோடியது. கடுமையான போராட்டம் நடந்தது. முடிவில் மோகன் சிங்குக்குப் பலத்த தோல்விதான். அவன் மட்டும்தான் எஞ்சி நின்றான். அந்தப் பாலைவனத்தை விட்டே ஓடிப் பக்கத்துப் பாலைவனத்தில் வாழ நேர்ந்தது. அதுவும் பதுங்கித்தான் வாழ முடிந்தது.

இனி கங்காவைக் காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கை அணுவளவும் அவனுக்கு ஏற்படவில்லை. கடந்ததை நினைத்து வருந்தினான். 'பலராமனுக்கே மணம் முடித்து வைத்திருந்தால்...' இதை அவன் அடிக்கடி நினைத்துப் பார்க்க நேர்ந்தது.

ஒருநாள் கால் போன போக்கில் நடந்து சென்ற மோகன் சிங் 'குமான்' என்ற மொகலாயர் பட்டணத்தை அடைந்தான். பசி அவனை வாட்டி வதக்கி எடுக்க ஆரம்பித்தது. ஒவ்வொரு வீடாகக் கையேந்திக் கெஞ்சிப் பார்த்தும் ஒன்றும் கிடைக்கவில்லை. கடைசியில் ஒரு அமீரின் அடிமைப் பெண்ணிடமிருந்து சில ரொட்டித் துண்டங்கள் அவனுக்குக் கிடைத்தன.

அவற்றைக் கொண்டு வந்து போட்ட அடிமைப் பெண்ணை உற்று நோக்கிய மோகன்சிங் அடுத்த கணம் திகைத்து விட்டான்.

"கங்காவா?" அவனுடைய கண்கள் வியப்பினால் விரிந்தன.

அதற்கு "ஆம், அண்ணா! கங்காவேதான்" என்று அவளுடைய கண்களே பதில் கூறின. இருவருமே வாய் திறந்து பேச முடியாது குமுறி நின்றிருந்தனர். வெகு நேரத்துக்குப் பிறகு அவள் காதோடு காதாக ஏதோ கூறிவிட்டு அப்பால் சென்றான் மோகன்சிங்.

அன்றைய இரவு கழிந்து வெள்ளி முளைப்பதற்குள்ளாகக் குமானிலிருந்து பிகானீரை நோக்கி இரண்டு உருவங்கள் வெகு வேகத்தோடு முன்னேறிக் கொண்டிருந்தன. அவர்கள் வேறு யாருமல்ல; மோகன் சிங்கும் அமீரின் அடிமையான கங்காவும் தான்.

வழிநடையில், தான் இத்தனை நாளும் அனுபவித்த துன்பங்களை யெல்லாம் ஒன்று விடாமல் கூறித் தேம்பித் தேம்பிச் சிறுபிள்ளையைப்போல் அழுதாள் கங்கா.

அவள் தேவ்சிங்கினிடமிருந்து தற்செயலாகத் தப்பியதையும், ஒரு பணக்காரக் குடும்பத்தில் அடைக்கலம் புகுந்ததையும் அங்கிருந்த ஒரு கிழவன் அவளைப் பலவந்தப்படுத்

நிய பொழுது உயிரையும் பொருட்படுத்தாது மாடியிலிருந்து கீழே குதித்துத் தன் கற்பைக் காப்பாற்றிக் கொண்டதையும் பேராசை பிடித்த வழிப்போக்கன் ஒருவன் பலத்த அடிபட்டுக் கிடந்த அவளை எடுத்துச் சென்று குணப்படுத்திப் பத்து முத்திரைப் பொன்னுக்குச் சூமான் பட்டணத்து அமீரிடம் விற்றதையும், அந்த அமீரின் இச்சைக்கு இடமளிக்க மறுத்ததால் தினமும் கிடைக்கும் சவுக்கடிப் பிரயோகத்தையும் கங்கா கூறக் கேட்ட மோகன் சிங் 'கோ' வென்று வாய் விட்டு அழ ஆரம்பித்து விட்டான். அவள் கைகளில் சவுக்கடியால் ஏற்பட்டிருந்த தழும்புகளைக் கண்டபொழுது அவன் அழுகை அதிகமாயிற்று. அழகான இளமைப் பூவையும் மென்மையையும் துன்புறுத்தி விட்டனவே!

நான்கு நாட்கள் இடைவிடாது பிரயாணம் செய்த பின்பு இருவரும் தங்கள் சொந்த ஊரை அடைந்தார்கள்.

ராம்நாராயணன் மரணத் தறுவாயில் இன்றோ நாளையோ என்று இருந்தார். எல்லாம் மகனைப் பிரிந்த ஏக்கம்தான். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு மகளையும் பல ஆண்டுகளுக்குப் பிறகு மகனையும் கண்ட பூரிப்பில் அவருடைய உயிர் அமைதியாகப் பிரிந்தது.

தந்தையார் வைத்துப்போன திரண்ட செல்வத்தைத் தங்கைக்கே கொடுத்து அவளை ஒரு தகுந்த இடத்தில் மணம் முடித்துக் கொடுக்க ஆயத்தம் செய்தான் மோகன்சிங்.

அவனுடைய இந்த அவசரத்துக்கும் தகுந்த காரணம் இருந்தது. தேஜ்சிங் கூட்டத்தைப் பிடித்த போலீஸ் இலாகா மோகன் சிங்கையும் பிடிக்கத் தீவிர முயற்சி செய்தது.

ஆனால் அவன் எண்ணம் ஈடேறவில்லை. பலராமனைத் தவிர வேறு யாரையும் கங்கா ஏற்க மறுத்தாள். ஒரு பெண்ணின் பிடிவாதத்தின் முன்பு ஆணின் பிடிவாதம் அடிபணியத்தான் நேர்ந்தது. தற்கொலை செய்து கொள்ளப்போன கங்காவை அவன் தடுத்து நிறுத்தியது மயிரிழையில்தான்.

தங்கையின் அசட்டுத்தனத்தைக் கண்டு ஆத்திர முற்றாலும், அவள் உறுதிப்பாட்டைக் கண்டு உளம் பூரித்தான். காதலின் சக்தியை இப்பொழுதுதான் நன்குணர்ந்தான்.

'பலராமன் எங்கிருந்தாலும் அவனிடம் உன்னை ஒப்படைத்து விடுத்தான் மறுகாரியம்' என்று உறுதி கூறினான்.

அன்றே கங்காவை அழைத்துக் கொண்டு மாறுவேஷத்தில் ஊரைவிட்டுப் புறப்பட்டு விட்டான். சொத்து முழுவதையும் பணமாக்கிக் கொண்டு பலராமனைத் தேடிப் புறப்பட்டு விட்டான். கடைசியில் தென் இந்தியாவிலும் பல இடங்களைச் சுற்றிய பிறகு தான், இன்று எதிர்பாராத விதத்தில் பலராமனை அவன் சந்திக்க முடிந்தது.

மோகன்சிங் பேச்சை நிறுத்தினான். பலராமனுக்கு அவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டு 'மோகன்! நீ பெரிய தியாகி' என்று வாய்விட்டுக் கத்தவேண்டும் போல் இருந்தது.

அதற்கு மோகன்சிங் இடம் வைக்காமல், "பலராம்! சீக்கிரம் புறப்படு. கோடம்பாக்கத்தில் ஒரு வாடகை பங்களாவில்தான் நாங்கள் வசித்து வருகிறோம். அங்குதான் கங்கா இருக்கிறாள்" என்று கூறி வேகமாக நடக்கத் துவங்கினான்.

இருவரும் பங்களாவை அடைந்தார்கள். அண்ணனை எதிர்நோக்கி வாசற்படியருகில் நின்றிருந்த கங்கா அவன் பின்னால் பலராமன் வருவதைக் கண்டு தன் நிலை மறந்தாள். 'பலராம்' என்று அந்தப் பங்களாவே விண்டு போகும்படி வீறிட்டாள். வெறி கொண்டவள் போல் ஓடி வந்து அவனைத் தழுவிக் கொண்டாள்.

காதலால் இணைந்து, ஜாதி வெறியால் பிரிந்து, பின் தியாகத்தால் ஒன்றிய ஒரு மகத்தான மனோரம்மியமான காட்சியைக் கண்டு மோகன்சிங் மென்னகை ஒன்றைப் பூப்போல உதிர்த்தான். அவன் கண்களில் ஆனந்தப் பெருக்கில் திரண்ட கண்ணீர் பட் பட்டென்று கீழே விழுந்து சிதறி ஓடியது.

அந்த இன்பம் சற்று நேரம்தான் நீடித்தது. அடுத்த நொடியில் ஓயாத விசில் சப்தமும், 'டக் டக்' என்ற பூட்ஸ்களின் ஓசையும் எல்லோரையும் நிலைகுலையச் செய்தன. "ஐயோ, போலீஸ்!" என்று அலறினாள் கங்கா.

"மோகன்" என்று கதறினான் பலராமன்.

ஆனால் மோகன்சிங் ஆடவில்லை, அசையவில்லை. தப்பியோட ஒரு முயற்சியும் செய்யவில்லை. அவன் முகத்தில் களங்கமற்ற பேர் அமைதி நிலவியது. கண்களில் அபூர்வப் பிரகாசம் மின்னியது. உள்ளத்திலே ஒருவித நிறைவு பூரணமாய்ப் பரிணமித்தது.

விலங்கு பூட்டிய கைகளோடேயே கங்காவையும் பலராமனையும் சேர்த்துப் பிடித்து இணைத்து வைத்தான். அவர்கள் கண்ணீர் வழிய வழி அனுப்பியதைக் கண்டு மென்னகை சிரித்தான். சிறிது நேரத்தில் துப்பாக்கிகள் புடைசூழ அவ்விருவரது கண்களிலிருந்தும் மறைந்தே போனான்.

ஒரு மாதத்துக்குப் பிறகு மோகன்சிங் தூக்கிலே போடப்பட்டான் என்ற செய்தியை அறிந்த பொழுது கங்காவின் கண்களில் இருந்து கங்கா தேவியே ஆவேசத்தோடு பெருக்கெடுத்தோடினாள். பலராமனும் பல நாட்கள் வரையில் பைத்தியம் போலவே காணப்பட்டான்.

அதன் பிறகு சென்னையில் இருக்கவே பிடிக்கவில்லை. வேலையை ராஜினாமா செய்து விட்டுப் பாங்கில் கிடந்த பணத்தையும் எடுத்துக் கொண்டு கங்காவோடு சோலைவனத்துக்கு வந்து விட்டான். சொந்த மாளிகையும் கட்டிக் கொண்டான்.

அழகும் அமைதியும் நிறைந்த சோலைவனத்திடையே பலராமனும் கங்காவும் அமோக வாழ்வு வாழ்கின்றனர். ஆண் பெண்ணாக இரண்டு குழந்தைகள்கூட இருக்கின்றன. மூத்தது ஆண். மோகன் என்று பெயர். மோகன் சிங்கின் நினைவாக அந்தப் பெயரை வைத்திருக்கிறார்கள். இளையது பெண். பெயர் அகிலா. என்னுடைய ஞாபகார்த்தமாக அந்தப் பெயரை வைத்திருக்கிறான் பலராமன்.

பலராமன் கங்காவின் வாழ்க்கை வரலாறு என்னைப் பரவசத்தில் ஆழ்த்தியது.

"வா, தூங்கப் போகலாம்!" என்று கூறி அவன் என் முதுகில் தட்டியதும்தான் நான் இந்த உலக நினைவுக்குத் திரும்பி வந்தேன்.


அவனைப் பொறுத்த
மட்டிலும் கவலையே
வேண்டாம்
LACTOGEN
NESTLE'S
MODIFIED POWDERED MILK
ஏனெனில் அவன்
லாக்டோஜனில்
வளருகிறான்.
LG/P/21A
சிலோன் ரேடியோ நிலையத்திலிருந்து
லாக்டோஜன் ஹிந்தி ப்ரோகிராமில்
பீஜு ராயின் சொற்பொழிவை கேளுங்கள்
பிரதி ஞாயிற்றுக் கிழமை
மாலை 7-45 முதல் 8 வரை
பிரதி வியாழக் கிழமை
மாலை 8-30 முதல் 8-45 வரை
41 மீட்டர் பாண்ட்
விபரங்களுக்கு எழுதுங்கள்,
X
நெஸ்ல்ஸ் ப்ராடக்ட்ஸ் (இந்தியா) லிமிடெட்
தபால் பெட்டி நெ. 398 கல்கத்தா
தபால் பெட்டி நெ. 315 பம்பாய்
தபால் பெட்டி நெ. 180 மதுரை

முதல் மணி அடித்து விட்டது. இன்னும் ஐந்து நிமிஷத்தில் திருவனந்தபுரம் பாஸஞ்சர் கிளம்பி விடும். நேரம் ஆக ஆகப் பிளாட்பாரமே கலகலத்துப் போகும்படி ஆட்டமும் பாட்டமும் அதிகரித்துக் கொண்டிருந்தன.

"ஊருக்குப் போனவுடன் அவசியம் கடிதம் போடு, கமலா!"

"உம்....போடுகிறேன். நீங்களும் பதில் கடிதம் போடுங்கள். குமாரைத்தான் என்னுடன் அழைத்துப் போகிறேன் என்றால் வேண்டாம் என்கிறீர்கள்."

"இன்னும் ஒரு மாசத்திலே அவனுக்கு விடுமுறை விட்டுவிடும். அவன் அங்கே வருவதற்குள் நீயும்...."

கமலா நாணத்துடன் தலை குனிந்தாள்.

"சரி, நாங்கள் ரயிலைவிட்டு இறங்குகிறோம்" என்று சொல்லிவிட்டுக் குமாரின் கையைப் பிடித்துக் கொண்டு ராமநாதன் கீழே இறங்கப் போனார்.

"இருங்கள்..கண்ணா..பரீட்சை முடிந்தவுடன் வந்துவிடறயா......" என்று குமாரைப் பிடித்து இழுத்துக் கொண்டு கேட்டாள்





கமலா. முகமும் முகமும் இழைந்தன. கமலாவின் கண்கள் கலங்கின.

இன்னும் ஒரு மாதத்திலே மகனையோ மகளையோ பெற்றெடுக்கப் போகிறவள் கமலா. அதற்குத்தான் மாயவரத்துக்குச் சென்றுகொண்டிருக்கிறாள்.

கூவென்றுகூவியது ரயில்.

'' நான் போய் விட்டு வருகிறேன். குழந்தையை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளுங்கள். குமார்! ..அப்பாவைப் படுத்தாமல் இரு'' என்று கமலா சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே,ரயில் நகர்ந்தது!

குமாரின் கையைப் பிடித்துக் கொண்டு மெதுவாக நடந்தார் ராமநாதன். பாலத்தின் மீது குமாரரை எடுத்துக் கொண்டு சென்றார். அவசரம் அவசரமாக ஸ்டேஷனுக்கு வெளியே வந்தார்.

'' அப்பா, போனவுடனே சாப்பிடணுமே!''

'' ஆமாம்...''

'' யார் சாப்பாடு போடுவா !''

'' அம்மாதான்...அட ..இல்லே இல்லே... நான்தான்!'' ராமநாதன் குமாரரைப் பார்த்துச் சொன்னார்.

'' நீயா...?'' குமார் குழந்தைச் சிரிப்பு சிரித்தான். ''போப்பா விளையாடறே !''

இதற் கு எப்படிப் பதில் சொல்வது?

'' எதற்கு அப்பா, அம்மா இப்போ ஊருக்குப் போகிறாள் ?''

'' உனக்குத் தம்பி பிறக்கப் போகிறான். அதற்குத்தான் போகிறாள்.''

குமார் திருப்தி அடைந்து விட்டான்.

இருபத்தி மூன்றும் நம்பர் பஸ்ஸிலே இருவரும் ஏறினார்கள். புறப்படுவதற்கு நேரம் இருந்த படியினால் பஸ்ஸின் உள்ளே விளக்கு போடவில்லை.

'' அப்பா! நாளைக்கு என்னை யாரு குளிப்பாட்டுவா ?''

'' நான் குளிப்பாட்டறேன்.''

'' உனக்குக் குளிப்பாட்டத் தெரியுமா ?''

இதற்கு எப்படிப் பதில் சொல்வது ?

''நாளைக்குதான் பள்ளிக்கூடம் போகணும்.''

'' போயேன்...''

'' எனக்கு டிரஸ் பண்ணணுமே !''

'' பண்ணினால் போச்சு !''

''உனக்கு டிரஸ் பண்ணி விடத் தெரியுமோ, அப்பா?''

இதற்கு எப்படிப் பதில் சொல்வது?

குமாருக்கு எதுவும் புதுமையாக இருந்தது. அம்மாவை விட்டுப் பிரிந்த உலகமே புதுமையாகக் காட்சியளித்தது. அந்தப் புதிய உலகத்தை எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்ற பிரச்னைதான் அவன் முன்னே மலையாக நின்றது. ராமநாதன் சிந்தனையில் ஆழ்ந்தார். அவனுக்கும் அவளுக்கும் இடையில்தான் என்ன அன்பு! குமார் பிறந்தவுடனேயே தாயை விழுங்கியவன். ஊரார் வற்புறுத்தலினாலே கமலாவை மணந்து கொண்டார் ராமநாதன். சிற்றன்னை—கொடுமையான வார்த்தை இது என்று உலகம் கற்பித்த இலக்கணத்தை உடைத்தெறிந்தவள் கமலா!

'' அம்மா! அம்மா !'' குமார் அவளிடம் ஒட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்தவர்கள் கமலாவைச் சிற்றன்னை என்று சொல்ல மாட்டார்கள்.

பாசத்துடன் உள்ளம் கனிந்து அரவணைக்கும் கமலாவைப் பார்த்துவிட்டவர்கள் அவளைச் சிற்றன்னை என்று சொல்லவே மாட்டார்கள்.

குமாரின் உலகம் விரிந்தது. ஆனால் அந்த உலகம் முழுவதும் பரந்து நிற்பவள் அம்மா-கமலா! ராமநாதனுக்கு உள்ளக் களிப்பு தவிர வேறு என்ன வேண்டும்?



பஸ் புறப்பட்டு விட்டது!

"அப்பா, டிக்கட், டிக்கட்."

ராமநாதன் விழித்துக் கொண்டார்.

"பையனுக்கு என்ன வயசாகிறது?"

"அஞ்சு..."

"அவனுக்கும் டிக்கட் வாங்க வேண்டும்."

ஆமாம். அவனும் குடும்பத்திலே முக்கியமான டிக்கட்தான். கணவனும் மனைவியும் அன்பைச் சொரியும் பாண்டம் அவன்.

"அப்பா! நான் என் தம்பியோடு விளையாடலாமோ?"

"உம்! விளையாடலாம்."

உடனே எதிர்காலத்தை உருவாக்குவதிலே மூழ்ந்து விட்டான் குமார்.

கடந்த காலத்தைச் சிந்தித்துப் பார்த்தார் ராமநாதன். அவருடைய குடும்பத்தை நினைத்துப் பார்த்தால் இப்பொழுதும் அவருக்குப் பெருமை.

வேண்டா வெறுப்பாகத் தான் பெண் பார்க்கச் சென்றார் ராமநாதன் மாயவரத்துக்கு! ஆனால் கமலாவைப் பார்த்ததுமே அவருக்கு அவரையுமறியாமல் ஒரு பிடிப்பு ஏற்பட்டு விட்டது. அவளுக்கு மூன்று சகோதரர்கள். அவர்கள் ஒற்றுமையோடு ஒரு சந்தோஷமான குடும்பத்தை உருவாக்கியிருப்பது அவர் மனத்தை நிறைத்தது!

அவர் மாப்பிள்ளையாக வாய்த்ததன் அதிர்ஷ்டமோ என்னவோ? அந்த மூன்று சகோதரர்களுக்கும் நல்ல வேலை கிடைத்து விட்டது. எல்லோருக்கும் ராமநாதனிடத்தில் அபார மரியாதை!

"அப்பா! மயிலாப்பூர் வந்து விட்டது."

ராமநாதன் நினைவுக் குவியலிலிருந்து மீண்டார். இருவரும் மௌனமாக நடந்தனர்.

"குமார், நான் நாளைக்குப் போகும்போது பள்ளிக்கூடத்திலே விட்டுவிட்டுப் போகிறேன். சாயங்காலம் ஆபீஸிலிருந்து திரும்பி வரும்போது உன்னைப் பள்ளிக்கூடத்திலிருந்து அழைத்துக் கொண்டு வருகிறேன்."

"சரி, அப்பா!"

★

"அப்பா உனக்குக் குளிப்பாட்டவே தெரியவில்லையே. அம்மா முதுகை யெல்லாம் தேய்த்து விடுவாளே."

ராமநாதனுக்குச் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது!

"சரிதான்டா, நேரமாகி விட்டது..."

ஓட்டலிலிருந்து வந்திருந்த எடுப்புச் சாப்பாட்டைத் தாமும் போட்டுக் கொண்டு அவனுக்கும் போட்டார்.

"ஐய்ய! சாதம் போட்டுவிட்டு நெய் ஊத்தணும். அப்புறம்தான் குழம்பு!"

இப்படி எத்தனையோ நிமிஷத்துக்கு நிமிஷம் கமலா இருந்ததற்கும் அவள் இப்போது இல்லாததற்கும் உள்ள வித்தியாசத்தை முரசறைந்து கொண்டிருந்தான் குமார்.

★

அமாவாசையோடு அமாவாசைக்கு ஒரு மாதம் கழிந்து விட்டது. அன்றைக்கு ஞாயிற்றுக் கிழமை. 'கிணிங் கிணிங்' சத்தத்தைக் கேட்டு வாசலுக்கு வந்தார் ராமநாதன்.

"ஸார், தந்தி!"

"கமலாவுக்கு ஆண் குழந்தை. சௌக்கியம்." - தந்தியிலிருந்த வாசகம் இதுதான்.

"அப்பா, என்னப்பா?"

"உனக்குத் தம்பி பிறந்திருக்கிறானடா, குமார்" என்றார் மகிழ்ச்சியுடன்.

"தம்பி பிறந்திருக்கிறானா?"

ராமநாதனுக்கு மகிழ்ச்சி அதிகமா அல்லது குமாருக்கு அதிகமா என்று சொல்ல முடியாது! ஆனால் குமார்தான் அதை அதிகமாக வெளியே காண்பித்தவன்.

"அப்பா, எனக்கு நேற்றோடு லீவு விட்டாச்சே. மாயவரத்துக்குப் போகிறேனே!"

"போகலாம், போகலாம். எனக்கு லீவு கிடைக்க வேண்டாமா?" என்றார்.

மறு நாள் ராமநாதன் மானேஜரிடம் லீவு கேட்டுப் பார்த்தார். "கம்பெனியில் 'ஆடிட்' நடக்கப்போகிறது. இந்தச் சமயத்தில் எப்படி லீவு கொடுக்க முடியும்?" என்று சொல்லி விட்டார் மானேஜர்.

ஆனால் குமாரின் தொண தொணப்பு பொறுக்க முடியவில்லை. அவனைத் திங்கட்கிழமை இரவு ரயிலில் ஏற்றி விடுவதாகவும் ஸ்டேஷனுக்கு வந்து யாராவது அழைத்துக் கொண்டு போகும்படியும் தந்தி அடித்து விட்டார் ராமநாதன்.

மறுபடியும் ரயில்வே ஸ்டேஷன்!

"அப்பா! நீ எப்பப்பா அங்கே வருவே?"

"நான் லீவு கிடைத்தவுடனே அங்கே வந்து விடுவேன்."

"ஆரஞ்சு வாங்கித் தந்திருக்கிறாயே. தம்பிக்குக் கொடுத்துவிட்டு நானும் தின்பேன்."

"சரி, நீ இப்ப ஒண்ணு எடுத்துக்கோ."

"ஊஹூம். தம்பிக்கு, அம்மாக்கு எல்லோருக்கும் கொடுத்து விட்டுத்தான் நான் தின்பேன்" என்றான் குமார்.

"சமர்த்து...."

மணி அடித்து விட்டது.

"ஜாக்கிரதையாப்போடா குமார். பக்கத்திலே இருக்கிறவர் கிட்டே சொல்லி யிருக்கிறேன். அவரும் மாயவரம்தான்போகிறார்."

"சரி, அப்பா சீக்கிரம் வந்துவிடு."

ரயில் நகர்ந்தது!

ராமநாதன் மெதுவாக நடந்தார்.

எதிரே சுந்தரம் வந்தார். அவர் எதிர் வீட்டில் இருப்பவர். ரயில்வே இன்ஸ்பெக்டர்.

"என்ன ஸார், எங்கே இப்படி?"

"ஒண்ணுமில்லே. குமாருக்குத் தம்பி பிறந்திருக்கிறான்."

"ஓஹோ!...இனிமேல் அவன் பாடு திண்டாட்டம்தான்!"

ராமநாதன் திடுக்கிட்டார். "என்ன சொல்கிறீர்கள்?"

"ஆமாம். தனக்கென்று ஒன்று பிறந்து விட்டால்....அது சரி, நீங்கள் ஏன் ஊருக்குப் போகவில்லை?"

"இல்லை. ஆபீஸில் லீவு கொடுக்கவில்லை. சரி, நான் போய்விட்டு வருகிறேன். பஸ் அப்புறம் கிடைக்காது!"

ராமநாதன் ஸ்டேஷனுக்கு வெளியே வேகமாக வந்தார்.

அழகான கண்ணாடியிலே ஒரு கீறல். "தனக்கென்று பிறந்து விட்டால்..." என்ற சுந்தரத்தின் சொற்கள் காதிலே பேரிரைச்சல் செய்துகொண்டிருந்தன. தன்னை யறியாமல் நினைவு சுழன்றது.

"சீ, கமலா அவ்வளவு மோசமானவளா? அவளுக்குத்தான் என்ன அன்பு? நான் அடித்தால்கூட ஓடி வந்து தடுத்து என்னையே கோபிக்கின்ற அவளா குமாரை நன்றாகப் பார்த்துக் கொள்ள மாட்டாள்? இதெல்லாம் வீண் சந்தேகம்! குமார் என்றைக்குமே அவள் அன்புக்குப் பாத்திரமானவன்தான்!"

"இல்லை, இல்லை. தனக்கென்று பிறந்து விட்டால்..."

பிள்ளையை ஸ்டேஷனிலே விட்டு விட்டு வந்தவர் மனச் சுமையை ஏற்றிக் கொண்டு பஸ்ஸில் ஏறினார்.

"அவள் இல்லாமல் குமார் எப்படித் தவித்தான்? அவளும் போகும்போது பிரிய முடியாமல்தானே பிரிந்தாள்? அவள் எழுந்ததும் அவனை அக்கறையாக எழுப்பிப் பல் தேய்த்து விட்டு, அவனைக் குளிப்பாட்டி...."

"இல்லை. தனக்கென்று பிறந்துவிட்டால்!"

சிந்தனை அதிகமாகக் கற்பனை செய்தது.

"அம்மா எனக்குப் பல்தேய்த்துவிடும்மா!"

"போடா போ, வயசு ஆச்சு, இன்னும் பல் தேய்க்கத் தெரியவில்லை, போடா! குழந்தைக்கு எண்ணெய் தேய்க்கணும், நேரமாகி விட்டது!"

"அம்மா! பள்ளிக்கூடத்துக்கு நாழியா யிடுத்தே, சட்டை எடுத்துக் கொடு அம்மா!"

"அப்பா என்னடா செய்கிறார்? அவரை எடுத்துக் கொடுக்கச் சொல்லு. குழந்தைக்குப் பால் புகட்ட வேணும், எதற்கெடுத்தாலும் என்னைக் கூப்பிட்டு எதற்காகப் பிராணனை வாங்குகிறாய்?"

-ராமநாதன் மண்டையைப் பிடித்துக் கொண்டார். எப்போது ஒன்றைப் பற்றி எண்ணக் கூடாது என்று நினைக்கிறோமோ, அப்போதுதான் அதைப் பற்றியே அதிகமாக மனம் எண்ணும். அதுவும் சந்தேகம்தான் உலகத்திலேயே கொடிய கிருமி. வெகு வேகமாகக் கிளைவிட்டு வேர் பிடித்துப் பரவிவிடும்.

மயிலாப்பூரிலே இறங்கியவர் எதிரே இருந்த கபாலி கோயிலைப் பார்த்தார். அவரும், கமலாவும், குமாரும் வெள்ளிக்கிழமை தவறாமல் அந்தக் கோயிலுக்குச் செல்வார்கள்.

"அம்மா, அப்பா கோயிலுக்குப் போகக் கூப்பிடுகிறார்!"

"சரி, சரி! நீ இங்கேயே வீட்டைப் பார்த்துக்கோ. நாங்கள் போய்விட்டு வருகிறோம்!"

ராமநாதனுக்கு இந்தக் காட்சிகளை யெல்லாம் நினைத்துப் பார்க்கப் பார்க்க மனத்திலே வேதனை அதிகமாயிற்று. வயிறு சங்கடம் செய்தது.

அன்று இரவு அவருக்குத் தூக்கம் வந்தால் தானே? வாழ்வே அஸ்தமித்தது போல வேதனை. ஏக்கம் பொங்கும் கண்களுடன் குமார் தன்னையே பார்ப்பதாகப் பிரமை.

★

மறு நாள். ராமநாதனுக்கு இருப்பே கொள்ளவில்லை. குமாரை அங்கே யாராவது லட்சியம் செய்கிறார்களோ இல்லையோ என்ற சந்தேகம். அப்போதே அங்கே போய்ப் பார்த்துவிட வேண்டும் போல வேகம். நேரே மானேஜரிடம் ஓடினார் ராமநாதன்.

"ஸார்! என் மனைவிக்கு உடம்பு சரியில்லை என்று தந்தி வந்திருக்கிறது. இன்றைக்குக்



கரூர் கல்கி ஏஜண்ட் திரு வீரராகவன் புதல்வி சௌ விசாலக்ஷ்மிக்கும் ராசிபுரம் சுகாதார இன்ஸ்பெக்டர் திரு எம். குருசாமிக்கும் கரூரில் சென்ற மாதம் திருமணம் வெகுசிறப்பாக நடந்தேறியது.

கிளம்பிப் போய் நாளைக்கு மறுநாள் திரும்பி வந்து விடுகிறேன் சார்! நாளை மட்டும் லீவு கொடுங்கள்!''

ராமநாதனின் கண்கள் கலங்கி யிருந்தன.

''சரி, நாளைக்கு மட்டும்தான் லீவு!'' என்று சொன்னார் மானேஜர்.

★

ரயில் முழக்கமிட்டுப் புறப்பட்டது. மூகவாய்க் கட்டையில் முகத்தை வைத்தபடி உட்கார்ந்திருந்தார் ராமநாதன்!

அந்த நாளிலே என்னவெல்லாம் மனம் நினைத்து விட்டது.

''அங்கே குமார் தன்னைக் கவனிக்க யாரும் இல்லாமல் ஏங்குவான். சோறுகூடக் கேட்டுப் போடுகிறார்களோ இல்லையோ. அவள் ஏன் இவனைக் கவனிக்கப் போகிறாள்? தனக்கென்று பிறந்து விட்டாள்!''

''இருக்கட்டும், இருக்கட்டும். அங்கே போய்ப் பார்த்தால் எல்லாம் தெரிகிறது. நான் அங்கே சென்றவுடன் எல்லோரும், ஏன், அவள்கூடத்தான் அவனைக் கவனித்துக் கொள்வது போல் நாடகம் நடிப்பார்கள். ஏமாந்து விடக் கூடாது!''

மனம் எவ்வளவு சீக்கிரத்தில் இப்படி மாறிப் போய் விட்டது!

★

ராமநாதன் ரயிலடியை விட்டு மனத்தில் பலவித எண்ணங்கள் சுழல, அடி மேல் அடி வைத்துத் தம்முடைய மாமனார் வீட்டை யடைந்தார்.

'' வாருங்கள், வாருங்கள் !''

கமலாவின் தம்பிதான் முதன் முதலில் ராமநாதனை வரவேற்றான். ''அப்பா!'' என்று கத்திக் கொண்டே குமார் ஓடி வந்தான். 'அவன் முகத்தில் ஏக்கத்தின் பிரதிபலிப்பு இருக்கிறதா?' என்று கூர்ந்து கவனித்தார் ராமநாதன். அப்படி ஒன்றும் காணேமே !

''குமார்தான் குழந்தைக்குக் காவல். குழந்தையை விட்டு ஒரு நிமிஷம் கூடப் பிரியமாட்டேன் என்கிறான்'' என்றான் கமலாவின் அண்ணா ராமநாதனிடம்.

''அப்படியா!'' என்று வலியச் சிரிப்பை வரவழைத்துக் கொண்டார். ஆனால் அவர் வந்திருந்ததோ வேறு காரணத்துக்காக; குமாரிடம் கமலாவுக்கு அன்பு அவ்வளவு இல்லை, அவனை அவள் அலட்சியப் படுத்துகிறாள் என்பது தெரிந்தவுடன் அவனை அழைத்துக் கொண்டு அடுத்தகணம் ரயில் ஏறி விடவேண்டும் என்ற எண்ணத்துடன்.

''அப்பா! தம்பி என்னைப் பார்த்துச் சிரிக்கிறான். அம்மாவுக்கு நான் ஆரஞ்சு கொடுத்தேன் அப்பா. அப்புறம் நானும் அதைச் சாப்பிட்டேன்!''

''ஓஹோ!''

''அந்த அறையில்தான் கமலா இருக்கிறாள்'' என்றான் கமலாவின் தமையன்.

''அப்படியா!'' என்று சொல்லி விட்டு அந்த அறைக்குச் சென்றார் ராமநாதன்.

''வாருங்கள்!'' என்றாள் கமலா ஈனஸ்வரத்திலே. ராமநாதனுக்கு ஏனோ சிரிப்பு வரவில்லை. குழந்தை சின்னஞ் சிறியதாக அழகாகக் கவலையற்றுக் கமலாவின் பக்கத்திலே படுத்திருந்தது.

குமார் உள்ளே வந்தான்.

''அம்மா, இந்தா அம்மா துணி. குழந்தைக்குப் போடத் துணி வேண்டும் என்றாயே!''

''இங்கே கொண்டு வா, என் செல்லம்!'' என்று குமாரை இழுத்து ஒரு முத்தம்கொடுத்தாள் கமலா. என்ன நாடகம் என்று மனத்திலே கறுமினார் ராமநாதன்.

''என்ன, கொஞ்சலெல்லாம் பலமாயிருக்கு!''

'அதுவா!' என்று கமலா ஈனஸ்வரத்திலே சிரித்தாள்.

''இதுவரை குமாரிடம் அன்பு பாராட்டியதற்கும் இப்போது இருப்பதற்கும் வித்தியாசம் உண்டு.''

''என்ன?''

''இப்போது நான் ஒரு தாய். குமாரைக் குழந்தையாக வளர்க்கும் பாக்கியம் பெற்றபோது தாய்மையைச் சிறிது உணர்ந்தேன். எனக்கென்று ஒன்று பிறந்தவுடன்...''

''பிறந்தவுடன்...?''

'' தாய்மையை இப்போது பூரணமாகப் பெற்று விட்டேன். குமாரை இனிமேல் இன்னும் அதிகமான பரிபூரணமான தாய்ப் பாசத்துடன் வளர்ப்பேன் என்ற சந்தோஷம் தான் எனக்கு இப்போது அதிகமாயிருக்கிறது!'' என்று கூறிவிட்டுக் குமாரைத் தன்னிடம் அணைத்துக் கொண்டாள் கமலா.

''கமலா!'' என்று கூவினார் ராமநாதன்.

''தனக்கென்று பிறந்து விட்டாள்....'' என்று அவர் நினைத்து அடைந்த கவலைக்கும், கமலா நினைத்து களிப்புக் கொண்டதற்கும் தான் என்ன வித்தியாசம்?

தாய்மையின் சிறப்பைப் பற்றிப் பூரணமாக உணர்ந்து விட்டார்.

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10
for the Proprietors Messrs Bharathan Publications Private Limited
Managing Editor: T. Sadasivam.


பாருங்கள்!
ஒரு அரை வில்லை ஸன்லைட் தான்
இவ்வளவு சலவையும் செய்து
முடித்தது!
அதன் அதிகப்படியான நுரையே
இதை நிறைவேற்றியது!
SUNLIGHT SOAP
பளிச்சென்று வெண்மையாக
வெளுப்பது ஸன்லைட் சோப்
S. 248-50 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



HBT. 2-50TM